கந்தருவ கானம்

திருலோக சீதாராம்



கலைஞன் பதிப்பகம்,
தியாகராய நகர்,
சென்னை-17.

கந்தருவ கானம்

திருலோக சீதாராம்



விலை: ரூபாய் மூன்று.

முதற்பதிப்பு: மார்ச் '67.

அச்சிட்டோர்:
சிவாஜி நியூஸ் பிரிண்டர்ஸ்,
திருச்சி-2.

பதிப்புரை

எழுச்சியின் ஊற்றுப்பெருக்காக, கவிஞர் திருலோக சீதாராம் அவர்கள் 'கந்தருவகான'த்தைக் கணீர் என்ற குரலில் பாடக்கேட்டவர்கள் தேன் உண்ணும் வண்டா வார்கள். இதைப் புத்தகமாக வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகிறேன். தமிழுக்கு இது ஓர் ஆணிமுத்து.

இயற்கையினிடத்து எல்லையற்ற காதலையும், இதய நெகிழ்ச்சியையும், வாழ்க்கை நிலைகளைக் கலையுணர்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் மனத்தையும் அவருடைய கவிதைகள் வாரி வழங்குகின்றன.

-ஒரு சில வீச்சுகளில், (flashes) மந்திரசக்திவாய்ந்த வர்ணஜாலங்களைக் காட்டிவிடுகிறார். இந்தக் கோமளமான காட்சிகள் உயிர்த்துடிப்புடன், தாளகதியின் நாதஒலியோடு ஆன்ம பிரகாசத்துடன் மிளிரக் காண்கிறோம்.

நித்தநித்தம், பார்த்துப் பார்த்து அலுத்த மனநிலையி லிருந்து, உணர்வுகளை உயரக்கிளப்பி கந்தர்வலோகத்தில் இருப்பதுபோன்ற பரவசநிலையில் ஆழ்த்திவிடுகிறது.

கவிஞரின் இதய ஒலியை தமிழகம் விரும்பி வரவேற்கும் என நம்புகிறேன்.

மாசிலாமணி,

சென்னை-17. கலைஞன் பதிப்பகம்,

ஆசார வாசல்

சீர் அவிரும் சுடர்மினெடு வானத்துத் திங்களையும் சமைத்தே ஓர் அழகாக விழுங்கிடும் உள்ளமும், அங்ஙனம் உண்டதைக் கவிதைக் கனலாக உமிழும் வல்லபமும் படைத்த ஒருவர்தம் அரிய படைப்புக்களைச் சுமந்து எழிலோடு இலங்கும் இத் தொகைநூலுக்கு அணிந்துரை சூட்டி அலங்கரித்து மகிழும் பணி எனக்குக் கிட்டியிருக்கிறது.

தமிழ்க் கவியுலகில் தமக்கேயுரிய ஒரு தனியிடம் பெற்றுத் திகழ்பவர் திருலோக சீதாராம். கால்நூற்றாண்டுக்கு மேலாக அவருடைய கவிப்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்துள்ள எண்ணற்ற ரசிகர்களின் ஆவல் இந்தத் தொகை நூல் வெளியாவதன் மூலம் ஒருவாறு நிறைவேறுகிறது. பொதுவாக அனைவரும் புரிந்து கொண்டிருக்கிற முறையில் நான் ஒரு 'எழுத்தாளனாகவோ, திறனாய்வாளனாகவோ' இல்லாமல் கவிதையின் மீது பிரேமை கொண்டுள்ள ஒரு ரசிகன் என்ற நம்பிக்கையிலேதான் அணிந்துரை கூறும் வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று கொள்ளுகிறேன். தமது 'இலக்கியப்படகு' கட்டுரைகள் ஒன்றில் கவிஞர் கூறியுள்ள வாசகங்கள் ஈண்டு குறிப்பிடத் தக்கனவாகும்.

"ஒரு கவிஞன் தனது கவிதையின் மூலத்தையே நமக்கு உணர்த்திவிட முடியுமா என்பது சந்தேகம். ஏனெனில்

கவிதையில், கவிஞன் நமக்கு வழங்குவதெல்லாம் சிருஷ்டி பரவசத்தின் கணநேரக் களிமயக்கில், தனது உள்ளொளியில் அவன் கண்ட திருக்காட்சியின் தித்திப்பைப்பற்றிய சேதியே தவிர, அந்தக் காட்சியையே அவன் நமக்கு வழங்கிவிடுவதில்லை. ஏனெனில் அது அவனுக்கே மறந்துவிட்ட ஒரு கனவு. எனவே, கவியின் மூலஸ்தானத்தை ஒரு விமர்சகன் போய் எட்டிப் பார்த்துவிடமுடியும் என்பது நடவாத காரியம்.''

முன்பொரு பாடல் எழுதினேன்—அந்த
மூலப்பிரதிகைவசம் இல்லை

என்ற நம் கவிஞரின் பாடல் படைப்புத் தொழிலின் ஆற்றலையும் அதன் அந்தரங்கத் திகைப்பின் வேதனையையும் ஒருங்கே பேசுகிறது.

பிளேட்டோ என்ற ஞானி கூறுகிறார்: ''கவிஞர்கள் தாங்களே அறிந்துகொண்டுவிட வியலாத மகத்தான பரம ஞானங்களைப் பேசிவிடுகிறார்கள்'' என்று. பிரான்ஸிஸ் தாம்ஸனோ ''கவிஞர்களாகிய நாம் எங்கிருந்து எவ்வாறு சிவிறியடிக்கிறது என்று நாமே உணர வியலாத சத்தியங்களை யல்லவா வெளியிட்டு விடுகிறோம்'' என்று தன் வியப்புக் காட்டுகிறார்.

பிரபஞ்சத்தைக் காட்டிலும் அதிசயமான படைப்பு உண்டா? ஆயினும் படைப்புக் கடவுளாகிய பிரம்மன் படைப்புத் தத்துவத்தை உணர்ந்துரைக்கக் கூடாமையினாலே, அந்த அறியாமைக்குப் பரிசாக மோதிர விரலால் குட்டுப்பட்ட கதை இந்த மண்ணில் வழங்கிவருகிறதே!

படைப்பை ஆராய்வதைக் காட்டிலும் அனுபவிப்பதொன்றே இன்பம். கவிதையிலே கவிதைதான் இருக்கும். ரஸனை என்பதோ ரசிக உள்ளத்தில் இருப்பது. 'உன்னிடம் கவிதையில்லையென்றால் நீ எங்குமே கவிதையைக் காண வியலாது' என்பது நம் கவிஞரின் கூற்று. (Joubert)

ஜோபர்ட் என்பவன் 'You will find poetry nowhere unless you bring some with you'' என்று கூறியிருக்கிருன்.

பர வெளியில் பறந்தும், மனக்கடலில் முக்குளித்தும் வருகின்ற சித்த புருஷர் நம் கவிஞர். அவர் நமக்குத் தெரிவிக்கின்ற செய்தியின் சாரம்—கவிதை என்பது ஆத்மாவின் சாளரம் என்பதுதான், ப்ராண, ப்ர ஞ் ஞை நிலைகளைக் கடந்து ஆத்ம லயத்தில் ஆழ்ந்திருக்கும் இவர், பாழையும் ஊழையும் பண்ணில் பிசைந்து தந்திருக்கிருர். காலமெல்லாம் கவிந்து நிற்கும் அந்த திவ்ய கோலத்தை பல்வேறு கோணங்களில் நின்று பற்றி வாங்கி இதமுறு இன்பரசங்களாக வடித்து நமக்கு வழங்குவதே இவர் தொழில். இத்தகைய பரமஞான சித்தியாருடைய மோனத் தாபங்களைச் சொற் திவலைகள் மூலம் நமக்கு உணர்த்துவதே இந் நன்னூலின் நோக்கம்.

நல்ல கவிதை உணர்ச்சியின் கொடுமுடியில் முகிழ்க்கின்றது என்பது சாதாரண உண்மை. ஆனுல் ஒப்புயர்வற்ற கவிதை என்பது உணர்ச்சியின் விளிம்பிற்கு அப்பால் உள்ள பொருள்களையும் பூர்ணமாக ஈர்த்து வாங்கி சொற்களில் தேக்கி வைத்தலாகும். அதாவது, சொற்களில் சிக்காப் பொருள்களை, சொற்களில் சிமிழ்ப்புற வைத்தலே கவிதையின் சாகஸம். இந்தச் சாகஸம் நம் கவிஞரின் பிறப்புரிமை. ஆகவே அவருடைய ஒவ்வொரு அக்ஷரமும் பீஜாக்ஷரம்; ஒவ்வொரு வாக்கியமும் மகா வாக்கியம்.

இருபதாம் நூற்ருண்டில் தோன்றிய கவிஞர்களில் அனேகமாக அனைவருமே பாரதியின் கவிதை ஒளியில் கரைந்து போனவரே. ஆனுல் நம் கவிஞரோ என்ருல் பாரதியில் கரைந்துபோய் விடாமல் அவனை அப்படியே முழுமையாக வாங்கி, அதில் தன்னிறைவு பெய்து ஒரு மகா முழுமையாம் தனிக் கவிதையைப் படைக்கிருர். எடுத்துக் காட்டாக ஒரு நறுக்கு.

'' கானில் வெயில்மழை காலம் பல கண்ட
கட்டை இரண்டினை ஏன் கடைந்தாய்?

தேனழல் சிந்திச் சிரித்தபின் னேஉயிர்த்
தேசில் கனிந்து திளைத்திடத்தான்."

"தேனழ"லும் "உயிர்தேசு"ம் பாரதியை நினைவு கூரலாம் ஆனால் அவை பாரதி அல்ல.

கவிஞன் என்பவன் ஒரு தத்துவதரிசி. நம் கவிஞருடைய சொற்கள் கொண்டே இதை விளக்க வேண்டுமென்றால், "கதுவும் மோனக் கற்பனையின் பொருள் கண்டு முயங்குபவன்" எவனோ, அவனே கவிஞன் ஆவான். அதாவது, சராசரி வாழ்க்கையின் நிகழ்ச்சி ஒவ்வொன்றின் பின்னாலும் உருக்கரந்து நிற்கின்ற ஒன்றின்மேல் ஒளிபெய்து அதைக் காட்சிப் பொருளாக ஆக்கித் தருதலே கவிஞன் பணி ஆகிறது.

" வந்து சுழலும் ஆண்டுகளை
வாங்கிப் பிடித்து விளையாடிப்
பிந்தி வீசி எறிந்திட்டுப்
பிறிதோர் ஆண்டு விழைகின்றோம்"

என்பதில், புத்தாண்டின் புறத்தே புதிர் விளங்காத் தத்துவமாய் இருக்கின்ற ஒன்றின் இனம் விளங்குதலைக் காண்கின்றோம். அடுத்து வருகின்ற வரிகளில் காலமென்ற பெரும் தத்துவம் தன் மயலை உதிர்த்துவிட்டு தெளிவுப் பொருளாக மாறிவிடுகின்ற விச்சையைப் பார்க்கின்றோம்.

" மனித மனத்தின் கரையோரம்
மடங்கி வீழும் அலைகளெனும்
நினைவில் விளைந்த நெடு மூச்சே
நிமிரும் காலம் என்கின்ற

கனவிற் பட்டுச் சிதறுவதாம்
கணங் கணமாகத் திரைப்பது வாம்
எனவே புத்தாண் டேதெனினும்
இன்ப உயிரின் ஏற்றமடா!"

ஆக, காலம் என்பது மனித மனத்தின் கரையோரம் மடங்கி வீழும் அலைகளாகிற நினைவில் விளைந்த நெடுமூச்சு

என்பது நமக்கு தர்சனமாகிவிட்டது. ஒரு யுகத்தின் செய்கைகள், கருத்துக்கள், ஆசாபாசங்கள் அனைத்துமே ஒரு நெடுமூச்சின் விம்மலில் அடக்கம் என்பதும் தெளிவாகின்றது.

'கந்தருவ கானம்' என்ற மகுடம் தாங்கியதொரு சிறு காப்பியம் இக்கவிதைத் தொகுப்பை வனப்புறச் செய்கிறது. இதில் காப்பியக் கதாநாயகன், ஒரு வாழ்வின் புதை பொருளை எங்கு தேடுகிறான் என்பதை நமக்குக் காட்டுவதற்காக எழுகின்ற கவிக்குரல் கேளுங்கள்.

"... நின்று நெடு மூச்சில்
நீளத் துழாவலுற்றான்..."

இந்த நம்பிக்கேற்ற நங்கையாம் கதாநாயகியும் தன்பால் நம்பி வந்தணைந்த செம்மலிடம் செப்புகிறாள்:

"உன்றன் விம்மு நெடு மூச்சின்
கீற்றினிழை யொன்றைக் கிழித்தேன்"

என்று. ஆகவே நெடுமூச்சில் மனிதகுலத் தாபங்களும் எல்லை பிரிவற்றதாய் ஏகமாய் விரியும் வளிப்பெரு வெளியில் பிரபஞ்ச தத்துவங்களும் தேக்கப்பட்டிருக்கும் உண்மை இங்கே கட்டவிழ்க்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம்,

உண்மைகளை அறிய வேண்டுமானால் அழகையும் அறிவையும் உபாசித்தல் வேண்டும் என்பது பெரியோர்கள் கண்டுணர்ந்த அநுபவம். ஆனால் சிருஷ்டியின் ஆதார உண்மைகளைக் கண்டுகொள்ள அறிவுத்திரை ,அழகுத் திரைகளையும்கூட கிழித்தெறியவேண்டும் என்பது நம் கவிஞருக்கு கைவந்த அநுபூதி. அதாவது, புல இன்பங்களின் தொகுப்பை (உணர்ச்சியை) திரோதானம் செய்யாத வரையில் உணர்வுப் பொருள் (ஆத்ம வஸ்து) விளங்காது. ஆகவே, பேரானந்தம் பெறவும், அதைப் பிறருக்கு வழங்கவும் வந்த நம் கவிஞர் சிந்தனை செம்பஞ்சணையில் உயிர்ப் போதம் புணருகின்ற ஜிதேந்திரியராக மாறிவிடுகிறார்.

"காட்சி அடங்கிக் கருத்தடங்கி செவி
காணும் கவிதையும் தான் மடங்கி
ஆட்சிக் கடங்கிய ஆகத் துணர்வுகள்
அத்தனைக்கும் மேல் ஓர் ஆனந்தமே."

நம் கவிஞரைப் பிறநாட்டு மேதைகளுடன் ஒப்பிட்டுக் காட்டல் வேண்டும் என்பது நம் கருத்தன்று. ஆனாலும் பெருங் கவிஞர்களின் கவி - ஹ்ருதயங்களின் ஒருமைப்பாடு நம்மை மெய்சிலிர்க்கச் செய்கின்றன.

"ஒளியின் பிள்ளைகள்" என்று நம் கவிஞர் படைத்த சொற்கள் 'poetic conceit' என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. இதையே ஃபாரன்ஸிஸ் தாம்ஸன் "the children of light" என்று பேசியிருக்கிறான் என்பதைக் காண்கின்ற போது உள்ளம் கிளுகிளுக்கிறது.

கவிஞன் என்பவன்,

" சுட்டு விரலாய்ச் சுடரெழ வானைத்
துழாவும் கோபுரத் தூபியில் பாய்வான்"

என்று இவர் பேசுகிறார். ஃப்ரான்ஸிஸ் தாம்ஸனோ, "You wandering psalterist of the sky" என்று பேசுகிறான்.

"எல்லை வெளியில் எடுத்துக் கட்டிய
எழிலார் வியப்பின் இன்ப விதானமும்"

என்பது நம் கவிஞரின் வாக்கு.

"The utmost aery traceried pinnacle
So, it is builded, the high tenement"

என்பது ஃப்ரான்ஸிஸ் தாம்ஸன் வாக்கு.

"தேனமுல் சிந்திச் சிரித்த பின்னேயுயிர்த்
தேசில் கனிந்து திளைத்திடத்தான்"

என்று நம் கவிஞர் குரல் கொடுக்கிறார்.

"Its jocund spilth of fire, its
honey of wild flame"

என்பது ஃப்ரான்ஸிஸ் தாம்ஸனின் குரல்.

"ஆழி கரையின்றி நிற்கும் அதிசயம்
ஆண்டவன் கட்டளை ஆகுமன்றோ!"

என்பது நம் கவிஞர் தரும் காட்சி.

The sea ... follows eternal laws
which are imposed by a higher power"

என்பது W. Humboldt என்பவரின் கூற்று.

"ஓஹோ! உலகை ஊதி நிறைத்தவன், உடைமைகள் யாவும் உடன்கொண்டு சென்ருன்" என்பது நம் கவிஞர் திருவாக்கு.

"God breathes you forth as a bubble
And shall suck you back into His mouth"

என்பது ஓர் ஆங்கிலக் கவிவாணன் வாக்கு.

சிலைவடிவில் ஆதவனைக்கண்ட நம் கவிஞர்

"எண்ணரிய வெழிற்சிலையில்
எங்கள் குடியானுய்
மண்ணக விருள்கெட
மணந்த மணவாளா!"

என்று சொல்லிப் பரவுகிருர். Broome என்னும் பெரியோன் ஞாயிற்றைப் போற்றுவதைப் பாருங்கள்.

"As a giant strong, a bride-groom gay
The sun comes through the gates of day"

இதையே,

"Thou to thy spousal universe art husband"

என்று மற்ருெருர் ஆங்கிலப் பாவாணன் பாடுகிருன்!

"...உடையவர்" என்ற நம் கவிஞரின் படைப்பின் முற்பகுதிதான் டி. எஸ். எலியட்டின் "வேஸ்ட் லாண்ட்," தயவால் இந்தச் சேதியை சொல்லிவைத்தோம். விரித்தெழுத வாய்ப்பற்ற நிலையில் கவ்வும் கருத்தொற்றுமைகள் சில பற்றியே பேசுவோம்.

நம் கவிஞர்

"இருள் எனக் காணுகின்ற இன்மையோ
ஒளிப் பெருக்காய்
இருப்பது சொல்லி வைத்தேன்"

என்கிறார்.

"So, the darkness shall be light"

என்று பறை கொட்டுகிறான் எலியட்.

"ஆதியின் முன்னம், யாரும் அறிந்திடா உண்மை, ஏதோ
தேதியிற் களித்தேன் அந்தச் சேதியை
உமக்கும் சொல்வேன்"

என்று நம் கவிஞர் குறிப்பிடுகின்றார்.

எலியட்டோ,

"Before the beginning ...

"You say I am repeating something I have said before
I shall say it again ..."

என்று குறிப்பிடுகிறான்.

வெளியில் நிலவு வெருட்ட இருள் நம் கவிஞர் மடியில் வந்து விழுகிறது.

"பழகியிருந்த பழைய இருளில் புதிய இருள் கூடுகிறது"
என்று நம் கவிஞர் பேசுகிறார்.

இதை எலியட்

"With a movement of darkness on darkness"

டி. எஸ். எலியட், இஸ்ரா பௌண்ட் (Ezra Pound), அரவிந்தர் ஆகியோர் போல நம் கவிஞர் ஒரு mystic கவிஞர் ஆவார். இவர் தம் கவிதா சக்தி மோனத்தை சையோகித்து உபநிடத உண்மைகளைச் சூல்கொள்ளுகின்றது. "நிழல் ஒளி

என்றவிரு நெடிய கடிவாளம்'', "இருள் எனக் காணுகின்ற இன்மையோ ஒளிப் பெருக்கு'' என்று இவர் கூறு முண்மைகள் வேத உண்மைகள். இவ் வேத உண்மைகளை புதிய மொழியில் வெளியிடுதல் இவர்தம் சிறப்பு.

பாரதியின் குயில் மின்னற் சுவையையும் உண்டு கொழிக்கிறது. நம் கவிஞரின் குருவிக்கு உணவு, அன்பும், தயையும், கருணையும் ஆம். புன்புலால் மானுட வாழ்வின் நீசச் சிறுமையை அது கொத்திக் குதறி சின்ன பின்னமாக்குகிறது. தீயவே பயக்கும் தீய உள்ளத்திலும் தூய்மையை இட்டு நிரப்புகிறது.

"கட்டியணைத் தலகால் சிறகால்
சிறுகால் விரலால்'' என்று காக்கையின் அரவணைப்பைப்பற்றிய நம் கவிஞருடைய வர்ணனையில், சொற்களின் துல்லிய ரஸவோட்டம் கவிதையின் ஸ்படிகமாக ஒளிர்கின்றது.

முடிவிலே ஒரு சொல். ஈறு நிற்கும்உண்மையை ஏந்தி நிற்கும் நம் கவிஞரின் சொற்கள் கவிதையின் மூல விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்கின்றன, சத்தியத்தின் சௌந்தர்யத்தை நம் கவிஞரின் சொற்கள் சுடர் காட்டுகின்ற இடம் கவிதைக் கோயிலின் கோபுர கலசம்.

ஆசாரவாசல் நம்மை அழைக்கின்றது. தேரடியில் நின்று தரிசித்தால் போதாது.

T. N. ராமச்சந்திரன்,
10—3—67. தஞ்சை.

நேரில் பாடிக்காட்டுவதிலும் கேட்பதிலும்தான் கவியின்பம் முழுமைபெறுகிறது என்ற நம்பிக்கையுடையவன் நான். அச்சிட்டு நூலாக வெளியிடுவதில் அவ்வளவு ஊக்கம் எனக்கு ஏற்பட்டதில்லை. என்னையும் மீறி இந்த நூல் வெளியாகிறது. கலைஞன் பதிப்பக உரிமையாளர் திரு, மாசிலாமணிக்கு என் வாழ்த்துக்கள்.

—திருலோக சீதாராம்.

கந்தருவகானம்

காப்பு

உணர்வி லெழுமின்ப ஊற்ருய்க் கனிந்து
தணலாய் மலர்ந்த தவிசிற்-குணங்கள்
கலந்து ரஸவாத கந்தருவ கானம்
புலரப் பணித்தாள் புகல்.

1

புலரி

பொழுது புலர்ந்தது பொதியை முடியிற்
கீற்றுப் பிறையாய்க் கிடந்த சுனையின்
கீழே மூலை மலைக்குகை பிளந்த
பேழ்வாய் எயிற்றுப் பிறங்கிய புனலும்
தொழுது வணங்கித் தோய்ந்தது மண்ணில்

புறப்பாடு

காரகில் சந்தனக் கட்டை எரித்துக்
காலையுணவு கறிசமைக் கின்றார்
வேட்டுவ மகளிர்; வேதியர் ஓதும்
வேள்விக் கீதம் போலத் தமிழில்
பாட்டுப் பாடிப் பக்குவம் செய்த
பன்றியும் முயலும் பழங்கறி மீனைத்
தீய்த்ததும் கொம்புத் தேனில் அளைந்த
மேட்டுத் தினையில் விரவிய பொடியும்
கமுகின் பாளைக் காடியும் பருகிக்
காட்டுத் திசையிற் கச்சை இறுக்கிப்
பொய்யா மொழியாய்ப் போய்க்குறிக் கொள்ளும்

அம்புகள் ஆயிரம் அடங்கித் துயிலும்
தூணியும் வில்லும் தோய்த்த கூர்முனை
வாளும் நஞ்சில் வடித்தவெவ் வேலும்
வீசி நடந்தார் வேட்டைக் களத்தில்.

செய்தி

வேட்டுவர் தம்மில் விடலை ஒருவன்
'அண்ணே, வெள்ளென அடுத்த வனத்துத்
திண்ணன் வந்த செய்தியைக் கேட்டி,
மன்னர் மன்னன் மண்டலம் ஆளும்
அன்னவன் மைந்தன் அரசிளங் குமரன்
வடபால் நமது வனத்தில் வேட்டை
ஆட விரும்பி அனுப்பிய தூதாம்!
நாமும் நமது மன்னன் படையில்
நாடி யிணைந்து நாட்டுக் கிறைவன்
தன்னரும் பிள்ளை தயவைப் பெறுவோம்.'

எழுச்சி

என்றதும் வேட்டுவர் ஏ, ஏ, யென்றார்
'நன்றரோ நன்று நமக்கிங் கின்று
நல்ல திருநாள் நம்முடை யரசன்
வேட்டைக் கெழுந்த விழவிற் கூடி
ஆடி விருந்தை அயர்வோம்! சரி, சரி
வேலா வில்லில் நாணைப் பூட்டு
வேட்டைநாய் ஏழும் வெருட்டு முதலில்
வேட்டுவர் நாமும் வேந்தர்க் கடிமை
நாட்டுதும் புகழே நம்மிறை வந்தான்
காட்டைக் கலக்கி யடிப்போம் கணைகள்

தொடுவோம் மழையாய்ச் சொரிவோம் திமிதிம்'
என்று முழக்கி யெழுந்தனர் வேடர்.

வேட்டை

நாணை யிழுத்து நன்று குனித்த
வில்லிற் கணைகள் விரைந்தன, வேல்கள்
சென்றன, திசைகள் சிரித்தன, பொதியை
வேட்டைச் சாரர் வேந்துச் சிங்கமும்
வேழமும் மானும் வேங்கையும் முயலும்
ஊழிநாள் வந்திங் குற்றதென் றஞ்சி
மூரி முழங்கும், முன்கை தூக்கிப்
பிளிறும், பெடையைப் பித்துற நோக்கி
நுடங்கும், வாலை யடித்து நுசுப்பி
வாளெயி றுக்கு வாய்பிளந் துறுமும்,
ஓடிப் பதுங்கும், உரப்பி யலம்பிக்
கறங்கும் வானிற் கலங்கும் சிறையினம்
கொம்பினம் ஒன்றுமற் றொன்றைக் குத்திக்
கொண்டவை தாமே குற்றுயி ராகும்.
திகந்தம் அதிரத் திரிந்தனர் வேடர்.

தனிமை

மன்னக் குமரன் மன்மதக் குரிசில்
வின்னயங் காட்டும் வீறுடன் தனது
படைகள் நடந்த பாதை யகன்று
அரசமெய்க் காவல் அகலான் மற்று
வேட்டைத் திறல்நாய் விரைந்துமுன் செல்லத்
தனிவழி கானம் தடிந்தான். அற்றைப்
பகலின் வெயிலும் பாதையின் முள்ளும்

பாறையும் கிடுகிடு பள்ளமும் எண்ணிப்
பாரா தவனுய்ப் படிந்து திரிந்து
வேட்டைப் பொழுதும் விரைந்து நடத்தி

மாலே

வேகம் பயின்று விரையும் கதிரோன்
ஆயிரங் கோடி அம்புகள் மலேயின்
அருவியிற் சாட அரும்பு நுரைகள்
அணுவணு வாக ஆர்த்திட விண்ணில்
வில்லாய் விளேந்த வியப்பிற் களித்து
வேட்டைக் கென்று வளேத்த
வில்லேத் தோளில் விடுத்தனன் வீணே.

(வேறு) அடர்கானில்

மேலேக் கடல்மூழ்கி மெல்லக் கதிர்சுருக்கி
மாலே முதுவெயிலும் மங்கியிருள் சூழ்ந்து
வரவும் பறவையெலாம் வந்துகிளே தாழும்
அரவின் கடிவாய் அதக்குசிறு தேரை
அலறும் குரலபயம், ஆந்தை யிரங்கிக்
கலகம் புரியும், கருநொச்சிக் கூடொதுங்கிக்
காகம் அடங்கும், கனத்தமரப் பொந்தொன்றிக்
கூகை எதிரெடுத்துக் கூவும், அதுகேட்டுக்
கூசி நடுங்கிக் குளிரின் சிறைக்குள்ளே
வாசி யடங்கி வருந்திக் குயில்குமையும்,
வானில் இருள்பிதிர்ந்து வையம் கரிபூசும்
கானில் தனிமான் கடுவன் இருகண்ணும்
தீவிழித்து நிற்கத் திகைத்துப் புகல்தேடும்,

வற்றி யுலர்ந்து வனத்தி லுராய்ந்தழன்று
சுற்றிப் படர்ந்து சுடரும் புதர்மூங்கிற்
காட்டுத் திசையைக் கலக்கிய பின்ஏதும்
வேட்டை விரும்பாது வேந்தன் புதல்வன்
வினவும் குறிப்பில் விழித்ததுணை நோக்கி:

அருவிச்சாரல்

'முனகிப் பயனில்லை மூண்ட பெருங்கானில்
சார வலந்திரிந்தோம் சார்ந்த திருள்வந்த
நேரம் சரியில்லை நேரம் கடந்திரவில்
வந்தவழி மீளும் வகைகூருய்' என்றிடவும்

'முந்தியெழுந் தீயில் முசலையவித் துண்போம்
பசியாறிப் பின்னர் படுத்துறங்கி வைகல்
விசித்தெழு வோம்'என்ருன் 'வேறு வழியேதும்
இல்லை அதோதொலைவில் ஏகும் புனலருவி
செல்லுவதே சூழ்ச்சி சிறிதுநட என்றூக்கி
மேலும் வழிநடந்து மேதினியாள் மன்னவனும்
கோல மலைச்சாரல் கொட்டும் புனலிழிந்து
செல்லும் கரைமருங்கிற் சென்றுநெடு வில்லூன்றித்
தொல்லை மறந்தவனுய்த் தோய்ந்துகருங் கன்மேல்
அமர்ந்தான். ... ...

முழுநிலா

... கணத்தில் அழகுநிலா வானிற்
சுமந்த ஒளிதூவிச் சொக்குப் பொடிகலந்து
வீசிப் பிடித்த வியப்பில் வனமெங்கும்
ஓசை யடங்கி ஒளிர்கின்ற மோனத்தில்:

இசைக்கீற்று

சொப்பனமோ இன்பச் சுமையின் இசைக்கீற்ரே
முப்பாழும் தூங்குமுழு மோனம் உலேத்துச்
சிவிறும் ஒலிக்கற்றை சீறுநுரை சிந்திப்
புவியும் நெடுவானும் பொங்கி யெழுந்திசையாய்
வந்தகுரல் ஒன்று வருத்தம் சகியாமல்
முந்தியெழுங் காதல் முறிந்த ரசம்கலந்து
ஏங்கும் உயிர் அழலை ஏந்தி ஒளிநிலவில்
ஓங்கி உலகெங்கும் ஓமென் ருெலித்ததுவால்

எதிரொலி

பொங்கி வருமிசையும் போந்து பழம்பிறவி
மூங்கி யெழுந்த முனைப்பில் முகையவிழ்ந்து
தூங்கும் கனவொன்றைத் தொட்டெழுப்பி விட்டதெனும்
பாங்கில் தனைமறந்து பண்ணில் மிதந்தான்

உருவெளி

துறந்த வெளியெங்கும் தோய்ந்தவொலிச் சூழல்
கறந்த நிலவூற்றிக் கடலாய்ச் சமைத்து அ.திலே
கோல மதியோடம் கொண்டு செலுத்தியொரு
நீல மயிலனையாள் நீந்துமொரு நேர்த்தியினைக்
கண்டான் ... ...

உன்மத்தம்

... உயிரிற் கனலேற உன்மத்தம்
கொண்டான் வசமிழந்த கோமகனும் ஆங்கவளின்
மாலாகி நெஞ்சம் மதர்த்தான் ...

கந்தருவகானம்

... ... ‘மிதந்துசெலும்
காலக் கனவே கவினூறும் கற்பனையே
பாவாய் எனைவிட்டுப் பாழில் எதைத்தேடிப்
போவாய் எனைக்கூட்டிப் போனால் பிழையோ
வரவோ நினதருகே வார்த்தவடி வழகைப்
பரவிநின தாகம் படிந்துபதம் சேர
அருகே துவளும் அழகின் சுவையும்
திருவே நினதேயோ தேவீ நினைச்சார
நூலேணி யென்ன நுடங்கும் ஒளிக்கதிரின்
மேலேறி நான்வரவோ மேவி இழையவிட்டாய்
வந்தேன் பொறுவந்தேன் வந்தேன்’ எனக்கூவி
அந்தரத்துப் பாழை அறத்தழுவும் மன்னவனைக்

காவல் துணை

கண்டு மனங்கலங்கிக் காவல் துணைவந்த
துண்டே அவனும் துணுக்குற்று ‘ஈதென்ன
விந்தை! இருங்கானத் திடையே அகப்பட்டோம்
அந்தோ அரசமகன் ஆட்பட்டான் ஐயையோ
பேய்க்காட்டி லன்றோ பிழையாய்ப் புகுந்துவிட்டோம்
போய்க்கேட்கி லென்ன புகல்வோம் அரண்மனையில்—
என்னே குமரா இதுபாரி யார்நான்சொல்’
என்றே கலங்க, ...

பிரிவு

... ... எழுந்தான் நிலையுணர்ந்தான்
‘நன்று, நடந்ததெல்லாம் நண்பா கனவுகொலோ
குன்றும் குழையும் குளிர்காவும் ஏங்கும்
நளிரிசையின் மாயந்தான் நாடியெனைக் கவ்விக்

குளிர்செய் நிலவும் குடித்தவெறி யென்றே
உணர்த்த முயன்ருய் உணர்வின் தினவில்
தணந்த குரலுண்மை தானே யுடன்சென்று
விந்தை யறிய விரைவேன்' எனக்கூறி
முந்தி யெழுந்தவுடன் மூண்ட புதுத்தொல்லைக்கு
அஞ்சி விதிர்த்து அருங்காவல் அன்னவனும்
கெஞ்சும் குரலோடு கீழடிமைப் பாவனையில்

மறுப்பு

'எங்கே எழுந்தீர் இரவில் தனிவழியே
பங்கம் வருமையா பாட்டின் மயக்கமது
தூண்ட அதைத்தொடர்ந்த துண்டே பலரெனினும்
மீண்டவரை யாண்டும்இம் மேதினியிற் கண்டதில்லை
ஏகாதீர் எங்கும்' எனவே வழிமறைத்த
மெய்காவல் தன்னை மறுத்தே யொதுக்கி
அரசக் குமரன் அடர்ந்தபெருங் கானில்
சரசரெனச் சென்றிடவும், சற்றும் அகலாத
வேட்டைச் சிறுநாயும் வீறிட்டு முன்னெழுந்து
பாட்டை வழியே பதவிப் பொறுப்புடனே
மோனம் கலைத்து முகிழ்த்த இசையெழுந்த
கானங் குறித்துக் கடுகி வழிமோந்து
செல்ல அதன்பின்னே சீரார் இளங்குமரன்
நில்லாமற் சென்று நெடிய தொலைகடந்த
பின்னே ... ...

கோலம்

... ஒருபுதரும் பேர்த்து மரமொன்றும்
தென்னங் கிடுகில் திருத்தி அழகுறவே

கந்தருவகானம்

வேய்ந்த குடிலும் வெளியே நிலாமுற்றம்
ஏய்ந்த நடுவினிலே ஏங்கும் குரலுடனே
காற்றேறி விண்ணிற் கனலாய் உருகிவரும்
சேற்றமுதச் சாறுண்டு செம்மாந் திருக்கின்ற
கொள்கை யுடையாள் குடிலின் அரசியவள்
அள்ளிக் குழல்செருகி ஆர்வம் கொலுவிருந்த
கோயிலிது வென்றே குலமுரசம் கொட்டுகின்ற
சாயல் வயது சரியாகத் தொண்ணூறு.

கட்டுக் குலையாள் கரங்கள் துவளாதாள்
பட்டுடலின் மேனி படர்ந்த பசுந்தளிராள்
சேலின் விழிக்கடையிற் சேர்த்த கனவினிலோ
காலக் கணக்கறியாக் கற்பனையில் இன்புற்றே
வாலைக் குமரி வளங்குன்று வண்ணத்தாள்
நீலவெளி படர்ந்த நித்திலத்துச் சித்திரமாய்
விண்ணின் விரிவில் வெறித்த நிலையினிலே
கண்ணைத் திறந்திருகை கூப்பிக் கொலுவிருந்த
காட்சி யினைக்கண்டான் ... ...

பழங்கனவு

... ... காவலனும் முற்பிறவி
ஆட்சிநினை வேதோ அகப்பட் டதுபோலும்
விந்தை பெருவிந்தை வீற்றிருக்கை தன்னருகே
முந்தி நடக்க ... ...

முடுவல்

... ... முடியாமல் வந்த
முடுவல் பெருமூச்சும் மூசுமூ சென்றுக்

கெடுசகு னம்காட்டிக் கீழே தரைமீது
தாழ்ந்து பிராண்டியவன் தாள்மோந்து நிற்பதுவும்
சூழ்ந்து வலமிடமாய் சோதனைகள் செய்வதுவும்
தொல்லைதரும் நாயைத் தொலைத்துப்பின் ஏகிடவே
வில்லில் சரம்தொடுத்து விட்டான். சரம்பட்டு
விட்ட கணத்தே விலாப்புடைக்க நின்றெதிரே
எட்டுத் திசையும் எழுந்த நகையொலியைக்
கேட்டே மயக்கம் கிறுகிறுக்கத் தள்ளாடிக்
கோட்டுப் பெருமரத்தைக் கொண்டான் கொழுவாய்

நகைமலர்

ஒலித்த நகையொலியும் ஓங்கும் நிலவிற்
சிலிர்த்து மலர்க்குவையாய்ச் சிந்தி வெளியெங்கும்
பூத்து நிறைந்த புதுமை புதைந்ததிலே
கோத்த மனம்மீட்டுக் கொள்ள முடியாமல்

நினைவுப்புரி

'பொங்கும் ஒலிமலராய்ப் பூத்து நிறைந்ததனை
எங்கோநாம் கண்டுள்ளோம்' என்று பழம்பிறவி
முன்னிரவிற் கண்ட முடியாக் கனவூன்றி
நின்று நெடுமூச்சில் நீளத் துழாவலுற்றான்.

தேய்ந்தே ஒலிகுறையத் தீர்ந்து நுரைமலரும்
ஓய்ந்து தெளிவுபெற ஒண்சுடரின் கங்கு
திருத்தி வடித்ததொரு தெய்வச் சிலையாள்
மருங்கசைய நின்றிட்டாள்; மன்னவனைச் சற்றேதன்
விற்புருவங் கோட்டி விழைவைக் குறிப்புணர்த்தி
நிற்கப் பெருவியப்பின் நேர்த்தி மனங்கொண்டு
உணர்விற் புதைந்தே உறைந்தான் ...

... ... அவன் 'ஓ
தணியாத பேரழகின் தண்ணொளியிற் பொன்னூசல்
ஆடி யிருந்தவளோ ஆம்இவளே முன்பொருகால்
தேடிநான் சென்று திகழொளியின் தீவிலன்றே
கண்டேன் அவளோடும் காலம் கழித்தேனே,
மண்டுசுவைத் தேனமுதம் மாந்திக் கிடந்திட்ட
மாமோக லாகிரியும் மங்கையவள் இங்கிதமும்
தாமறைய, வானுலகத் தாழ்வரையை விட்டுவந்த
வண்ணம் அறியேனே, வார்த்தநகை பூச்சொரியும்
பெண்ணிங் கெனைத்தொடர்ந்த பேதம் தெரியேனே,'

என்றெண்ண மிட்டவனாய் என்றோ மறந்துவந்த
முன்வாழ்வில் ஆங்கவனும் மூச்சிழைத்து முக்குளித்தான்

2

கந்தருவ வாசல்

‘ஆவா நான் எங்குற்றேன், ஆச்சர்யம் ஈதென்ன?
தேவாதி தேவருறை கின்றவுலகு ஈதோ!
தரையெங்கே நான்கிடந்த தண்ணென் அருவிக்
கரையெங்கே கற்பாறை மீதென் கவிப்பெருக்கில்
கான ரசங்கலந்த காதற் குறமகளும்
போன வழியெங்கே, போகம் புதைந்திங்கு
வந்துற்றேன் போலும் வழிதவறி; வான்முகட்டிற்
சந்திரிகை வேய்ந்த சாளரத்தின் ஊடே
நிலவின் கதிர்ப்புணையாய் நீந்திக் களிமிகுந்த
கோலஒளி மாடம் குறுகினேன்; மேற்கடந்து
செல்லும் வழியாரும் செப்பாரோ’ ...

... ... ‘யாரது நில்!’

‘நிற்கவா? நில்லாமல் நீளும் வழியிலையா
சொர்ப்பனமோ இந்தச் சுடரொளியும்’ ...

... ... ‘இன்றோர்
புதுமையினைக் காணப் புகுந்தாய், ...

… … … 'குரலே
சதுரிதுகாண் ஏழை சஞ்சரித்த மண்ணின்
இயல்பிற் பிறிதாய் இயங்குமொளி மாட
மயலகலும் மார்க்கந்தான் மற்றேதோ …

… … … 'நேரே
கிணுக்கு மொலியலம்பும் கிண்கிணியின் வேய்ந்த
மணிக்கதவம் தாளகற்று மற்றுன் வழிகாண்பாய்'

'நன்று மிகநன்று நாதம் கனிந்தெழுந்த
குன்றே யனையதொரு கோபுரமும் ஆசார
வாசல் வனைந்த வடிவார் நிலாக்கற்றை
ஓசைப் படுத்தியதன் உட்புகுவேன் தாள்திறந்தே
மற்றுமொரு விந்தை மணிக்கதவம் தொட்டதுமே
எற்றி யலைத்தே எழில்குலுங்கும் செம்மணிகள்
ஆடுங் கடைநாவில் ஆயிரமாம் பூவுதிர்த்தெப்
பாடும் பரவுவதைப் பார்க்கின்றேன் ஈதென்ன'

'நித்திலத்து நீல நிலவின் கதிர்மணிநா
இத்தரையில் சிந்துமொலி எப்போதும் இவ்வாறே
வண்ண மலர்க்குவையாய் வானத் திரையெங்கும்
நண்ணி நிறைகின்ற நல்லியல்பே, …

… … … 'நான்கண்டேன்
சொல்லின் சுகநிலையிற் சொக்கும் கவிமலராய்ச்
செல்லுவதும் காண்கின்றேன் சேரும் இடம்எதுவோ'

'அல்லல் அகற்று அரைநொடியில் ஆங்கவைதாம்
வில்லாய் நிமிர்ந்தெழுந்து வேண்டி வளைந்தோடி
மன்னக் கொலுவிருக்கும் மங்கை யவட்சார்ந்து
தென்னன் ஒருகவிஞன் தேவ சுகங்காண

வந்துற்ருன் என்றுன் வரவுரைக்கும் பின்னந்தச்
செந்திருவின் ஆணையினுற் சேடியரு முன்பால்
வருவார் எதிர்கொள்ள' ... ...

... ... 'வாழியுரு வின்றி
அருவமாய் நின்ருய்! அழையேற் குறுதுணையாய்!
வந்த வழிமறந்தேன். வண்ணச் சிறகெனக்குத்
தந்ததுவும் நீயோ தயவுடையாய்' ...

... ... 'சற்றிதுகேள்
எண்ணம்போல் யாவும் இயற்று மெழில்கவிதை
மண்ணில் பலகாலம் மாதவமாய்ச் செய்ததனுல்
ஊனில் உயிர்ஊசல் ஓங்கி உணர்வெழுந்து
வானின் வியப்பை வடித்தாய் வளர்இன்பம்
கொட்டிக் கிடக்கின்ற கோதில் உலகிதனிற்
கட்டி யமுதுண்ணும் கந்தருவன் ஆனுய் நீ;
வானுலகின் இன்ப வளங்கள் இனியுனக்குத்
தேனுய் இனிக்கத் தெவிட்டா மயல்தருவாள்
கந்தருவ மன்னன் கடைக்குட்டி; நீயவள்தன்
சொந்த மணவாள னுகிச் சுகம்பெறுக'

தந்தத்துக் கதவந் தைத்த
தரள வெண் திட்டிவாசல்
முந்துற வாய் திறக்க
முழு நிலாச் சிந்துகின்ற
சுந்தர மீன்கள் துள்ளித்
துவண்டெழு நடை பயின்றே
அந்தரத் தாதிமார்கள்
அணிவகுத் தெதிரே வந்தார்

திகைப்புடன் வியப்பும் காட்டும்
தெருவினில் மதிற் புறத்தே
வகை யறியாது நிற்கும்
வறியனு மென்பால் நண்ணி
நகைமுக மின்னார் இன்ப
நாயக வருக வென்றார்
மிகையுறும் உணர்வுபொங்க
மெய்சிலிர்த் திட்டேனம்மா

கன்னலார் ஆலம் சுற்றிக்
கண்ணேறு கழித்தார் மற்றும்
முன்பினாய் அணிவ குத்து
முந்துற நடத்திச் செல்ல
என்னேஇப் புதுமை யென்றே
இட்டடி பெயர்த்துச் சென்றேன்
பொன்னுல கதனிற் பெற்ற
புளகமும் புதுமை யம்மா

கால்தரை பதித்தெ டுத்த
கணத்தினில் கனகம் வேய்ந்த
நீள்மணி மாடந் தோறும்
நித்திலக் கற்கள் யாவும்
பாலெனக் கசிந்து மற்றும்
பண்ணிசை யெழுப்ப விந்த்ர
சாலமோ வென் றயிர்த்தேன்
சாற்றுதற் கெளிய தாமோ

மன்னுகந் தருவ நாட்டு
மன்னவன் பெற்ற பெண்ணாள்
முன்னிவந் தென்னைக் கண்டு
முறுவலித் திருகை கோத்துக்

கந்தருவகானம்

கின்னரி யென்னும் தெய்வ
கீதவாத் தியம் முழங்கச்
சொன்னயம் குலவிக் கோதில்
சோதி மாடத்துட் புக்காள்

யாழிசைக் குள்ளிருந்தே
ஏழிசைப் பெண்டிர் வந்து
வாழிய வாழி யென்றே
வாழ்த்துரை வழங்கிச் சென்றார்
தாழ்விலா அமர வாழ்வின்
தனிப்பெரு நாட்டில் எந்தப்
போழ்திலும் இசையும் கூத்தாய்ப்
போந்தெனை சூழக் கண்டேன்

வானவில் ஒன்று தூங்கும்
வண்ணமும் வளைவின் கீழே
கானங்கள் மிழற்று கின்ற
கண்கவர் பாவை மாரும்
யான் முனர் கண்டிராத
எண்ணிலா விந்தை யாவும்
தேன்மலர் வண்டாய் என்னைத்
திகைப்புறச் செய்யு மாலோ

வந்தனள் இன்ப வல்லி
வானுல கெழிலின் செல்வி
தந்திடும் அமுதம் பற்றித்
தாவிநான் வாங்கி மற்று
விந்தை சேர் வதனம் பூத்த
வியனொளி வியந்தேன் ஆனால்
முந்தியவ் வமுத மாந்தும்
முறையது தெரிந்தேனில்லை

கொந்திநான் மதுவின் கோப்பை
கொண்டுசென் றுதட்டில் சேர்க்கச்
சிந்துவ தில்லை யந்தச்
சிந்துரக் கலவை யந்தோ
முந்தொளிர் அமுதம் நின்ற
முன்னள வதனில் தேங்கச்
சுந்தர வதனி யந்தச்
சுடர்த்தொடி நகைக்க லானுள்

நகையொலி யெழுந்த போது
நாதமென் திரளும் சூழ்ந்து
பகைப்புல னெங்கும் பட்டுத்
தெரித்திடப் பார்த்து நின்றஃ
துகைத்தெழும் வான வில்லின்
ஒளியுமிழ் வண்ணம் கண்டு
திகைத்தனன் ஒலிகள் பூவாய்
உதிர்வதும் வியப்பே யம்மா

'அம்மவோ ஈதென் னிந்த
அதிசயம்' என்று கூவிக்
கொம்பனை யாளை நோக்கக்
குளிர்விழிக் கோதை 'கேளாய்
நம்பிவந் தணைந்த செம்மால்
நகையொலி யாவு மிந்த
உம்பரின் உலகில் பூவாய்
உதிர்வது கண்ட யிர்த்தாய்

கண்டதோர் உண்மை மேலும்
காண்டிட விரும்பு வாயேல்
விண்டொலி செய்த முத்து
வியனகை யன்றே மண்ணிற்

பண்ணிழைந் திழைந்து சோலைப்
பனிமல ரரும்பிற் றேய்ந்து
தொண்டைவாய் விம்மும் சோதிச்
சுடரெழச் சிரித்தல் பாராய்

அழலொளி காலும் வள்ளத்
தமுதினைப் பருகி இன்பம்
தழுவிய களிப்பில் தெய்வத்
தரளவெண் ணகையார் சிந்தும்
குழலொலிக் குவையா யுங்கட்
குவலயம் பூத்து மற்றும்
உமிழ்ந்தவை யன்றோ பூவின்
தேனெனத் துளிர்க்கு மாலோ

என்றனள் அவளும் என்னை
இணைவிழி தழுவிச் சாந்தப்
புன்னகை புரிந்த போதப்
புதுமையில் திளைத்தேன்; தெய்வக்
கன்னலாள் கணுக்கள் தோறும்
காதலாய்க் கசிந்து நின்றே
யென்னுளம் புகுந்து வீற்றென்
ஏக்கமாய் இழைந்தாள் பின்னை

(வேறு)

"மோனத் தவத்தினிலே மூழ்கி யிருந்துவிட்டால்
பானகமும் என்றோ பருகுவது பாவலனே
வானுலகின் விந்தை வடித்த சுவையமுதம்
ஏனோ அருந்தாமல் இன்னமுமே" என்றாள்

கவிஞர் அமுதந்தான் கண்டே னதையான்
குவித்தே இதழ்பருகக் குனிந்தேன் தரளநகை

வல்லி யதைவாங்கி வாகாய்ச் சுவையூறும்
புல்லிதழில் வைத்துப் புன்னகைத்தாள் என்னை
அருகுவரக் கண்ணுல் அழைத்துக் கலச
மருங்கில்இத ழூன்றி மனங்கொண்ட மட்டும்
பருகென்று சொல்லிப் பணித்தாள் அமுதும்
உருகி வரக்கொண்டேன் உண்டேன் களிதுளும்ப
நின்றேன் அயர்ந்தேன் நினைவுற்றுப் பார்க்கையிலே
துன்று சுவைக்கோப்பை தோன்ருமல் யாமிருவர்
இதழில் இதழ்பருகும் இன்பநிலை யோர்ந்தேன்
புதியமதுப் போதம் புணர்ந்தேன் புளகமுற்றேன்'

'இத்தனை யும்நினைவில் இன்னம் இருக்கிறதா
சித்தம் புகுந்தேநீ சிந்திப்பா யென்னைத்
தெரிகிறதா யாரென்றே தேருய்நீ' என்னத்

திகைத்தான் இளவரசன்; தேவமகள் மேலும்
சிரித்தாள் சிரித்தாள் சிரிப்பின்ஒலி யெட்டுத்
திசையும் அதிரத் திரைத்த ஒளியாய்
விசும்பில் நிறைந்திடவும் விந்தைக் கனவினிலே

'கந்தருவர் நாட்டினிலே கள்ளைப் பருகியதும்
முந்தி யெழும்மோக லாகிரியில் மூழ்கியதும்
விந்தை பலவா வியந்து கிடந்ததுவும்
நெஞ்சில் நிழலாட நேரே இதோஎதிரே
கொஞ்சுவதைக் காண்கின்றேன் கோதாய் உனையறிந்தேன்
உன்னை மறந்திடுதல் ஒண்ணுமோ நீயன்ருே
என்னைப் பிரியாது இணைந்தாய் அருகுற்ருய்'

(வேறு)

'உற்றேன் இருந்த உவகைத் திறத்தில்
ஒளிர்காதல் ஓங்கி யுன்னைச்

சற்றே மதித்துன் சார்பிற் களித்த
சமயத்தில் என்ற னுள்ளம்
முற்று முகிழ்த்த மோகம் கனிந்து
முத்தாடி நின்ற பிழையை
எற்று திருந்து விட்டே னலாது
ஏதே பிழைத்த துன்பால்?'

'என்னைப் பிழைக்க வெண்ணுய்நீ யானும்
உன்னைப் பிழைக்க வொண்ணேன்
தன்பா லணைத்து தயவிற் கனிந்த
தாராள நெஞ்சு முடையாய்
துன்பா லெழுந்து தோயாத போது
தூண்டாது வின்ப மெதுவும்
வன்பா லெழுந்து வாட்டாத போது
வளராத அன்பும் நிலையோ

பற்றிப் படர்ந்த பண்பாகு மொன்று
பரிபூர்ண மாகி விட்டால்
சற்றும் நினைக்க ஒண்ணே னலாது
சாயுஜ்ய மென்று கொள்ளேன்
தொற்றிக் கிடந்த தொந்தம் நிலைத்த
தொலையாத மரண நிலையாய்
முற்றிக் கனிந்த முதிர்வில் உறைந்து
முடமாய்க் கிடத்தல் முறையோ'

'நிலையில்லா மண்வாழ்வில் நீந்திஉழன் றுய்க்குக்
குலையாத பேரின்பம் குமட்டல் பெருவியப்பாய்
விண்ணின் வியப்பும் வெறுக்கின்ற வாறுங்கே
மண்ணில்நீ பெற்றிருந்த மாண்பெதுவென் றுன்னை
வினவினேன் யாதும் விடைகூறுய் பின்னும்
தனிமை விழைந்தாய் தவத்தில் இருப்பவன்போல்
வீற்றிருந் தாய்உன்றன் விம்மு நெடுமூச்சின்

கீற்றினிழை யொன்றைக் கிழித்தேன் அதனூடே
கானில் ஒருகுடிலில் கானக் குறப்பெண்ணுள்
தானும் தனது தனிமையுமே ஒன்றி
உனையெண்ணி நித்தம் உதிர்க்கும் விரகத்
தினவூறப் பாடித் திரைத்த குரலும்
தழைய வரக்கண்டேன் தாவி யுனைப்பற்றும்
மண்ணின் கவர்ச்சிக்கு மற்றும்நீ பித்துற்று
விண்ணை வெறுக்கும் விதமும் உடன்புரிந்து
கொண்ட கணத்தே குவலயத்தில் மீண்டுமுனைக்
கொண்டு விடல்குறித்த கொள்கையினுல் ஆக்கணமே
சென்மம் எடுக்கவுனைச் செய்தேன் அரசாளும்
மன்னன் மகனுக மற்றும்நீ வளருங்கால்
யானும் உனைப்பிரிய ஒண்ணுது நின்பின்னே
வானும் துறந்தோடி வந்தேன் நினையகலா
வேட்டைச் சிறுநாயாய் வேடம் புனைந்திதுநாள்
நின்னை யுடன்காத்தேன் நீயின்று வைகறையில்
சன்னத்த மாகச் சரிந்து வடவனத்தில்...'

'வந்ததுவும் ஆங்கே வழிதவறி நின்றதுவும்
முந்தி யெழும்தீயாய் மூண்ட இசையினிலே
நாடிநான் வந்தேன்' ... ...

... ... 'நளரிசையைப் பெய்தவளும்
ஓடத்தி லேறி ஒளியுலகம் சேர்ந்துவிட்டாள்...'

'கண்டேன் எனைக்கவர்ந்த காரணமும் நாடியிங்கு
கொண்டு விடுத்தாயக் கொள்கையுமே யாதென்று
கூருய் விளங்கக் குறமகளும் யாரென்றே
தேறேன் உனைக்கண்ட தேவருல கத்தன்னுள்
எங்கிருந்து வந்தேன் இவையெல்லாம் என்னேயோ
மங்கும் நிலவொளியின் மாயங்கொல்?' என்றிடவும்

3

முற்பிறவி

'முன்னம்நீ பெற்ற முழுமா னிடப்பிறவி
தன்னில் கவிதைத் தனியரச னென்று
வளரும் புகழுடனே வாழ்ந்தாய் அழகை
அளக்கும் விருப்போடே அன்ெருருநாள் மாலையிலே
சென்ருய் தனிவழியே சேர்ந்து பெருங்கானம்
நின்றே எழில்பருகி நீதிரிந்து பின்னர்
பொழுது கழிந்திடவும் பொங்கியிருள் சூழ்ந்து
விழுதிறங்கி வந்த விரைவில் நடைமுடுகிப்
பின்னர் தொலைவில் பெருங்குடி லும்சுற்றிச்
சின்னஞ் சிறுகுடிசை சிந்திக் கிடந்ததொரு
வேட்டுவரின் சார்பில் விருந்தாய் உனையேற்றுத்
தாட்டிகமாய் அந்தத் தனியூரின் மன்னவனும்
கட்டிக் கரும்பனையாள் காதல் திருமகளை
எட்டியெனக் கூவி இயம்பினன் நின்வரவை

'வந்தார் தவறி வடவனத்துச் சீமைக்கே
இந்தா இவருக்கே ஏதுகுறை யின்றி
உபசரித்துக் கொள்ளல் உனதுரிமை சொன்னேன்
அபசார மேதும் அணுகுவது கூடாதென்
றன்பின் அவளிடத்தே ஆணையிட்டான் ...

... ... 'ஆங்கவளும்
தன்னுரிமை பெற்றுத் தழைத்த உணர்வோடே
ஆகட்டும் அப்பாவென் ருனந்தம் கொண்டவளாய்
வேகத்துடன் உள்ளே விரைந்தாள் அதன் பின்னர்

ஆற்றிக் களை நீங்கி ஆரமுத முண்டவனும்
போற்றியவ ரன்பைப் புகழ்ந்தேன் அவள் அழகை
நன்றே துயில்கொள்ள நல்லதொரு மான்தோலும்
என்பால் அளித்துப்பின் ஏகினர் பெண்மானும்
போனுள் அவள்சென்ற போதே எனதுளமும்
தானுய் அவள்பின்னே தாவும் அவள் இதயக்
கண்ணி விரித்துக் கடைக்கண் விழிக்கோணம்
துண்ணென்று வீசித் தொடுத்த சரம்பட்டு
நெஞ்சைப் பறிகொடுத்தேன் நீளிரவும் அன்றைக்கு
வஞ்சமோ தீராது வாலாக நீளுவதும்
செஞ்சொல்லும் பாதச் சிலம்பு முரலிசையும்
கொஞ்சி எனைக்கொந்தும் கொம்பனையாள் தன்னழகும்
வல்லிக் கொடியிடையும் வாளித்த பொன்னுடலும்
செல்வி யவள்தந்த செம்மதுவின் தீ வெறியும்
என்னுயிரைக் கவ்வ எதுவும் அவள் நினைவாய்

என்று மவட்பிரியா வாழ்வு மனம்பற்றி
அற்றை யிரவும் அரிதின் கழித்துப்பின்
மற்றைப் பகலும் மனமின்றி நோவொன்று
உற்ற தெனக்கூறி ஊர்திரும்ப மாட்டாமற்
கற்பனைகள் காட்டிக் கழித்தேன் சிலகாலம்
வேடர் தவமகளும் வேலோன் வடவனத்துக்
கோடுயரக் கோலோச்சும் கொம்பன் குணக்குன்றும்
சின்னுள் இருந்து சிரமம் தணிந்தபின்னர்
என்னை விடையனுப்ப எண்ணினர்', ...

... ... 'மற்றுனக்கும்
தோதாகப் போகத் தொடுத்த புதுஉறவுக்கு
ஏதாக வெண்ணி இருந்தாய் இருங்கானில்
வேட்டை விருப்புற்ற வேலோன் துணைவருடன்
காட்டில் நடந்தான் களிப்பே மிகுந்தவராய்க்
கூட்டில் சிறுகிள்ளைக் கூவு மொழியாளும்
பாட்டில் தனைமறக்கும் பண்பார் விருந்தினனும்
தங்கி யிருந்தீர் தனிமையிலே; தையலவள்
சிங்கக் குகையிற் சிரிக்கும் மலையருவி
சென்று புனலாடிச் சேர்வோம் விரைவிலென
உன்னை யழைத்தாள் ஓமென்று நீயும்
மயங்கி நடந்தாய் மதனன் துணையாய்

வியப்பில் மலையருவி வீழும் அழகினிலே
சிந்தை நழுவச் சிவனுர் தனிமோனம்
கொந்தி மதன்தொட்ட கோதில் கணையொன்ருல்
நெற்றிக்கண் தீயுமிழ நீண்ட படைப்பனைத்தும்
பற்றி யெரித்துப் படரும் பொறிசிந்தும்
வண்ணம் எழுந்துன் வசமிழக்கச் செய்திடவும்
பண்ணில் மிதந்தாய் பரவசமாய்ப் பாட்டெடுத்தாய்
வாக்கில் இருந்து வெளிப்பட்டாய் வான்விரிவில்
தேக்கினுய்; சுடர்தணியச் சூழ்ந்த லயத்தினிலே'

'நாதக் கனவினிலே நான்இருந்து செய்தவத்து
வேதப் பொருளாய் எதிர்விளைந்தாள்; மின்கனவு
மோதித் திறந்துஎன்றன் மோனங் கலைத்தெழுப்பிப்
போதத் தருள்சுரக்கப் போந்த திருநாளும்
வந்தடுத்த தென்றே வளர்கின்ற தாபத்தால்
சிந்தைக் குகையிற் சிதறுமொளிதிரட்டி
முந்தார்வத் தாலிந்த மூவுலகும் யான்மறந்த
விந்தையிலே வேல்உருவ வீழ்ந்துவிழிப் புற்றேன்'

'விழிப்புற்ருய் விண்ணுலக வாயிற் புறத்தே.
—தழைத்த மலையருவித் தண்ணென் கரையில்
விசித்த நிலவொளியில் வேடர் கொழுந்தும்
பசித்த உணர்வுடனே பாவினிமைக் காதலனும்
ஓங்கும் உவகை உதித்த பெருங்காதல்
தாங்கி யறத்தழுவித் தம்மை மறந்திருந்தீர்

வேட்டை முடித்தவனுய் வீட்டுக்கு வந்தவனும்
வேடர் தலைவன் விதிர்ப்புற்ருன் ஆங்கும்மைக்
காணுமல் உள்ளம் கவன்ருன் திசையெட்டும்
நாணு விழுத்து நடத்தும் சரஞ்சரமாய்ப்
போக்கினுன் ஆட்கள் புகுந்த மனம்உன்மேல்
ஊக்கமிகக் கொண்டான் ஒருவன் புனலருவி
தாவி யடைந்தான் தனியில் இருவருமே
மேவி யிருந்திடவும் மெல்லியலுன் தோள்மேல்
குலவித் தனைமறந்த கோலம் பொருந்த
நிலவி யிருந்த நிலையிற் கனன்றவனுய்
வீசினுன் கைவேல் விரைந்து விலாப்புறத்தில்
ஓசை யடங்க உயிர்ஓய்ந்தாய்.' ...

... ... 'ஆம் ஆம்
அதன்பின்னர் தானே அறியேன் ஒளியின்
மதிலின் புறத்தன்று மானிடனுய் நின்றிருந்தேன்
மேலே நடந்ததுவும் மேவிப் பலகாலும்
சோலை மலர்ஒளிநீ சிந்தியதும் யான்வெறுத்து
ஓடோடி வந்தேன் ஒளிமகளே?' ...

... ... 'ஆனுலும்
கூட முடியாதெக் காலமுமே மெய்க்காதல்
அன்றுன்றன் ஆவி அகலக் குறமகளும்
பின்னர் தனதுள்ளம் பேதுற் றதுமுதலாய்

நீயே நினைவாய் நினதுருவைத் தன்னுள்ளே
மேவி யதுபோற்றி மேதினியி லேயிதுநாள்
வாழ்ந்தாள் தவமொன்றே வாழி பழங்குடிலில்
ஆழ்ந்தாள் அவள்கொண்ட அன்பின் பெருக்காலே
ஏந்திழையா ளன்றுடம் ஏக்கக் குரல்எடுத்துச்
சிந்தும் பழங்கவிதைச் சீர்த்தியிந்தக் கானகத்தே
குன்றும் குளிர்நிலவும் கொட்டும் புனலூடும்
சென்று நிதம்பாயும் செம்மை நிலவொளியின்
பாலைப் பருகிப் பழம்பண் ணிசைபாடச்
சோலை எதிரொலியாய்ச் சொக்கும் உனதின்பப்
பாட்டின் இனிமையிலே பல்லாண்டு முன்பொருகால்
கேட்ட மதுப்பெய்த கீற்றின் இணைஇரண்டும்
நாட்டி யெழுந்த நலத்தால் அவள்உயிரும்
சாந்தி யடைந்ததுகாண் சற்றேநின் கண்திறவாய்'

என்றே யுரைக்க எழில்முத்து வெண்ணகையிற்
பின்னி யெழுந்து பெருங்கானம் எக்களிக்கக்
கண்ணைக் கசக்கியந்தக் காவலனும் காணுங்கால்

விண்ணும் வெறித்த வெள்ளநில வொன்றும்
வெடித்த பெருங்கானும் வில்லிலடி பட்டுக்
கிடந்த சிறுநாயும் கீற்றுக் குடிலில்
படர்ந்த கருங்கல்லின் பாறையதன் மேலே
குடியோடிப் போன குறமகளும் மற்றுமவன்
தன்னையுமே கண்டான் தவிப்புற்று உடன்ஓடிச்
சன்னத்த மாகிச் சரிந்திட்டான் அந்தோ
உதிர்ந்த மலரே உறங்குவதைத் தான் கண்டான்
ஓம் என் ஒலியே ஒளியில் மலர்ந்ததுவால்.

உடையவர்

உடையவர்

[மகாபாரதப் போர் முடிந்து நெடுங் காலத்துக்குப்பின் இந்திரப்பிரஸ்த நகரில்]

1

மாபா ரதம்முடிந்து மன்னர் பகைமுடித்துப்
பூபாரம் தீர்த்துப் புயல்வண்ணன் கோபாலன்
வந்தவழி மீண்டே வளமார் துவாரகையைச்
சொந்த மெனக்கொண்டான். சோதரர்கள்தாம்பொருத
போர்ஆர்வம் ஓய்ந்து, புகைஉயிர்த்த நெஞ்சத்து
வீரர் தமைத்தாமே வீழ்த்தி அழிவுற்று
எஞ்சியதோர் மாநிலமும் ஏறும் அரியணையும்
பஞ்சம் பசிபிணியும் பாரதப்போர் வென்றியினுல்
சூடியதோர் வாகை சுடுநெஞ்சும் கொண்டவனுய்
வாடாத நல்லறத்தின் வாழ்வுக் கொருபுகலாய்
இந்திரமா நன்னகரில் ஏய்ந்த முடிசூடிச்
சந்ததமும் கண்ணனடி சார்ந்த மனத்தருமன்

தம்பியரின் தோள்வலியும் தான்செய் தவவலியும்
நம்பி யரசிருந்த நாளையிலே, யாழ்பாடும்
பாணனும் பத்தினியும் பாரதர்க்கு வேந்தர்தமைக்
காண விரும்பியவர் கால்நடையாய் வந்தடைந்து
ஆசார வாசல் அணுகினர். அவ்வேளை
ஓசை மணிமுரசம் ஓங்கியெழ வாழ்த்தொலித்துச்
சங்கம் முழங்கச் சதுரங்க சேனைகளும்
பொங்கி அணிவகுத்துப் போவதுவும் முந்துவகை
மங்கலங் கள்பாடி மாதர் மணிவிளக்கம்

உடையவர்

அங்கை எடுத்துவர, அந்தணர்கள் கும்பங்கள்
ஏந்திவர எங்கும் எழுந்தார வாரமுறப்
பூந்தோ ரணம் கொஞ்சும் பொன்னகரின் வீதியெலாம்
கண்டு வியந்தார் கழிபேர் உவகைக்குக்
காரணமேன் என்றவரும் கருதினர்,

[வெற்றிவிழா ஊர்வலம். ஜனக் கூட்டம் வெள்ளமாகப் பெருகி ராணுவ அனிவகுப்பைத் தொடர்ந்து செல்லுகிறது.]

கொட்டுபேரி கொட்டுபேரி
கொட்டுபேரி கொட்டடா

எட்டுகின்ற திசைகள் எட்டும்
எதிரிலா வலத்தினுல்
கொட்டுபேரி கொட்டுபேரி
கொட்டுபேரி கொட்டடா

மட்டிலாத புகழ் மணக்க
மண்டலத்து மன்னர்கள்
கொட்டுகின்ற திறைகள் கொண்டு
குடை நிழற்றுங் கோமகன்

தருமமே தழைத் துயிர்த்த
தருமபூபன் ஆட்சியில்
பெருமை கொண்ட நாளிதென்று
பெரியபேரி கொட்டடா

கொட்டுபேரி கொட்டுபேரி
கொட்டுபேரி கொட்டடா.

[பாணனும் விறலியும் தங்களுக்குள்]

– பாணீநாம் இன்றைக்குப் பாக்கியமே செய்தோம்

– பாணுநாம் செய்திருக்கும் பாக்கியம்தான் என்னே ?

– புல்லியரைப் போர்வென்று பொன்மகளின் கூந்தல்
வில்லாளார் முடித்திட்ட வென்றிதிகழ் நன்னுள்

– வில்லாளர் வில்லுக்கும் வேகம் அளித்திட்ட
மெல்லியலின் கற்பனலே மேன்மையென்று கூறு

– காண்டீபன் வில்வலியாற் காய்ந்தபகை பெரிதே
ஈண்டவனின் புகழ்மணக்கும் இனிய திருநாளாம்.

– தூண்டியதோர் தேர்நடத்தித் தூதுரைத்து மற்றை
வேண்டுவன செய்தளித்தான் வித்தகத்தைப் பேசு

– வீமனெனும் மாமதத்து வேழம்ஒன்றிங் குண்டே ?

– ஆம்அவனின் கதைவலியும் ஆண்டவனின் அருளே.

– சத்தியமெய்ஞ் ஞானசகா தேவனெனும் மேலோன்?

– முத்தியெனுங் கொடுமுடியில் முறுவலித்து நிற்போன்

– நகுலனெனும் நற்குணத்து நம்பியவன் பெருமை ?

– மிகுநேமம் காத்துயர்ந்த மேன்மையினுல் பாணு

– ஐவருக்கும் தலையானுன் அறமுதல்வன் சீர்த்தி

– உய்வகையே தானுணர்ந்தான் ஓச்சுவதே செங்கோல்

(வேறு)

- தாழ்விலாக்கொடை தரும பூபனின்
தண்குடை நிழல் கூடுவோம்.

- யாழ்நரம்பிசை மீட்டுவோம் புகழ்
பாடி யாடுவோம் பாணகேள்

- நன்றுகூறினை நாயகீ உளம்
நான் மறுத்திடல் ஒண்ணுமோ?

- நின்றுநேருறக் கண்டு செல்லுவோம்
நேம மிக்கவன் மெய்ப்புகழ்

- சென்றநாட்களின் செய்தியும் இனிச்
சேரு நாட்களின் மீதியும்

- நன்றுநாமிருந் தாய்குவோம் பின்னர்
நமது பாட்டை நடக்கலாம்.

[புதிய மனிதர்களான பாணனையும் விறலியையும் வாயில் காப்போன் தடுத்தல்]

- யாரது? நிற்பீர் யாவரோ நீவிர்?

- பாரதம் சுற்றும் பாத சாரிகள்

- யாழ் அதுஎன்ன? அருங்கலை வாணரோ?

- ஏழிசை வல்ல யாழிசைப் பாணர்யாம்

உடையவர்

- நல்வரவு உமக்கே. நாட்டின் திருநாள்
மல்லரும் வில்லரும் மாகவி வாணரும்
பாண்டவர் முன்றில் பரிசில்கள் பெற்று
மீண்டவர் செல்லும் மேதகு நாளிது

- அறிந்தோம் அய்யா அகமகிழ் கின்ருேம்
குறிப்பாய் — முதலில் — குருக்ஷேத் திரத்தில்
வில்கை நழுவ வெலவெலத் திருந்த
கல்லெனும் திண்டோட் காண்டிவன் என்னும்
மன்னரைக் கண்டு மகிழ்ந்திட விருப்பம்

- என்ன துணிச்சல்? ஏளனம் புரியும்
இறுமாப்புடனே இங்கு நீர் வந்தீர்?

- குறைபட ஏதும் குறித்திலோம் அய்யா
குற்றம் என்ருல் பொறுப்பீர் கோமகன்
சுற்றங் கொல்லத் துணிவிலான் ஆகி
நின்றதால் அன்ருே நீதியால் கண்ணன்
நன்றுதன் நாவால் நல்லுரை வழங்கவும்
பாரத ஞானப் பழம் எனும் கீதையாம்
சாரமெய் ஞானச் சாத்திரம் கண்டது

- போற்றினும் போற்றுவீர் ....

- ....பொருள் கொடா விடினும்
தூற்றுவோம் மெய்ப்புகழ் தோய்ந்தவர் மாண்பை

- பாணரே பொறுப்பீர் பார்த்தனும் வேந்தர்க்
காண விழைந்தீர் காதலால் ஆயினும்!

- ஆயினும் தடையெதும் அடியேற் குளதோ

- ஐய தடையிலெ ஆயினும் பாண்டவர்
மெய்யுயிர் என்ன மேவிடும் விசயன்
மெய்யாய் ஈங்கிலெ ... ...

உடையவர்

- ... ... மேவியது எங்கோ ?

- பாரத வெம்போர்ப் பகையழித்திட்ட
சாரதி தன்னூர் மீண்டபின் ஆங்கே
யாதவர் கலாம்விளைத் திட்டே தம்முள்
பேதமுற் றவராய்ப் பிழைபல புரிந்தார்.

- புரிந்ததால்? ... ...

- ... துவாரகா புரிக்கு வருகென
விரைந்தொரு தூது விடுத்தனன் கண்ணன்

- யாதவர் பிணக்கை அறுக்கவும் மற்று
மாதவன் கண்ணன் மகிழ்ந்திடப் புரியவும்
என்றே மன்னரும் எய்தினர் கொல்லோ ?

- நன்றே சொன்னீர். நாயகன் அழைப்பால்
சென்றுளார் பார்த்தனும் செயம்பெறு வீமனும்
திரும்பிடச் சின்னுள் செல்லும் ஆதலால்,

- விரும்பிய விருப்பம் வீணெனச் சொன்னீர்.

- பாணரே நன்கு பகர்ந்தீர் உண்மை.
காணநீர் வந்த காலமும் இனிதே.
வென்றி விழாவை வியந்து நீர் பாடி
நன்றே பரிசில் நயந்து நீர் செல்வீர்.

(பாணன் தனித்து விறலியிடம்)

- அதுவா செய்தி? அப்படி யானல்
இதுவும் கண்ணன் இயற்றுமோர் கபட
நாடகம் கண்டாய். ... ...

– ... ... நல்லது பாணு
பூடகம் இதனைப் பொறுத்து நாம் இருந்து
மேலும் காணலாம். ... ...

– ... ... மெல்லியல் வாராய்

என்றினைய சிந்தித்து ஏழிசையாழ் பாணர்
எழில் நகரின் வலம்வந்தார் எங்கெங்கும் சுற்றி
மன்றூர நிறைந்தபெரு மன்னவரும் மற்றை
மந்திரிமார் அந்தணரும் மாசனமும் சூழக்
குன்றொளிரும் சுடரென்னக் கொலுவிருந்த தருமக்
கோமகனின் வாசலினைக் கூடிவரும்போது
நின்றுநெடு வீதியினில் நேரிழையார் இருவர்
நிமித்திகங்கள் கூறிவரும் நேர்த்தியினைக் கேட்டார்.

மாயக்கார னடி — கிருஷ்ணாரி
மகிமைக்கார னடி — ராமாரி
பூமிபாரம் தீர்க்க — கிருஷ்ணாரி
போர்நடத்தி வைத்தான் — ராமாரி
தூதுரைத்த தோழன் — கிருஷ்ணாரி
தோது சொல்லித் தந்தான் — ராமாரி
காடுறைந்த போதும் — கிருஷ்ணாரி
கஷ்டம் போக்கிவிட்டான் — ராமாரி
துயிலுரிந்த போதும் — கிருஷ்ணாரி
துணையிருந்தவண்டி — ராமாரி
தோற்றுவிட்டதெல்லாம் — கிருஷ்ணாரி
தோற்றுவிப்ப வண்டி — ராமாரி
துணையிருப்பவண்டி — கிருஷ்ணாரி
துணையை நாடுவானே — ராமாரி
சூதிருக்கு மோடி — கிருஷ்ணாரி
சூதருக்குள் சூதன் — ராமாரி
கலகம்வந்த துண்டோ — கிருஷ்ணாரி

கவலை கொள்ளல் ஏனோ — ராமாரி
வெள்ளம் போல சேனை — கிருஷ்ணரி
விசயன் கொண்டு போனான் — ராமாரி
வென்று மீளுவானோ — கிருஷ்ணரி
வில்லுங்கொண்டு போனான் — ராமாரி
காளை வீமன் அன்றோ — கிருஷ்ணரி
கதையும் கொண்டு போனான் — ராமாரி
கண்ணன் எண்ணம் என்னோ? — கிருஷ்ணரி
கதை முடிய லாச்சு — ராமாரி
யுகம் படைத்தவண்டி — கிருஷ்ணரி
யுகம் முடிக்கப் போறான் — ராமாரி

பண்ணிசைக்கும் வேய்ங்குழலான் பார்த்தனுயிர்த் தோழன்
கண்ணன் அழைத் திடச்சென்ற காளை அருச் சுனனும்
எண்ணரிய புகழ்வீமன் ஏறனையான் உடனே
நண்ணியவர் திரும்புகின்ற நாளாகிப் போக
ஒருகுடையின் கீழிருந்து உலகாளும் வேந்தன்
தருமநெறி மணிமுரசம் தானதிரும் கொலுவில்
வீற்றிருந்த கொள்கையினில் விழைவிலனாய்ப் பொன்னங்
கீற்றிசைந்த மந்திரமா மாளிகையுட் சென்றான்.

[சகாதேவனும் தருமனும்]

2

- அண்ணு வணக்கம், ...

- ... ... வா சகாதேவா

- துவாரகைச் சேதி? ... ...

- ... ... தொன்மறை நாயகன்
எண்ணம் இதுவென எப்படித் தெரிவேன்?

- ஏதோ மாயம் இங்கிதில் உள்ளது

- இருக்கலாம் ஆனுல் என் செயக்கூடும்?

- கலகச் செய்தியும் கண்ணனுல் அதனை
விலக்கிட் இயல வில்லை யென்பதும்

- எல்லாம் புதிர்தான்; ஏழையர் நாமே.

- ஏனே பின்னர் இருவர் தம்மையும்
ஏகிடச் செய்தீர்? இன்னமும் திரும்ப
வில்லையே அண்ணு ... ...

- ... ... வீண் சஞ்சலத்தால்
விளையும் பயன்என்? ... ...

– ... ... விளைவதை அறிவேன்

- அறிந்திடில் நானும் அறிந்திடக் கூறு.

– யுகம் முடிவென்னும் ஊழ்வினை உற்றது.

- உடையவன் ஒருவனே, உளனவன் கண்ணன்
உள்ளம் என்னவோ அதுவே ஊழ்வலி.

- உண்மைதான் அண்ணு! உலகெலாம் அவனே
உண்பான் உமிழ்வான் உமிழ்ந்ததை ஊண்பான்
யாவும் அலகிலா அவன் விளையாட்டே

- தோல்வியும் வெற்றியும் தோய்ந்திட நம்மைத்
தொல்லைகள் செய்ததும் தோழமை காட்டிப்
பாரத நாட்டிற் பரிவுடன் சோதரர்
வாழ்ந்தநாள் போக வாள்கொடு நம்மை
நாமே சாய்த்திட நாயகன் செய்ததும்.

- மாபாரதமாய் மாயவன் புரிந்தான்.

- மற்றும் ஏதோ சூழ்ந்துளான் மாயம்.

– வருவது வரட்டும், வானவன் விருப்பம்
தடுத்து நாம் நிற்கத் தரமும் உண்டுகொல்?

- தடுக்கும் உரிமைதான் தந்துள் ளாணு?

- எடுப்பான் பிடிப்பான் ஏற்றுவான் உயரக்
கொடுப்பான் பெரும்பதம். கொண்டவன் பாதம்
துணையெனப் போற்றித் துயரழிந் திருப்போம்.

உடையவர்

– துரௌபதி எங்கே? துணையென நெஞ்சில்
துய்ய சேவடியைத் தோய்த்தவள் இருப்பாள்
அவளே மரண்பொருள் அறிந்தவள் அப்பா?

– தூயவன் பாதம் துணையெனக் கொண்டே
துயரொழிந்திட்ட தூய்மையின் பிழம்பு.

– நமக்கும் அவன்துணை யல்லால் கதியிலை.

· நான் வருகின்றேன் நாமினும் காண்போம்.

[துவாரகையில் கண்ணனும் பலராமனும்]

3

– கண்ணு, கண்ணு. ... ...
– ... ... அண்ணு என்ன?

– இன்னுமா இன்னிசை ... ...
... ... ஈதுனக் கழகா?

– இன்னுமா என்ருல்? என்ன நான் செய்ய?

– யாதவ குலத்தார் அழிவுறு கின்ருர்
ஒருவரை மற்றவர் ஒறுத்து மடிதல்
பார்த்துமா இன்னும் பராமுகம் கண்ணு?

– பொறுப்பீர் அண்ணு, புத்திமை மறந்து
புடைத்தவர் தம்மைத் தாமே யழித்தால்
புகுந்திடை விலக்குதல் பொல்லாங் கன்ருே?

– நன்று நன்று நன்றுநின் கொற்றம்
நாடெலாம் நலிந்து நசித்திடும் வரையும்
நகை புரிந்திருப்பாய் நான் சகித்திடவா!

– நான் செயக்கூடிய நற்செயல் இதுதான்

– நாயகன் இவ்விதம் நாடகம் ஆடிஞல்
நாட்டவர் துயரம்? நன்றுநின் கொள்கை.

– தக்கது நடைபெறும் தருணமே காத்துத்
தமியேன் இன்னும் தயங்கிநிற் கின்றேன்.

– தாரணி மக்கள் தாமழி வுற்றபின்
தருணம் வருமுன் தயவும் கனியும்.

– தருணம் வந்தே தயங்கி நிற்கின்றேன்.
தருக்குடன் செருக்கும் தாமே அழியும்
தருணம் வந்தே தயங்கிநிற் கின்றேன்.

– என்றுமுன் போக்கே இதுதான். இனிமேல்
இங்கு நான் நில்லேன் ஏகுவேன் என்வழி.

[பலராமன் வெளியேறுகிருர்]

– அண்ணு அண்ணு ... ...
... ... அய்யோ பாவம்
பண்ணுர் வேய்ங்குழல் பாடுவதென் தொழில்.

[வீமார்ச்சுனர்கள் பிரவேசம்]

– கண்ணு கண்ணு ... ...
... ... அண்ணு என்னது?

– அர்ச்சுன அது பார் ! அறிதுயில் புரிவான்.

– ஆமாம், வீமா, அயர்வு போலும்

[கண்ணபெருமாள் வரவேற்றல்]

– யாரது அர்ச்சுனு ? அன்பனே வாராய்.

- அண்ணன் வீமனும் அடியனும் வந்தோம்.

- வருவீர் வருவீர். வான்புகழ் கொண்டீர்
வருக. நும் வருகை நல்வர வாகுக.

- தூதன் வந்தான், துவாரகா புரியில்
யாதவர் கலகம் என்றுரை செய்தான்.

- ஆமாம் அப்பா. அதனையான் அடக்குதல்
ஆகாதென்றே அன்புடன் நுமக்குச்
செய்தியனுப்பினேன்—செயல் திறம் புரிவீர்!
நலந்திகழ் உங்கள் நாயகி மற்றும்
நாடெலாம் சுகமா? நல்லறம் ஒன்றே
நாட்டும் தொழிலே நாடிடும் தரும
நாயகன் செங்கோல் நலியா துளதா?

- யாவும் யாவரும் யாதவ நின்னருள்
போற்றி வாழ்கின்றேம், புதுமையாய் ஒருசொல்
விடுத்தாய், எம்துணை வேண்டினுய் என்று.
விந்தையாம் இந்த விடுகதை உண்மை
கண்டு வரவும் கட்டளை ஏற்றுக்
கடன் புரிந்திடவும் காதலால் விரும்பி
மாதவ, நின்னிடம் மன்னன் அனுப்பினுன்.

நல்லது, மகிழ்ந்தேன் நண்பர்காள், உங்கள்
வில்லும் கதையும் விளைத்திடும் அச்சம்;
அதனுல் யாதவர் அடங்குவர்; நாடும்
அமைதியில் ஆழும் என்றே அழைத்தேன்.

- கண்ண பிரானே கருணையங் கடலே,
என்ன பேச்சிது? ஈதெலாம் இந்த
ஏழைய ரிடமா? எந்தாய் வேண்டாம்.

உடையவர்

– வெற்றுரை விளையாட் டன்றுகாண். உங்கள்
வீரம் யானறி யாததா ? எனக்கோ
உடல்நலங் குன்றி உள்ளத் திட்பமும்
உலைந்தது கண்டீர். உண்மையில் உங்கள்
உதவியே எனக்கு உறுதுணை யப்பா.

– கண்ணு உனக்கும் கவலைகள் உண்டோ ?
கள்வெம் போரிடைக் கவலையுற் றேனைக்
கருணையால் ஆண்ட கண்ணனே மற்றுங்
கவலுதல் என்றால், கவலையைத் தீர்க்க
வல்லவர் யாரோ ? ... ...

– ... ... வல்லவன் நீயே,

– வல்ல பெருமான்! வல்லவன் நின்னினும்
யானென் றறைந்தாய். அடியன் நின் அடிமை.

– அர்ச்சுன, வீம, அன்பர்காள்! உங்கள் !
அன்புளம் யானறி யாத தல்லவே.
அலைக்கழித் திடவோ அழைப்பேன் ? அய்யோ
யாதவர் கூக்குரல் கேளீர். ...

[ஆரவாரம் கேட்கிறது]

... ... நீவிர்
துவாரகா புரிநகர்ப் புறமே சென்று
யாதவர் கலகம் அமைவுறக் கண்டு
திரும்புவீர் பின்னர் ஊர்திரும் பிடலாம்.

– ஆண்டவ நினது அடியோம்; ஆணை
சிரமேற் கொண்டு செல்லுவோம்; நினது
பதத்துணை போற்றிப் பரதர்தங் கோமான்
கட்டளைப் படியெங் கடன் புரிந்திடுவோம்.

என்றும்என் தோழனும் இனியாய் கண்ணு,
இன்றுமென் வில்லில் இருந்தருள் புரிவாய்.

– செல்லுமுன் ஒன்று செய்குவீர். முதலில்
அந்தோ பாரீர், ஆதரம் இன்றி
எழுந்து நடக்கவும் இயலா தவனாய்
இங்கே கிடப்பேன் என்னரும் தோழர்காள்,
இப்படி என் மருங் கிருபுறம் வருவீர்.
கைகொடுத் தென்னைக் கட்டிலில் அமர்த்திக்
கலாம் விளைந்திட்ட களம்புகுந் தெனக்காய்க்
காதல் உரிமையைக் காட்டுவீர். உமக்குக்
கைம்மா றியற்றக் கருதவும் இயலாக்
காலமும் வந்ததே கடியவெவ் விதிதான்.

வீமார்ச்சுனர் தமக்குள்

– அர்ச்சுனு என்ன ஆபத் தப்பா!

– அண்ணன் இப்படி வருமென் றெண்ணியே
அன்புடன் நம்மை எச்சரித் துள்ளார்.

களவீரன் பார்த்தனுடன்
கதையேந்தும் வீமனுமே
களக்கமுற்று நிற்பதனைக்
கண்ணபிரான் கண்டு கொண்டான்
கொளக்கருதி யவர்வலிமை
குறைத்திடுநற் கொள்கையினுன்
விளங்காத முறுவலினுன்
விளம்பியசொல் இதுவாகும்.

– என்ன தயக்கம்? என்னைத் தொடவும்
கூடா தென்ற கொள்கையா? அன்றிக்

உடையவர்

கோமகன் உமக்குக் குறித்ததும் இதுவா ?
வீமார்ச்சுனர்காள், வீரர்காள், உங்கள்
நண்பன் யானிங்கு நலிவுற் றிருத்தல்
கண்டீர் அன்றோ ? கணப்பொழு தெனக்குக்
கைகொடுப் பதற்குக் காலதா மதமேன் ?
இச்சிறு துணைஎனக்கு இயற்றத் தயங்குவர்
என்னரும் தோழர் என்பதை அறிந்திலேன்.

- அப்படியொன்றும் அகந்தையால் அன்று
அருமைக் கண்ணா.

- ... ... ஆமாம் கண்ணா
ஆணைப்படி யாம் ஆயிரங் காதம்
கடந்து வந்ததால் ... ...

- ... ... கருத்தும் சரிதான்
தூய்மைக் குறைவுடன் தொடக் கூடாதெனத்
தூரநீர் விலகித் தொல்லைப் பட்டீர்
என்பதை அறியா திருந்து விட்டேன்.
பாதக மில்லை பார்த்தா, வீமா
பக்கம் வருவீர் பரிவுடன் என்பால்
காளை அர்ச்சுனன் காண்டிபம் தருக
வீமா-நீ கதை வீக்கிப் பிடிப்பாய்
யானே அவற்றை இறுகப் பற்றி
மெதுவாய் எழுவேன். மேலும்ஏன் தயக்கம் ?

[தனித்து அர்ச்சுனனிடம்]

- வேறு வழியில்லை தம்பி ...

உடையவர்

– ... ... அண்ணு,
மறுத்தால் மாதவர்ப் பிழைத்தவ ராவோம்.

– மற்றவன் நன்றி கொன்றவர் ஆவோம்.
கண்ணன் பால்உன் காண்டிபம் தருக.

– மற்ருெரு பால் உன் மா கதை அளித்திடு.

– மாதவன் அருளே வாழ்வு நமக்கு

– வரப் பிரசாதம் வருவது வரட்டும்.

[மீண்டும் இந்திரப் பிரஸ்த
அரண்மனையில்]

4

- வருவது வரட்டும் வாராய் திரௌபதி

- ஒரு பதினறு உருட்டுவீர் காயை

- வென்றேன் என்ருல் வெற்றுரை தருமன்
ஒப்பிடான் பெண்ணே. உன்னிடம் வைக்க
உறுபொருள் உளதேல் உடன்அது கூறு.

- விளையாட்டிற்கும் வேண்டுமோ பணயம்?

- விளையாட் டெனினும் வினையாட் டெனினும்
வேந்தர்கள் சூது வெறும் பேச்சாமோ?

- வேற்றவை தன்னில் மேலைநாள் நம்மைப்
பரிசழித் திட்ட பாதகச் சூதிது
பொல்லாங் கன்ரே? போகிறேன் வேண்டாம்.

- போகா தேநீ போகலாம் இரு இரு.

- போதா யிற்றுப் போதுமே நாதா.

- போதா ஞல் என்? போகலாம் நில்லு.

- போங்கள் நல்ல பித்தம் உமக்கு.

- ஆட்டம் முடிய வில்லையே அன்பே.

- ஆடிமுன் பட்ட அவதிகள் மறந்தீர்.

- என்ன பேச்சிது? எதற்கோ இந்த
இன்ப வேளையில் இன்னல் நினைப்பு?

- இல்லை நாதா என்னவோ இன்று
என்னுளம் சஞ்சலம் எய்துகின்றது.

- சஞ்சலம் என்று சதுராய்ப்பேசிச்
சமயம் பார்த்து நழுவுகின்ருயே!

- நாதா உண்மையாய் நங்கை என் உள்ளம்
நடுங்கு கின்றது. ... ...

- ... ... நடுக்கமேன் கண்ணே?

- துவாரகை சென்ற துணைவரை எண்ணித்
தமியாள் கணந்தொறும் தவித்திருக் கின்றேன்.

- தொல்லைப் படுமென் உள்ளமும் தொல்லை
மறந்திடத் தான் இம் மாற்றம் கண்டேன்.

- நல்லது. பணயம் நவிலவா? ...

- ... ... நவில்க

- மன்னவர் தோற்ருல் மண்டலம் முழுவதும்!

- உனக்கே உரிமை. ஒப்பினேன் ஆடு!

- இல்லை இல்லை எனக்கேன் ஆட்சி?
காய்கள் உருட்டிக் காவலர் தோற்ருல்

கொற்றவெண் குடையும் குவலயத் தாட்சியும்
கண்ண பிரானின் கழலிணை சேர்க.

– மற்றுநீ தோற்ருல்? ... ...

– ... ... மன்னவர் விருப்பம்
ஏதா யினும் அது ஏற்பேன் அடிமை.
ஆட்டம் இத்துடன் அமைவமே போதும்.

– எப்படிப் போதும்? இன்னும் இங்கே
எத்தனை ஆட்டம் ஆடிட வேண்டுமோ
ஆடுக பகடை ... ...
... ... ஆநான் தோற்றேன்

வீமார்ச்சுனர் வருகை

– ஆம்திறல் அழிந்தோம்—! ... ...

– ... ... அர்ச்சுனு ! வீமா!

– ஆமாம் நாங்கள்தாம். ... ...

– ... ... அய்யோ ஈதென்?
அருள் பொழி வதனம் அடர்ந்ததேன் இருளாய்?
அர்சுனன் முகமா? அது யார் வீமனு?

– ஆமாம் அண்ணு அதுதான் முடிவு.

– காண்டிபம் எங்கே? வீமா நின் கதை?
விளம்புவாய் பார்த்தா விம்முதல் வேண்டாம்

– அண்ணு, துவாரகைக்கு அனுப்பினீர் அன்ரே?

- கண்ண பிரானின் கழலிணை சுகமா?

- என்ன நான் இயம்ப? என்னுயிர்க் குயிராம்
மாயக் கண்ணன் மறைந்தனன் அண்ணா?

- தம்பீ என்ன தலைமேல் இடியா?

- உலகப் பேரிடி. உண்மை, எங்கள்
உடைமைகள் யாவும் உடன் கொண்டு போனான்.

- கதையும் அந்தக் காண்டிவ வில்லும்
கண்ணன் கரத்தால் காதலால் பற்றி
எழுந்தனன் அண்ணா, எழுந்ததும் எங்கள்
தோள்வலி யவன்பால் தோய்ந்து மறைந்தது.

- காண்டிவ வில்லைக் கையால் பற்றவும்
வலிமை என்பால் வற்றிடக் கண்டேன்.

- கதையை அசைக்கவும் கைவலிப் பதனைக்
காணநான் அழிந்தேன், கனவாய் முடிந்தது.

- எங்கள் கனவின் இறுதியில் கண்ணன்
எழுந்தனன் போனான் என்பதும் கேட்டோம்.

- கேட்ட மறுகணம் கேட்டதோர் செய்தியைக்
கூறிட நெஞ்சம் குமுறு கின்றது.

- மாதவன் சென்று மற்றவர் பூசல்
மாற்றியே ஆங்கோர் மரநிழல் வீற்று
ஆறுதல் கொள்ள அமர்ந்த வேளையில்
கண்ண பிரானின் காற்பெரு விரலிற்
கணையொன் றெங்கோ கதுமெனப் புகுந்து
காலம் முடிந்தது, கலகமும் ஓய்ந்தது.

உடையவர்

- ஓய்ந்தது உலகின் ஒரு பெரும் நாடகம்
ஓடோடி வந்தோம். ... ..

- ... ... ஓஹோ! உலகை
ஊதி நிறைத்தவன், உடைமைகள் யாவும்
உடன்கொண்டு சென்ருன், உண்மைக் கருத்தை
உணர்த்திய வாறே உணர்வோம் நாமும்.
உடையவன் நம்மை உடன் அழைக்கின்ருன்.
உலகில் நல்லறம் உறுதியாய்க் காட்டி
ஒருபெரும் திரையில் ஓவியம் தீட்டி
உலகில் மாந்தர் உவத்தலும் காய்தலும்
ஒழித்தவன் அருளே உளத்திற் கொண்டு
ஒழுகுதல் கடனென உணர்த்திஞன். அந்த
உண்மை உலகிற் குணர்த்திநம் வாழ்வை
முடித்துக் கொள்வோம். முழுமுதல் வாழி.

★யுகம் முடிந்து போயிற்றென் றுணர்ந்து கொண்ட
யுதிட்டிரனு தியர் உடனே வானம் சென்ருர்.
இகல்வென்ற பாண்டவரின் காலத் தோடே
இப்புவியில் கலிபிறந்தான். கண்ணன் காட்டும்
வழியொன்றே வாழ்வாங்கு வாழ்வித் திந்த
வையகத்தை வானகமாய்ப் புரியு மென்றே
தொழுதுபுகழ் பாட்டெழுந்து தொலேவில் கேட்கும்
தொல்லுலகில் உடையவனைத் துணையாய்க்கொண்டே

[தொலேவிலிருந்து வரும் குரல்].

மாயக்காரனுடி —கிருஷ்ணுரி
மகுமைக் காரனுடி —ராமாரி.

குருவிக்கூடு

[குலக்கொடியும் குணவதியும்]

1

★வெப்பம் தணிந்து வெயில் இறங்கிற்று.
செப்புத் தகடாய்ச் சிதறிய மேல்வான்
கொப்பளித் திட்ட குருதியில் அந்தக்
குப்பத் திருக்கும் கூரைகள் நனைந்தன.
பழங்குடிப் பெரிய பண்ணையார் தோட்டப்
பகுதியில் ஆங்கோர் பழைய தடாகம்
அடிமண் வண்டல் ஆயிரம் மீன்கள்
துடித்துப் புரண்டன தோய்ந்தன உறைந்து.
செப்புக் குடத்தைச் சேர்த்திடும் இடைதான்
சிறிதே துவளச் செங்கை வீசிக்
குப்பத் தழகி குலக்கொடி என்பாள்
குணவதி என்னும் தோழிப் பெண்ணுடன்
குளக்கரை மேட்டிற் கோணலாய் வளர்ந்த
தென்னையின் கீழே தேடிவந்து அமர்ந்தாள்.★

– வெடித்துக் கிடக்கும் வெற்றுத் தரையில்
விடலிகள் வெறித்து நிற்பன பாராய்

– ஆமாம், குலக்கொடி, அடிநிலம் வெதும்பி
அனல்மூச் சிறைக்கும்; ஆடலை காற்று.

★குலக்கொடி இதனைக் குறிப்பாய் உணர்ந்தாள்
நெஞ்சம் புகைந்து நெடுமூச் செறிந்து

நிற்கும் தனது நிலையைத் தோழி
கண்டு கொண்டாள் என்றவள் கண்டாள்,
நிமிர்ந்தாள். அந்த நெடுமரத் துச்சியில்
கூடி வாழும் கொள்கையில் இரண்டு
சிட்டுக் குருவிகள் சிறகடித் திருந்தன.
குணவதி பேச்சைத் தொடங்கினுள் மேலும்;★

- தெண்ணீர்க் கயத்தின் தேன்சுனை வற்றிப்
போனதும் இந்தப் பொன்மலர்ச் சோலையே
பட்டுப் போனதே ... ...

- ... ... போகாது என்னும்
புத்துயிர் பொன்மழை போந்தால் பொலியும்

- குலக்கொடி அதோபார் குலவு தாமரைக்
குளமே காய்ந்து குழம்பிக் கிடப்பதை.
கொடிகள் தீய்ந்தன. கும்பிச் சேற்றில்
சிறுகால் நண்டுகள் சிறுமீன் சினையெலாம்
சேரக் குமைந்து சிதைவன பாராய்,

- வாரி வழங்கிய வாழ்வினர் வறிஞராய்
வாடி வதங்கி வருந்துதல் போன்று
வற்ருப் பொய்கையும் வறண்டது. என்செய?

- மற்றுஅவர் நிழலில் மாண்புடன் வாழ்ந்த
உற்ருர் போன்று உதிர்வன சிற்றுயிர்.
குலக்கொடி அதோபார் கோரக் காட்சி.

- குவலய வாழ்வே கோரமாய்ப் போனுல்
குளக்கரை உலகம் குதுகலித் திருக்குமா?

- பாவி நாரையைப் பாராய் சுற்றிலும்
பாரை அளந்து அளந்து பார்ப்பதை.

– யாரும் பார்க்க வில்லையென்று அமைய.

– நாசமாய்ப் போக நாரை ...

– ... ... நில்நில்
நாரையைச் சபிக்க நாயமே இல்லை.

– கொடிய மனத்துக் குளக்கரை நாரை
கூர்அல காலே கொத்திஓர் மீனைத்
தூக்கிப் பிடித்துத் துடிக்கும் உயிருடன்
குசலம் பேசும் கொடுமையைப் பாராய்.

– என்ன வியப்பிதில்? இந்த உலகில்
எரியும் வீட்டின் கூரையில் பிடுங்கிக்
கொண்டது லாபம் என்றே கருதும்
கொள்கை யுடையோர் கொடுமையை விடவா?

– நாரைவாய் மீன்உயிர் நடுங்கும் காட்சியும்
நாட்டு மக்களின் நடப்பும் ஒன்றுதான்.

– நாரையின் பசியை நாம் அறிவோமா?

– ஆயினும் இந்த அநீதம் அடுக்குமா?

– அவரவர் பாடு – அவரவர் தேவை
அவரவர் அவதிகள் அவ்விதம் தானே?

– மீனின் துயரம்? ... ...

– ... ... மேலும் தொடர
வேண்டிய தில்லை. விண்வாழ்வு அதற்கு

– என்ன சொல்கின்ருய்? இறப்பது இன்பமா?

- இன்பமோ துன்பமோ என்றெலாம் என்னைக்
கேட்டா தெரிய வேண்டும்? இதுசொல்
இன்னும் இரண்டே நாட்கள் இவ்விதம்
இருந்தால் குளத்தின் சேறுஎன் ஆகும்?

- கல்லாய் இறுகிக் கட்டாந் தரையாய்க்
காணும் தாமரைக் கயம்இது உண்மை

- சேற்றுப் பத்தையிற் சென்று புதைந்து
சிறுகச் சிறுகச் செத்து மடிவதை
விடவும் இந்த வித்தக நாரையின்
பசிக்குண வாகிப் போவதே பதமாம்

- உண்மை குலக்கொடி, முற்றிலும் உண்மை
செத்துக் கொண்டே இருப்பதைக் காட்டிலும்
சாவறியாமல் சாவது மேல் மேல்,

★இளைய வயதினள் எழில்நலம் மிக்கவள்
குப்பத்து மிராசுக் குலக்கொடி, அன்னையை
அன்புத் தந்தையை ஆண்டநாள் வாழ்வை
இழந்தவள். உலகில் இவள் பால் இரங்கி
இன்னுரை பேசவும் இதம்புரிந் திடவும்
யாரும் இல்லாள் ஆயினும் வளர்த்த
செவிலித் தாயின் மடியில் அன்பு
செழித்திடும் கரத்தில் சேர்ந்து வளர்ந்தவள்
சிந்தை கலக்கிடும் சேதியை ஒவ்வொரு
கணமும் எண்ணிக் கருகிய நெஞ்சுடன்
காய்ந்த கயத்தின் கரையில் இவ்விதம்
சொற்கள் ஆடி இருந்தனள் அந்தத்
தென்னை மரத்தில் சிட்டுகள் பேசும் ★

[குருவிகள் பேச்சு]

– நாரெடு நாரெடு நாரெடு புல்லின்
கூறிடு வைக்கோல் கூளம் எடுஎடு

– கூடொரு கோட்டை கட்டிய பின்னர்
ஆடிடு தென்றல் ஆடுவம் ஊசல்

– கூடொரு வீடும் கூடிட நீயும்
கோது கலத்திற் குலவிடல் இன்பம்
நாரெடு நாரெடு நாரெடு நாணற்
புல்லொடு சிம்பு கிழித்திடு முடைய

– முடைந்தொரு கூட்டில் மோகனம் பாடி
முயங்கிடு வோம்நாம் மூடிடு கதவை

– பேடென நின்னைப் பெற்றதென் பேறே
பேற்றினள் நீயுனைப் பேணுவன் பெண்ணே

[குலக்கொடியும் குணவதியும்]

– குலக்கொடி கேளாய் குருவிகள் பேச்சை

– குணவதி, இறைவன் கூட்டிய இன்பம்
குற்றமில் பிறவிகள் ... ...

– ... ... குவலய மாந்தரும்
கொள்ளை ஒளியில் நீந்திடக் கற்ருல்

– விடுதலை இன்பம் விளங்கிடக் காண்பார்

– பொழுது போயிற்றுப் போவோம் குலக்கொடி

– போவோம் புறப்படு பொழுது போயிற்று

(குலக்கொடியும் செவிலித்தாயும்)

2

– குலக்கொடி குலக்கொடி கொள்ளை கொள்ளை?

– என்னது பாட்டி? ... ...
... ... என்னநான் சொல்ல
தலைக்கே வந்து விட்டது. தப்ப
வழி தெரியாமல் வதைகிறேன் கண்ணே

– என்ன கலக்கம்? எதுவந்தால்தான்
என்ன செய்யப் போகிறோம்? வருவதை
வழிவிட் டொதுங்கி வாழ்வோம் ...

– ... ... வாழ்வா
ஆண்டநாள் ஆண்ட அனைத்தும், மற்றுன்
அன்னையும் தந்தையும் போயினர். அந்த
அரண்மனை வாழ்வும் ஆளுத செல்வமும்
போயினும், அருமைச் செல்வமே உன்னை
வளர்க்கும் அதிட்டம் வாய்த்த பெருமையால்
கூனல் கிழவியாய்க் குற்றுயிர் சுமந்து
நிற்கிறேன் இன்று, நிற்கவும் ஓர்நிழல்
இல்லா துன்னை எளிதில் விரட்ட
வெவ்விதி வந்தால் வெல்லுவ தெப்படி?

– வெவ்விதி காட்டும் வீதியில் நடப்போம்

– எவ்விதம் இதனை ஏற்பேன் செல்வி?

– பழையனூர் மிட்டாப் பாண்டியன் ஆட்கள்
வருவார்; தந்தை வறுமையால் முன்னம்
பட்ட கடனும் பாக்கி வட்டியும்
பின்னைச் செலவும் பேர்த்து லாபமும்
ஒன்ருய்க் கூட்டி இவ் ஒற்றை வீடும்
உலர்ந்த தோப்பும் உடைமை கொள்ள
வருவார் என்றே வழிபார்த் துள்ளேன்
வாட்டம் எனக்கிலை வருந்தேல் பாட்டி

– என்ன சொல்கிருய்? இருக்கும் இந்த
ஒற்றைத் தோட்டமும் ஒண்டும் நிழலும்
விட்டுனை விரட்ட வீறுடன் ஒருவன்
நாளை வருவதை நான்பார்த் திருப்பதா?

– கூடா தென்ருல் கொள்ளைப் பணத்தைக்
கொடுத்தவர் அதனைக் கொள்ளுதல் தவரு?

– குலக்கொடி நீ! உன் தோழி குணவதி!
குழந்தைநீ ஒன்றும் குறிப்பாய் அறியாய்.
கூனற் கிழவிநான். கோடிநாள் ஆண்ட
வாழ்வும் அந்த வாழ்வில்உன் தந்தை
வந்தவர் போனவர் யார்க்கும் யாவும்
வரையா தளித்த வாய்மையும் இந்தக்
கண்ணுல் பார்த்த காலக் கிழவி நான்

– இருக்கலாம். ஆனுல் எதுவுமே கனவாய்
கதையாய்ப் பொய்யாய்க் கரைவதும் கூடவே
கண்டிருப் பாயே காலக் கிழவி நீ

– பழங்கதை மறந்த பாதக நெஞ்சுப்
பழையனூர்க் காரப் பாண்டியன் என்று

பற்றி எரியும் பாவியென் நெஞ்சு
அவன் இன்று ... ...
வாழும் வாழ்வே யாரால் என்று
அந்தநாள் பவிசு யார்தான் அறியார்?

- நம்மால் என்று நவில்வாய். ஈதெலாம்
கையா லாகாக் கதையே. பழங்கதை
கவைக்குதவாது. கணக்குப் படிஅவர்
கடனைத் தீர்க்கும் கடன் நமக்குண்டு
மாட்டோம் என்ருல் மற்றவர் விடுவரா?
விட்டாலும் நாம் விரும்புதில் மரபா?

- விடுவார் என்றே விடட்டும் என்றே
வித்தகம் பேசும் விழைவிலை எனக்கு

- பின்னர் எதற்கு? பேச்சை விடுநீ
அமைதியாய் இருப்போம் அதிட்டம் போல
வருவது வரட்டும் வருவதை ஏற்போம்

- மலைகுலைந் தாலும் மனங் குலையாத
மன்னன்உன் தந்தை. அவன்மகள் தானே
மற்றுநீ மாற்றம் உரைப்பையோ கண்ணே

- குலக்கொடி என்றெனைக் கொள்ளை யன்புடன்
கூவி யழைக்கும் கொள்கை தவறிக்
கோணல் வழியைக் கொள்ளவோ பாட்டி?

- சற்றிரு ஏதோ சத்தம் கேட்போம்.

[பறையறைதல்]

3

ஊர்மக்கள் யாவரும் உணர்கவே தீம்தீம்
உடன் இந்தச் சேதியை உணர்கவே தீம்தீம்
பழையனூர் மிட்டாப் பாண்டியர் தமக்குப்
பட்டதோர் கடனுக்குப் பாத்தியம் ஆக
பண்ணையார் வீட்டுத் தோட்டமும் இந்தப்
பாழ்மனை ஒன்றும் பலர்முன் னிலையிலே
விற்கவே ராஜாங்கக் கட்டளை தீம்தீம்
விலைகொள விழைகுவோர் விரைகவே தீம்தீம்.

[ஊர் மக்கள்]

- அண்ணே என்ன அநியாயம் இது?

- குடியாய் இருந்த வீட்டில் கொள்ளி
  வைக்கும் உலக வழக்கம் தம்பி

- காலையில் வில்லைச் சேவக ருடனே
  காரில் வந்து இறங்கியவர் யார்?

- பழையனூர்ப் பாவி பாண்டியன் பெற்ற
  பிள்ளையாம் ... ...

- ... அந்த பிள்ளைக் கன்றே
  பண்ணையார் மகளைப் பரிசம் என்று

- பேச்சு நடந்தது பண்ணையார் வாழ்ந்த
காலத்தில் பின் அக் ... ...

- ... ... காலமும் போகக்
கடனும் பெருகக் கயவர்கள் சூழ்ந்து
ஏய்த்துப் பிழைத்ததும் ... ...

- ... ... எல்லாம் தெரியும்

- இருந்த தெல்லாம் இழந்து பண்ணையார்
எண்ணம் உடைந்தார் ... ...

- ... ... எப்படி வாழ்ந்த
குடும்பம் இன்று எப்படிப் போச்சு?

- வாரி வழங்கிய வள்ளலின் கையில்
வாங்கிப் பிழைத்த வகையெலாம் மறந்தார்

- வறுமையோர் கொடுமை. அதுவும் வள்ளல்

- வறியனுய்ப் போனுல் வன்க ணுளர்கள்
கொத்திப் பிடுங்கும் கொடுமை தகாது

[பழையனூர்ப் பாண்டியன் மகனும்
அவனது பரிவாரமும்]

4

- யாரது உள்ளே ...

- ... ... யாரது?

- ... ... கதவைத்
திறப்பீர் சர்க்கார் சேவகர் நாங்கள்

- இந்த வீடுதான் எஜமான், இதன்பின்
புறத்தில் ஓர் தோப்பும் புல்வெளிக் கப்பால்
போகும் பாட்டையின் பக்கத் திருக்கும்
குளமும் கணக்கில் குறித்திருக் கின்றது,

- கணக்கெலாம் சரிதான். கந்தா நீவா.
காவலுக் கிருவர் காத்து நில்லுங்கள்
நாம்போய் இங்கு நாலாபக்கமும்
சுற்றிப் பார்த்துச் சொத்தின் எல்லையும்
ஏல மதிப்பும் என்னதான் என்று
கணித்துப் பார்க்கலாம் ... ...

- ... ... காலின் கீழே
பார்த்து வாருங்கள். பாதையில் எங்கும்
நெருஞ்சிமுள் கிடக்கும் நேரே சென்று
ஒற்றைத் தடத்தின் ஓரமாய் நடப்போம்

- கந்தா நமது கணக்கின் படிக்குச்
சேர வேண்டிய செல்வம் எத்தனை!

- பன்னீ ராயிரம். அத்துடன் பத்து
வருடமாய்ச் சேர்ந்த வட்டியும் கூட்டி
வசூல் செலவுக்கும் வகைசெய் வித்துக்
கோர்ட்டார் முத்திரை கொடுத்திருக் கின்ற
தொகையின் மொத்தம் ... ...

- ... ... தொலையட்டும் இரு
இந்த வீட்டின் எடுத்துக் கட்டும்
தோப்பின் அழகும் தொன்மையாய் ஆண்ட
வாழ்வின் கனிவை வகுத்துரைக் கின்றன.

- உள்ளது எஜமான் உள்ளது ...

- ... ... என்னது?

- தாங்கள் உரைத்தது ... ...

- ... ... தனியாய் இங்கோர்
தென்னை மரம்பார் ... ...

- ... ... தென்னை மரந்தான்

- அஷ்ட கோணலாய் அவலட் சணமாய்
அழகு மேடையின் அருகில் வளர்ந்து
நிற்பதை யாரும் நினைக்கவே இல்லையோ?

- இல்லை... யென்றுதான் எண்ணுகின் றேன்யான்

- நாளை முதலே நமதாய் இந்தத்
தோட்டமும் வீடும் சொந்தமாய் விட்டால்
முதலில் இந்த முடக்குத் தென்னையை
வெட்டி எறிந்து விடத்தான் வேண்டும்,

– வெட்டி விடுவோம் ஆனால் ...

– ... ... ஆனால்

– ஒன்று மில்லை. ஒற்றைத் தென்னையின்
மேலே குருவிகள் மேவிடும் கூடு
கட்டி இருப்பதால் கலைப்பது எப்படி
என்று தான் எண்ணிப் பார்க்கிறேன்.

– ... ... என
பாதகம் இல்லை. பார்ப்பதற்கு அழகாய்
பாத்தியும் பன்னிற மலர்ச்செடி கொடியும்
பக்குவ மாகப் பண்ணை வளர்த்துப்
பார்க்க வேண்டும். பதில்சொல் லாமல்
நாளையே தென்னையை நறுக்கி விடுநீ.

– சித்தம் போலச் செய்து விடுகிறேன்.

★என்றே கந்தன் எதிர்பே சாமல்
ஏன்று கொண்டான் இளையோன் அங்கு
எழிலார் சோலையின் இடையில் தென்றல்
நுகரும் மேடையை நோக்கினன் எதிரே
எட்டிய மட்டிலும் எல்லாப் பகுதியும்
இருகண் ணாலே ஏந்திப் பருகி
இறும்பூ தெய்தி இருந்தான். இன்னும்
சிறிது நேரத்தில் செல்வம் அனைத்தும்
சிக்கும் கைவசம். சிறப்பாய் அந்தப்
பாழ்மனை தன்னைப் பளிக்கரண் மனையாய்ச்
செய்ததில் சேர்ந்து வாழலாம் என்று
கனவுகள் கண்டு களித்தே இருந்தான்.
விடுவிடு சிவசிவ விடுவிடு என்றே
விந்தைக் குரல்கள் விம்மிப் புடைத்து
வீங்கும் தென்னையை விட்டிரு குருவிகள்

வீட்டை நோக்கி விரைந்து செல்வதும்
வெளியே வந்து திகைப்பதும் ஓடிப்
புதரில் குப்பையைப் புகுந்து குடைவதும்
புத்தம் புதிய ஓலைகள் அலகால்
சீச்சிக் கிழித்துச் சிறியவாய் பற்றிச்
செல்வதும் சிறகை அடிப்பதும் அந்தச்
சந்தடி இளைஞன் சஞ்சல மனதைச்
கவ்வி யிழுத்தது, கலவரத் தோடு
கண்டதோர் மாளிகை யுட்புறம் காணக்
கருத்தில் விரும்பினான். கணக்கரும் அவன்பின்
கைகள் கட்டி நடந்தார்—பழைய
மாளிகைக் கூடம், மற்றதை ஆண்ட
மன்னவர் படங்கள் மாட்டி யிருந்தன.
புகையும் ஒட்டடைப் புழுதியும் அந்தத்
திருவினர் உருவைத் திரையிட் டிருக்கவும்
அனைத்தையும் கூர்ந்து ஆய்ந்து முடித்தே
ஆங்கொரு பழைய ஆதனம் தன்னில்
அமர்ந்தான்; அந்தப் போதினில் பழைய
சிட்டுகள் இரண்டும் சிறகடித்து ஏதோ
சேதிகள் பேசிச் சிரித்தவ் வீட்டின்
கூடத்து அங்கு கூடி முயன்று
கூடு கட்டிக் கொண்டிருப் பதையும்
குறிப்பாய் பார்த்தான்—குருவிகள் பேசின. ☆

- விடுவிடு விடுவிடு என்னது அந்தத்
தென்னையை விட்டுத் தேடித் தேடி
பாழ்மனை இதற்குள் பதுங்கிட வோநீ
அழைத்து வந்தாய்? அந்தத் தென்னையில்
ஆபத் தென்ன வந்தது? விடுவிடு,

- ஆமடி பெண்ணே அதோபார் மூலையில்
ஆணவத் தோடு அமர்ந்திருக் கின்றான்

அவன் இனிமேலே அரண்மனை எஜமான்
வெட்ட வெளியில் வீசிடும் தென்றலில்
கட்டிய் கூட்டைக் கலைத்திடத் திட்டம்
கருத்தில் வைத்தான்-கண்ட துண்டமாய்
குடியிருந் தோமே கோணல் தென்னையைத்
தறித்திடத் தயவு தான்வைத் திட்டான்
ஆதலால் இந்த ஆபத்து வேளையில்
அவன் அரண்மனையில் அடக்கமாய் நமது
கோட்டையைக் கட்டிக் குடியிருந் திடுவோம்.

- விடுவிடு சீசீ விடுவிடு இந்த
சிறுமைக் கோநாம் சிந்தை தளர்வது?
சிட்டுக் குருவிகள் சிந்தை மகிழ்ந்து
கட்டிய கூட்டைக் கலைப்பது எண்ணம்
சிறந்தவர் என்றும் செய்வதிங் கில்லை.
அப்படி இருக்க அவன்நம் தென்னையை
வெட்டினுல் அந்த வீணனுக் குரிய
வீட்டைப் பின்னும் விழைவதா விடுவிடு

- ஆமடி கண்ணே அதுவும் சரிதான்
பேறு காலத்தில் பெடையுனை இந்த
விபத்து வேளையில் வேறிடத் தெங்கே
அழைத்துச் செல்வதென்று ஆலோ சித்தேன்
அதோ பார் அடுக்களைக் கதவு திறந்து
அழகியும் வந்தாள்.

- ... ... அவன் விழிக்கின்ருன்.

- ஆம் அவள் ஏதோ அறைகின் ருளதை

- நாமும் கேட்போம். ... ...

- ... ... நல்லது விடுவிடு,

[விருந்தோம்பல்]

5

- அய்யா அய்யா ... ...

- ... ... யாரது? யாரோ
பெண்குரல் அன்றோ பேசுகின்றது

- ஆமாம் அய்யா ... ...

- ... ... யாரது தாங்கள்?

- முந்திஎன் தந்தையும் முந்தையோர் தாமும்
வாழ்ந்த குலத்தின் வாரிசாய் வந்தவள்
உங்கள் கடனுக்கு ஒப்படி செய்யும்
உரிமையும் கடமையும் ஒருங்கே பெற்ற
ஒருத்தி நான்தான் ... ...

- ... ... ஓஓ சரிதான்
வீட்டில் வேறு எவரும் இல்லையோ
உற்றார் சுற்றத் தார்உடன் பிறந்தார்?

- பரந்த உலகும் படைத்த கடவுளும்
பார்த்திருக் கின்ற விதியும் பெற்ற
வறுமையும் என்னை வளர்த்த கிழவியும்
நானும் உள்ளோம் ... ...

– … … நல்லது உனக்கு
நான் செய்உதவி உண்டெனில் நவில்க

– இல்லை அய்யா எங்கள் குலத்தில்
பிறரிடம் உதவி பெறுவது என்ற
வழக்கம் இல்லை. வருவோர் தமக்கு
வழங்குவ தொன்றே வாழ்வின் பாங்கு

– என்னது? … … …

– … அதுதான் எங்கள் மரபு
ஆனால் இன்று … …

– … … ஆக வேண்டியது ?

– உண்டது ஒன்றே…உரிமை உமக்காய்
உடைமைகள் இன்று ஒப்படி செய்து
செல்லுதற் கின்னும் சிறிது நேரம்
இருக்கின் றதனால் இந்த வேளைக்கு
இறுதியாய் இந்த வீட்டில் அடுப்பு
மூட்டினேன் … … …

– … அதனால் … …

– … … முன்னர் தாங்கள்
உண்டபின் நானும் உடன் எனைப்பேணி
வளர்க்கும் முதியவள் தானும் உண்டபின்
வெளியே செல்ல வேண்டும் இந்த
விருப்பம் ஒன்றே விநயத்துடன் யான்
அறிவித் துக்கொண் டேன் அது தாங்கள்
தட்டாது ஏற்றுத் தயைசெய வேண்டும்

– என்ன என்ன என்ன? என்னையா
விரும்பி விருந்துக் கழைக்கின் றீர்கள்?

வேண்டாம் வேண்டாம்! வேலேக்காரன்
வருவான் உணவும் வாங்கி வருவான்

– வருவான் அறுசுவை உணவுடன்! பெரிய
செல்வர்க் குணவு தரும்பெரு மைக்கோ
அல்லாது ஏதும் ஆசிப் பதற்கோ
எண்ணி இவ்வேழை இன்றுவிருந்தை
அளிக்க விரும்பினுள் என்றே, அன்றி
என்பொருள் தங்கள் இன்பொருள் ஆகும்
இந்நாள் எங்கள் இறுதி உணவை
ஏற்கச் சொல்வதில் ஏதும் வேறு
கருத்தோ என்று கருதல் வேண்டா.

- அப்படி ஒன்றும் இல்லே-அம்மா
வேண்டாம் வேண்டாம் பசியே இல்லே.

– வீட்டில் விருந்தினர் வீற்றிருக் கையிலே
உள்ளே யாரும் உணவை அருந்தும்
வழக்கம் எங்கள் வாழ்வில் என்றும்
இருந்த தில்லே; உடைமைகள் யாவும்
என்னிடம் இந்த நேரம் இருப்பது
உண்மை. அந்த உரிமை உமக்கு
மாற்றும் வரையில் மரபிணக் காக்கும்
கடமையும் என்பால் காத்திருக்கின்றது.

– உங்களே உணவு உதவிடு மாறு
ஒன்றும் கேட்க வில்லேயே இன்று

– மறுக்கா தீர்கள் மற்றுஇன் றியான்செய்
அமுதிணத் தாங்கள் அருந்த வில்லேயேல்
சமைத்த உணவும் சரியாய் மூடி
வைத்து நாங்கள் வழியே செல்வோம்.

விருந்திலா உணவை விரும்பி அறியா
வீடிது இந்த வீட்டில் அந்த
மரபினை யேனும் மாண்புறக் காத்து
மற்றிச் செல்வம் மாற்றிக் கொடுத்துச்
செல்ல எனக்குச் செலவு தருதல்
கூடவா பிசகு? கொள்கையில் தவறு?

★ வீட்டிலோர் மேட்டில் வீற்றிருந் திதனைக்
கேட்டன சிட்டுக் குருவிகள் இரண்டும் ★

எடுஎடு நாதா எழுந்திடு நீயும்
ஏந்திழை யாளின் எண்ணம் பாராய்

- வாழ்வைப் பறிக்க வந்தவன் தன்னையும்
வருந்தி யழைக்கும் வள்ளல் தன்மை

- வழிவழி யாகப் பெற்ற குலக்கொடி
வாய்மையும் வாசக மேன்மையும் பாராய்

- திருதிரு வென்று திகைக்கும் அவனையும்
கலங்கிடச் செய்யும் கனிவுடன் அந்தக்
கண்மணி குலக்கொடி காரியம் பாராய்!

- நடக்கும் நாடகக் கதைபோல் காண்பது
நனவா கனவா நன்ரு தீதா
என்றெதும் எண்ணிப் பார்க்கவோ அன்றி
ஏதும் மறுத்துக் கூறவோ இயலா
மயக்க நிலையில் மற்றவ் விளைஞன்
சூத்திரப் பாவையாய்ச் சொற்படி கேட்டு

நங்கைதன் பின்னே மயங்கி நடந்து
சென்றிடல் பார்பார் ... ...

- ... தளிர்இள வாழைத்
தடுக்கில் அமுது தான்படைக் கின்ருள்

★ காளேயும் யந்திர கதியில் அவள்கை
உணவிளே ஏற்று உண்டபின் தளர்நடை
இட்டு நடந்துஅவ் வில்லத் தந்தப்
பெரிய வீட்டின் பெருமையால் எண்ணம்
வீங்கிய நெஞ்சில் விம்மிடும் உணர்ச்சியில்
வந்தொரு பலகையில் வாயடைத் தவனுய்
மோட்டு வளேயில் முடைந்திடும் கூட்டுக்
குருவிகள் வீட்டைக் கலேத்திடல் கண்டான்

சிவசிவ விடுவிடு சிவசிவ வென்று
சிறகால் அலகால் சிறுகால் விரலால்
சிந்தி யழித்துச் சிற்றில் சிதைத்துச்
சிடுசிடு படுபடு சிடுசிட் டென்று
பேசும் கருத்தில் பித்துற எண்ணம்
போக்கி யிருந்தான் பொழுதும் மெதுவாய்ப்

போய்க் கொண்டிருந்தது போகவும் மற்ருேர்
நாழிகை சென்றது நங்கையும் அமுது
முடித்தவள் மெதுவாய் முக்கா டிட்ட
முழுமதி வதனம் முற்றும் தரையில்
கவிழ்த்து நடந்தாள் கட்டிய சிறிய

மூட்டைஒன் றங்கே மூலேயில் இருந்தது
மாற்றுடை ஒன்றே. மற்றதைக் குனிந்து
எடுத்துக் கொண்டாள் என்பதும் பின்னர்

ஏறெடுத் தந்த இல்லம் முழுவதும்
ஒருமுறை பார்த்து ஒண்டொடி தனது
உள்ளம் நிறைந்த நெட்டுயிர்ப் பொன்றை
விட்டுப் பின்னர் வெளியே சென்றதும்
கண்டான் இல்லை அவன் கருத்தெல்லாம்

குருவிக் கூட்டின் கொள்ளை ஒலியில்
கொட்டும் உணர்ச்சி கொப்பளித் தந்தச்
சிட்டுகள் செப்பும் செய்தியை வாங்கிச்
சிந்தையில் நிறைத்துச் செய்கை திகைத்தான்
செப்பும் பேடைச் சிட்டொரு பேச்சு. ★

- போ போ மாட்டேன்... புண்ணியவதியாள்
  செல்லும் திசையிற் செல்லுவேன் நானும்

- சரிசரி கண்ணே போவோம் போவோம்
  போய் அவள்வாழும் பொட்டலில் நாமும்

- புழுதியில் அளைவோம் ... ...

- ... ... புண்ணியம் அதுவே

- கோணல் மரமாம் கொள்ளைபோய் விடுமாம்
  கொத்தி அதனைக் குறைத்திடு வானும்

- அழகாய் இல்லையாம் ஆண்டவன் படைத்த
  தென்னையின் பெருமையித் தீயவர் அறிவரோ

- திரும்பியும் பாரோம் திருவும் திமிரும்
  ஏதுக்'கு வேண்டும்? ஏழையர் உடமை
  எடுத்துக் கொண்டான் ... ...

- ... ... இட்ட சோற்றையும்
ஏற்றுக் கொண்டான் ... ...

- ... ... இனியவள் நடந்து
ஏகும் உண்மையை, ஏங்கும் உள்ளத்து
ஏழையர் துயரை எண்ணியும் பாரான்

- இவனுடை வீட்டில் இனிமேல் கணமும்

- இருத்தல் தீது ... ...

- ... ... ஏகுவோம் விடுவிடு
ஏந்திழை வெளியே எங்கோ நடந்து
செல்கின்ருளே ... ...

- ... செல்லுவோம் வா வா

☆ சிட்டுக் குருவிகள் சிறகை யடித்துப்
பாய்ந்து வெளியே படபடத் தெங்கோ
செல்லும் திசையிற் சேர்த்திடும் நெஞ்சம்
துணுக்குற் றந்தத் துரைமகன் தனது
உணர்வு பெற்றதும் உடனே தன்னைச்
சுற்றிலும் பார்த்தான், சுடரும் பகலில்

வீட்டில் இருட்கடல் வீங்கிப் புடைத்து
விம்மி நிறைவதைப் போலவும் அந்த
வீட்டின் வெளியே விந்தைத் தெருவில்
வீசி நடக்கும் வியப்பின் ஒளியாய்
தொலைவில் மறைந்து மறைந்தவள் செல்வதும்
சிந்தையில் உண்மை சேர்த்திட அவனும்
பித்தம் பிடித்த பேரொலிக் குரலால்... ☆

– குலக்கொடி நில் நில் குலக்கொடி நீ நில்
குற்றம் பொறுப்பாய் குலக்கொடி என்குலம்
வாழ்ந்திட மீண்டும் வருவாய் குலக்கொடி
அன்பே என்றன் அருமைக் குலக்கொடி
அன்புத் தெய்வம் என்குலத் தெய்வம்
எங்கே சென்ருய்? எங்கே சென்ருய்
இருஇரு பேதை என்னேயும் கொண்டுசெல்
நிற்பாய் குலக்கொடி குலக்கொடி

★ ... ... என்றே
ஓடினுன் ஓடினுன் ஒண்டொடி சென்ற
திசையில் வானில் திரும்பிப் பாராக்
குருவிகள் செல்லக் குமரனும் கீழே
மண்ணில் அவ்வழி பற்றிச் சென்ருன்
சென்றவன் போன திசையில் நடந்த
செய்தியை சிட்டுக் குருவிகள்
அறியலாம் ஆனுல் நாமறி வோமோ! ★

புகழ்க் கவிகை

1

யாத்திரை

★ பச்சைமலை யடிவாரந் தன்னில்ஒரு சிற்றூர்ப்
பாக்கம் அதைப் பாலூர்என் றழைப்பார் யாண்டும்
பச்சைவளங் கொழித்துவரும் பளிக்கருவி ஓடை
பண்ணிசைத்துப் பாலூரைப் படிந்துவலம் ஆகிப்
போகின்ற கிழக்குவெளிப் புல்விளையின் நடுவே
பொழுதெழுந்து வந்துநிதம் தொழுதுபுகழ்ந் தேத்தும்
மாகாளி கோயிற்பாழ் மண்டபமொன் றுண்டு.
மற்றுங்கே ஊர்ச்சோலி மதியாமல் தன்னந்
தனியாகப் பரதேசித் தவக்கோலங் கொண்டு
தமிழ்க்கவிஞன் வாழ்ந்திருந்தான் வாய்த்திட்ட ஊரின்
மனிசர்களோ அவன்பெருமை அறியாதார் எனினும்
மதியாதார் யாருமிலர். மாகவிஞன் புகழைக்
கேட்டறிந்து கிளர்ச்சிதரும் கவியமுதம் வேட்டுக்
கேண்மைகொள நாட்டமுறும் கிறுக்கர்ஒரு சிலரும்
பாட்டரசன் வாழ்கின்ற பர்ணகுடில் தேடிப்
பலசமயம் வருகின்ற பழக்கந்தான். அதுபோல்
காடுமலை தாண்டியிரு காளையிளஞ் சிறுவர்
கவிஞன்பால் யாத்திரையாய்க் கடுகிவந்தார் ஓர்நாள்;
தேடிவரும் திசையினிலே திரைத்துவந்த கங்குல்
தேக்கியதால் அவ்விருவர் தியங்கியபின், பேய்கள்

குடியிருக்கும் மண்டபத்தில் குளிர்இரவும் போக்கிக்
குணதிசையில் விடிவெள்ளி குலவிவரும் போது... ★

[மலையடிவாரத்தில் குமரனும்
முருகனும்]

- பொழுது புலரும் தருணம் ஆயிற்று
இன்னுமா உறக்கம் எழுந்திரு முருகா.

- நல்லது குமரா! நடந்தகளைப்பும்
நலிவும் தீர்ந்தேன். நல்ல உறக்கம்!

- ஒன்றிக் கிடந்த ஒளியும் இருளும்
ஒன்றை விட்டொன்று ஒதுங்கும் வேளை.

- கன்னம் சிவந்த காலை நளினியைப்
பொன்னங் கதிரோன் போந்துற வாடும்

- காலை யழகின் கற்பனை யெல்லாம்
கவிஞர் பெருமான் கவிதையில் கேட்க
விரும்பி யன்றோ விரைந்தோம் நெடுந்தொலை
வழியிடை மறித்து வந்தது கங்குல்.

- வந்தால் என்ன? வால்போல் நீண்ட
பாதையில் இங்கொரு பாழ்மனை யேனும்
கிடைத்ததே இரவைக் கிடத்திச் செல்ல

- சாலை வழியில் சத்திரம் இதனைத்
தந்தவர் யாரோ ... ...

- ... ... தன்பெயர் குறித்து
வைக்க விரும்பா வள்ளலும் யாரோ

வழியிடை நம்போல் வல்லிருள் கடப்போர்
தங்கி யிருந்து தம்வழி செல்லத்
தயவுடன் வைத்த தருமச் சாலை.

– வாழ்க நல்லறம்! வள்ளல் ஒருவன்
வைத்த சத்திரம் வழியிடை இலையேல்
ஆழ்ந்த காரிருள் அடர்ந்த கானிடை
அகப்பட்டவர் கதி? ... ...

– ... ... அதோகதி யேதான்.

– பச்சைமலை யடிவாரம் வந்துவிட்டோம் குமரா
பார்வைக்குந் தெரிகின்ற பழனத்துக் கப்பால்
பாவூர்தான் அங்கேநம் பாவரசர் உள்ளார்,

– பச்சைமலை, பசுங்கொண்டல், பைம்புனலும், இன்பப்
பசுந்தமிழும் ஆகாகா எங்கும்ஒரே பசுமை

– புனலருவி சிரித்தோடிப் புகுந்து விளையாடும்
புதர்க்காடும் தாண்டிவிட்டோம் புல்விளையும் இதுவே

– நனிசிறந்த பெறும்பேறு நான்பெற்றேன் உன்றன்
நட்புறவால் கவியரசர் நல்லுறவும் பெறுவேன்

– பாட்டருவி முழவதிரப் பைந்தமிழ்ப்பண் பாடும்
பாவூரின் எல்லையிதே பார்த்துநட மெல்ல.

2

சந்திப்பு [கவிஞர் பாடிக்கொண்டிருக்கிறார்]

'கோலம் மிகுந்தொளி கூட்டி மயக்கமும் காட்டியெழுங்
காலமென் றேபெருங் கற்பனைக் கேமய லாகிநின்று

சாலப் பலபல நாடகம் சார்ந்து சதாசிவமாய்
ஞாலத் திசைவெளி யேபடர்ந் தேங்கு முயிரினமே

'கூட்டிப் பெருக்கிக் கழித்து வகுத்துங் கணக்கறியாப்
பாட்டிற் படுதுய ராயின வேதும் பகுத்தறியாது
ஏட்டிற் பெருக்கி எழுதிய வெல்லாம் இலக்கியமாய்ப்
போட்டுவைப் போமிது போதுமி தேநாம் புரிதவமே.'

- வணக்கம் அய்யா ... ...

- — ... வாவா முருகா
வாழ்கநீ வாழ்க யாரது அருகில்?

- அய்யா, குமரன்என் ஆருயிர் நண்பன்
அடியேன் கலைபயில் அன்னாள் என்னுடன்
சின்னாள் உடன்ஒரு சாலையில் பயின்ற
நன்மா ணாக்கன் நற்றமிழ்த் தேனீ

- தேனீ! தேனீ! தித்திக்கும் புனைபெயர்.

- புனைபெயர் அன்று புலவரை அடுத்தே
அழகு தமிழாம் அமுதம் கூட்டும்
திறத்தால் நண்பர் தேனியென் றவனைச்
சிறப்பித் தளித்த திருப்பெயர் அதுவாம்

- அய்யா குமரன் அடியேன் வணக்கம்.

- செந்தமிழ்க் குரவன் குன்றுதோ றாடும்
பைந்தமிழ்ப் பிள்ளை குமரனாய் முருகனாய்
இருபெயர் தாங்கி எம்மெதிர் வந்தான்
அமர்வீர் அமர்வீர் அருகுவந் தமர்வீர்.

- இயற்கைத் தாயின் இல்லம் இதுவென
இன்பங் குலுங்கும் இவ்விடம் போன்று
பசுமையை எங்கும் பார்த்திலேன் அய்யா!

- உண்மைதான் அன்பர்காள் உண்மைதான் இந்த
மலையின் சாரலும் மாகாளி வாயிலும்
மழலை அருவியும் மதகுக் கரையும்
குலவும் கோபுரக் கோயிலும் சிறப்பே.

- காலை அழகின் கற்பனை ஒன்றைக்
கவிஞர் பெருமான் கவிதையில் முன்னர்
முருகன் எனக்கு முழுதுங் காட்டினன்

- ஆமாம் அய்யா 'அதிர்ந்திடும் தேரின்
ஆதவன் வருகையால் அஞ்சிய காரிருள்
வானிற் பிதிர்ந்தும் வானுற வளர்ந்த
மாமலை முகட்டில் மயங்கிக் கிடந்தும்
வானில் விசித்த வான்கதிர் நண்பகல்
மோனக் கொலுவின் மொய்ம்பில் திகழப்
போக்கிட மில்லா வல்லிருள் பொல்லா
மானிடர் வஞ்ச நெஞ்செனும் குகையில்
கதுமெனப் புகுந்த காட்சியும் அந்தக்
கவிதையில் தாங்கள் கற்பித் தீர்கள்.

- விண்ணப்பம் அய்யா, ...

- ... ... விளம்புவாய் குமர!

- வரம்பிலா வரம்பில் வான்சிறை விரிக்கும்
புள்ள ரசாகப் புலவர் பெருமான்
விளங்குகின் றீர்கள்; வியன் படைப்பிதனை
விமரிசனம் புரியும் வித்தையில் தங்கள்
புலமைக் கிணையிப் புவியினில் இல்லை.

- மிகைப்படப் புகழுரை எதற்கு? இவ்வுலகில்
யாண்டும் எங்கணும் எழிலாய் விரிந்த

இயற்கையின் நிறைவும் ஏற்றமும் இயம்ப
எண்ணிலாக் கவிஞர் எழுந்தார் எனினும்
முற்ரு எழிலே முத்தியாம் நிலேயை
இதுதான் என்று இறுதியாய்ப் பாட,
வல்லவர் தோன்றிய தில்லேயிங் கில்லே

– தாங்கள் அருளிய தமிழெலொம் நண்பன்
முருகனுல் உதவப் பெற்றநாள் முதலாய்க்
காணவும் காதால் கனிதமிழ் கேட்கவும்
காத்திருந் திட்டேன் ஆயினும் காலம்
வறிதே தனது வரைகடந் திட்டபின்
இன்றே திருநாள் என்றிட்த் தக்க
தருணம் வந்தது தமிழ்த்தாய் போற்றி.

– தமிழே தவமாய்ப் புரிந்திருக் கின்ற
புலவர் பெருமான், புல்லியர் நாங்கள்
புகுந் தருணத்தே புகன்றநற் பாடல்
மற்று மோர்முறை மகிழ்வுற அருள
வேண்டினேம் தங்கள் விருப்பம் எதுவோ?

– நல்லது கேளீர் ... ...
... ... கூட்டிப் பெருக்கி
... ...
... ...
... ...

– இலக்கியம் என்னும் நற்றவம் ஈதென
இயம்பிய பாடல் இன்பொருள் இனிதே

– எனினும் ... ...

– ... எனினும் என்ன? இயம்புக

- ... ...

பாமரர் தாமும் பயன்பெறத் தக்க
எளிய முறையில் இயைந்தால் பாடல்

- இன்னும் சிறப்பாய் இருக்குமென் கின்ருய் !

- ஆமாம் அய்யா அவ்விதமேதான் !

- அருமைக் குமரா, அகல்விசும் பென்னும்
அகண்டா கார அரங்கினில் ஆடும்
விரிசிறைப் புள்தனை மற்ருேர் வியந்து
எண்ணுவர் போற்றுவர் என்ருே விசித்தெழும் ?

- இல்லை என்பதும் ஏற்றேன்; இலக்கியம்
துய்ப்பார் தாமும் தொடர்வதால், கவிப்புள்
சற்றே தாழப் பறந்தால் கவிதை
காட்டும் எழிலைக் காண்டற் குதவுமே.

- விரிந்தெதிர் விளைந்த விந்தைப் படைப்பின்
வியப்பிலும் திகைப்பிலும் வேதனை யுற்று
விம்மிடும் நெஞ்சின் வேக்கா டனைத்தும்
செய்யுளாய், கவிதையாய், சீறும் அருவியாய்
செந்தணல் மலர்ந்த செந்தமிழ்க் கனவாய்த்
தீய்க்கும் போது தீக்குளித் திடுங்கால்
உடன்கட்டை ஏற ஒருவரைத் தேடி
உலைவது கவிஞன் உள்ளமே யன்று ;
உணர்வின் நோவில் ஒத்தியல் கின்ற
உள்ளம்ஒன் றிரண்டு உளவென் றறிந்தால்
உவகைதான் என்பதும் ஒளிப்பதற் கில்லை.

- உன்னதக் கவிதையும் உத்தமக் கவிஞரின்
உள்ளமும் தெளிந்தேன் உறுபிழை பொறுப்பீர்

சிறந்திடும் தங்கள் செய்யுளை யெல்லாம்
தொகுத்தொரு நூலாய்த் தொல்லுல கறியச்
செய்யும் திருப்பணி செந்தமிழ்த் தாயின்
சேவடிக் கேற்ற பணியெனத் தெரிந்தேன்
தயவுடன் அனுமதி தந்தால் அதனைத்
தமியேன் முயன்று தமிழ்வளங் கொழிப்பேன்.

– வாழி நீர் மைந்தர்காள்—வாழ்கசெந் தமிழே.

★ உலகத்தார் புகழ்விரும்பா தொதுங்கி வாழும்
உயர்கவிஞ னிடம்அணுகி உளங் கலந்தே
குலவிமகிழ் கூடியபின் குமரர் தாமும்
கோதுகலத் தோடுவிடை கொண்டு சென்றார்
உலவாத கவிஞர்அருள் செய்த பாடல்
ஒவ்வொன்றாய் மேடைகளில் விரித்துக் காட்டிச்
சிலநாட்கள் சென்றதன்பின் சிந்தை யாரத்
தமிழுலகில் சிறுகுமரன் தழைத் திருந்தான்.

பன்னயம் சேர் பாவினிமை கண்டு மக்கள்
பாவாணன் குமரனெனப் பரவி வந்தார்.
அந்நாட்டை ஆண்டிருந்த மன்னன் காதில்
அருங்குமரன் புகழ்ஏற அரிய பாடற்
சொன்னயங்கள் காட்டுகின்ற அரங்கு கூட்டச்
சூழ்ந்துற்ற புலவர்களின் நடுவே தானும்
முன்னர் உளம் தேக்கிவைத்த முனிவர் பாடல்
முன்வைத்தான் சிறுகுமரன் புகழுங் கொண்டான்.

முருகனது கண்டிருந்தான் "முன்னம் அந்த
முதுபுலவர் இயற்றிவைத்த பாடல் யாவும்
உரிமையுடன் குமரனுமே உடைமை கொண்டான்
உலகத்தார் கண்முன் தன் கவிதை யென்றே

பெருமையுடன் இசைக்கின்ருன் அந்தோ பாவி
பிழை புரிந்தான்" எனநெஞ்சம் பிளந்தான். ஓடி
உரித்தான மெய்ப்புலவன் உள்ளான் என்றே
ஒருசேதி மன்னனிடம் உரைத்து வந்தான்..

3

அரசவை [அரசனும் அமைச்சனும்]

– அமைச்சரே கவிதை அரங்கம் எப்படி ?

– அற்புதம் அரசே அழகிய பாடல்
ஆற்றலோ டுரைத்த அச்சிறு குமரன்
இச்சிறு பிராயத் தெப்படி இத்துணை
வல்லமை கைவர வாய்த்தான் என்ற
வியப்பினில் யானும் திகைத்திருக் கின்றேன்

– வியப்பிலை நமக்கு ஏனெனில் வீர
முருகன் வந்ததன் மூலம் விளக்கிஞன்

– முருகனு ? யாரது ? ... ...

– ... ... குமரனின் நண்பன்
குன்றின் தாழ்வரைக் கோட்டத் தேயொரு
பாஹூர் உண்டே பாப்புனைந் தாங்கே
தனித்திருக் கின்ற தமிழ்ப்பெருங் கவிஞர்
தயவுடன் அருளிய தண்டமிழ்ப் பாடல்
அளவில வாகுமென் றறிவிக் கின்ருன்
அவற்றில் ஒன்றையே அரங்கினில் குமரன்
தன்கவி யென்றித் தாரணி அறியக்
காட்டிய செப்படி வித்தையென் றின்று
காலையில் நம்மிடம் கழறிஞன் ...

- ... ... என்னை ?
குமரன் தானேர் குலக்கவி யென்று
கொண்டே அரங்கிற் குலவி யிருந்தான்!

- கொள்ளையர் உலகிற் கோடியர் உண்டே

- கோதிலா தவன்போல் குவலயம் நம்பப்
பசப்பும் வஞ்சமும் பாரினில் உண்டுகொல்!

- பாரினில் வஞ்சம் பற்பல உருவில்
பார்த்துளோம் எனினும் பாதகம் இதுபோல்
பார்த்திலோம் பார்த்திலோம் பதைப்பதெம் உள்ளம்.

- பதைத்தெதும் புரிவதால் பயனிலை அரசே
பாதகச் சதியைப் பக்குவ மாகப்
பேர்த்திடல் வேண்டும் பெரியதோர் சூழ்ச்சி
துணிந்தேன் மன்னர் துடிக்கும் திருவுளம்
சற்றே தயவுடன் தணித்திருந் திட்டால்
உண்மை நிலைபெற உற்றது புரிவோம்.

- நல்லது மேலைச் செயல்வகுத் திடுவீர்

- அவ்விளங் குமரனை ஆதரங் காட்டி
யாத்த கவிதைகள் அனைத்துமோர் நூலாய்த்
தொகுத்து வெளியிடத் துணையும் புரிவோம்.

- இதனல் குமரன் இணையிலாக் கவியென
எண்ணுவர் அன்றி எப்படிக் குமரன்
குருவஞ் சனையிக் குவலயம் அறியும் ?

- அதற்கு மோர் உளவை ஆய்ந்துளேன் முருகன்
தன்னுடன் மாமலைச் சாரலில் வாழும்

புகழ்க் கவிகை

புலவரைக் கண்டு போற்றி யவர்தமை
மன்னவை விருதுடன் மதித்து நாம் அழைப்போம்.
குமரன் அறியா வண்ணம், குறித்த
நூலரங் கேறும் நொடியில் அந்த
மூல முதல்வனை முத்தமிழ்க் கவிஞனை

- அரங்கில் வெளிப்படக் காட்டுவோம் என்கிறீர்

- ஆமாம் அரசே அப்பொழு திந்தக்
குமரன் தலைகவிழ்ந் தேகுவன்
... ... உண்மையைக்
குவலயம் கண்டு கொள்ளும் அமைச்சரே
நன்றரோ நன்று நன்றும் சூழ்ச்சி

- அரசர் ஆணையால் ஆவன முடிப்பேன்

- செந்தமிழ்ப் பாடல் செய்தமெய்ப் புலவர்
தம்மையும் இந்தத் தண்டமிழ் நாட்டையும்
ஏய்த்துப் பிழைப்பார் யாவரே யானினும்
தலையெடுக் காமல் தண்டிக்க வேண்டும்

- வாழ்க மன்னவர் வளர்க செந்தமிழ்

- வாழ்க நற்கவி வழங்கு மாமுகில்

4

பாவூர் பாக்கம்

- புலவர் பெருமான் பொன்னடி போற்றி

- முருகா வருக முறுவல் வதனம்
காரடைந்திட்ட காரணம் என்னே

- என்ன வென்று நான் இயம்புவேன் பெரும,
எண்ணித் துணியா தியற்றிய தென்பிழை

- மகிழ்னன் என்றுனை மகிழ்ந்திருக் கின்றேன்
மற்று நீயும் மறுகுதல் ஏனோ
இணைபிரி யாதநின் இன்னுயிர் நண்பன்
இளைஞன் குமரன் ஏன்வர வில்லை.

- நச்சர வானுன் நமனைய் முளைத்தான்

- குணக்குன் றன்றோ குமரன் கவிதை
நயங்கள் அறிந்த நன்மா ணாக்கன்
அவன்செய் பிழையென்? அறிந்திடக் கூறு,

★எனப்பரிவி னொடுவினவ இளைஞன் சொல்வான்
இனியதமிழ்ப் பாடல்எலாம் எடுத்துக் கோத்து
கனமான தொகை நூலாய்க் கட்டிச் சேர்த்துக்
கவிமன்னன் புகழ் பரப்பும் காதலென்றே
முனமுரைத்த வாசகமும் பொய்த்துப் போக
மூன்றுதமிழ் நாடெங்கும் மொய்த்துச் சென்று
தனைப்பெரிய புலவனெனத் தருக்கி வாழும்
தந்திரங்கள் விரித்துரைத்நான், தன்னை நொந்தான்

வேதனையால் உளம்மறுகுன் முருகன் மேலும்
வேத்தவையில் கவியரங்கில் குமரன் செய்த
பேதகமும் பேதகத்தைப் பேர்க்கச் சூழ்ந்த
பெருஞ்செயலும் பேரவையின் மன்னன் வேண்டித்
தூதனுப்ப விருதுடனே தொழு தழைக்கத்
துரைத்தனத்து முதலமைச்சன் தொடர் வானென்றும்
சேதியெலாம் விரித்திட்டான் சிரித் திருந்தார்
செந்தமிழின் பெரும்புலவர் சிந்தை செய்தார்.

5

[புலவரிடம் அமைச்சர் வருகை]

– புலவர் பெருமான் போந்திருக்கின்ற
புண்ணிய வேள்விச் சாலையும் இதுவோ

– அமைச்சரே வருக ... ...

– ... ... ஆகா முருகனு?

– ஆமாம் அமைச்சரே அடியேன் நேற்றே
மாலையில் வந்தேன் மாபெரும் புலவர்
முன்வந் தெல்லாம் மொழிந்தேன் அந்த
முனிவரோ முறுவல் பூத்தார் அல்லால்
வேறெதும் மொழிந்தார் இலையால் இன்று
விடியலில் எழுந்தேன் விதிர்த்தேன் விடுத்த
மடல் ஒன்றிதனை மட்டிலும் கண்டு
திசையறி யாமற் திகைத் திருக்கின்றேன்

– அஞ்சினேன் அந்த அருங்கவி வாணர்ப்
பெருமையை மன்னர் பேசிய போதே
துறவிக்கு வேந்தனும் துரும்பே என்பதை
மற்றுமோர் முறையிம் மண்டலம் அறியச்
செய்தவர் சென்ருர் செந்நாப் புலவர்.
கூறிய மடல்எது? கொண்டுவா காண்போம்

[கவிஞர் விட்டுச்சென்ற மடல்]

"உலகும் உலகைப் படைத்த ஒருபெரும்
தத்துவம் தானும் தமிழும் யாமுமாய்த்
தனித்திவண் வாழ்ந்தோம் தழைத்த மாமலைச்
சாரலில் சாந்தி நிலையத் திருந்து

எண்ணிலா வின்பம் திளைத்திருந் ததனுல்
பொங்கிய களிப்பில் பூத்த செந்தமிழின்
சொற்கள் மிலைந்த சுகநிலை தன்னிற்
சார்ந்தவர் தம்முடன் சருவி மகிழ்ந்தோம்
உவவிதை இந்த உலகோர் அறிந்திடச்
செய்வது தவத்தின் சீர்த்தியை யழிக்கும்
என்றே ஒதுங்கி இவ்விடம் கிடந்தோம்
விருதுகள் அளித்து வேந்தனும் அழைத்தான்
அஞ்சினேம் புகழ்எனும் புதுக்குடை வேண்டோம்
இயற்கையின் இன்பமும் எழிலும் காற்றும்
இருளும் ஒளியும் இன்னுயிர்த் தோழர்
அழகின் உறவை அறவே மறைக்கும்
புகழ்க்குடை விரிக்கப் புறப்பட்டு வந்தீர்
தமிழும் யாமும் தனித்தசை யோகம்
புரிவதை என்றும் புகழ்க்குடை கெடுக்கும்
போகிறேம் வாழி பூந்தமிழ் வெல்க.

குமரன் நம்பெயர் மறைத்தான் என்று
கூறுவீர் யாமதைக் கொள்ளோம் அவனே
எம்முளம் அறிந்து இதம்செய் துங்கள்
முன்னிருந் தெம்மை முழுதும் மறைந்தான்
முருகநின் முனிவு மூண்டநல் லன்பால்
என்பதும் அறிந்தோம் எனினும் கொணர்ந்த
புகழ்க்குடை மடக்கிப் போவீர் வாழி''

– என்னே புலவர் எண்ணிய வாறு?

– குமரன் கொண்ட கொள்கையை அறிந்தும்
கூறிய விளக்கம் கொந்துமென் உள்ளம்

– பொய்யனை மேலும் பொறுத்துப் பார்ப்போம்
ஏழாம் நாளில் எம்முடை வேந்தன்
முன்றிலில் அந்த மூலக் கவிதைகள்

குமரன் பெயரால் கூட்டித் தொகுத்த
நூலங் கேறும் நூற்றுவர் மேலாய்
புலவர் கூடும் பொற்சபை தன்னில்
புல்லியன் போர்த்த புலித்தோல் கிழிப்போம்

– மூண் டது வல்வினை முத்தமிழ் முனிவர்
மொய்ம்பினை அன்று முழுதுல கோரும்

– அறிந்திடச் செய்வோம் அதுவே சூழ்ச்சி

★சூழ்ந்தது போன்றே துணிந்தொரு தொகைநூல்
வெளியிடச் செய்த வேந்தன் ஆணையால்
அரங்கேற் றத்திற் கானபொன் னாளும்
வந்தது முத்தமிழ் வாழ்திரு நாட்டின்
புலவர் மேலோர் புரவலர் பல்லோர்
குலவிய அரங்கில் கோக்கவிக் குமரன்
வேண்டிய படியொரு விதானம் அமைத்தார்
வெள்ளை கமலத்து விமலையின் படிவம்

தீட்டிய வெள்ளைத் திரையும் விடுத்தார்
விடுத்த திரையை விலக்கினுல் ஆங்கே
கதிர்விடும் ஆதனந் தன்னில் குமரக்
கோக்கவி வீற்றிருக் கின்ற நற்கோலம்
அவையோர் காண்பார் எனவும் தொகைநூல்
வான்சபை தன்னில் வழங்குதும் என்றும்
குறித்த வாறே கூறிய அரங்கில்
திரை விலகிற்று; திகைத்தனர் அவையோர்

கவிஞன் குமரனைக் கனகநற் நவிசிற்
கண்டா ரில்லை, கண்டார் வியப்பே
வெண்சிலை ஒன்று அங்கு விளங்கி யிருந்தது
அவையோர் எழுந்தார் ஆர்த்தது பேரொலி

– முனிவரின் சிலையிது முத்தமிழ் வித்தக
முனிவரின் சிலையிது ... ...

\- ... ... முன்னர் குமரன்
மொழிந்த கவிதையின் மூலவர் சிலேயா

\- என்னே வியப்பது? ... ...

\- ... ... எப்படி இந்த

\- விந்தை நிகழ்ந்தது வித்தை புரிந்த
குமரனென்றும் கோக்கவி எங்கே?

\- வீற்றிருக் கின்ற வித்தகர் சிலேயின்
பாதத்தடியில் படபடக்கின்ற
ஏடொன்று இங்கே ... ...

\- ... ... ஏட்டு என்ன?
எங்கே எடுப்பீர் இச்சபை யறிய
ஏட்டில் எழுதியஎல்லாம் படிப்பீர்
யாவுமோர் புதிராய் இயன்றது வியப்பே

\- குமரன் எழுத்தே கொண்டிருக்கின்றது
விளங்காப் புதிரை விடுவிக் கின்றது

\- மடலில் குறித்த மணிமொழி என்னே?

\- கைப்படக் குமரன் கவிதையாய் எழுதி
வைத்து மறைந்தான் வாசகம் புதுமை
வாசிக்கின்றேன் வாழ்கநங் குமரன்

[படிக்கிருன்]

''செந்தமிழைக் கன்னலெனக் களிக்கும் எங்கள்
சீர்த்திதிகழ் மன்னவனே சிந்தித் துண்மை
முந்துறவே சூழ்ந்துபுலப் படுத்தும் தூய
மூதறிவிற் பழுத்தநரை முதல மைச்சே

சிந்தாத தீந்தமிழைத் தேனீ யென்னத்
தேடிவந்து செந்தமிழ் நாடெங்கும் சிந்தும்
மைந்தனெனைப் போற்றியும்நல் மதிப்பும் தந்து
மற்றின்று வழக்கொன்று கொண்டு வந்தீர்

புகழ்க் கவிகை

இன்றுவரை யான் வழங்கி வந்த தேனும்
இனிய தமிழ்ப் பாடலெலாம் என்ன தென்றே
நன்றுங்கள் முன்காட்டி வந்தே னேனும்
நச்சுநினைப் பொருசிறுதும் இருந்த தில்லை.

கவிக்கின்ற புகழுக்குக் கவிஞர் அஞ்சிக்
கானகத்தே கரந்துறைந்த நாளில் சென்றேன்
கவியனைத்தும் பரப்புகின்ற காதல் கொண்டேன்
கவிஞர்பெயர் தனைமறைத்துக் காத்து வந்தேன்

பின்னர் இன்று பெரும்புலவர் தம்மை நாடிப்
பெருநாட்டின் விருதுகளும் பெருமை யாவும்
சென்றவரை மன்னவையில் சேர்க்கச் சூழ்ந்த
செய்தியெலாம் யானறிவேன் செய்த பாடல்

முன்வைக்கும் தொகைநூலை முடித்தேன் அந்த
முதுபுலவர் திருப்பெயரால் அன்றி யிந்தச்
சின்னவனின் பெயர் அதனிற் சேர்த்தே னல்லேன்
சிந்தாத கவியமுதம் சிந்திச் செய்த

பெட்டகத்தைப் பேசாத பேச்சின் தூய
பெருஞ்சுடரைப் பேரவையோர் காணும்போது
எட்டாத தொலைவினிலே எங்கோ எங்கள்
இணையற்ற கவிமன்னர் இணைய டிக்கீழ்

கிட்டாத பேரின்பம் கிளர்ந்து பொங்கக்
கிடந்தயர்வோம் கீழ்வானில் எழுந்த சோதி
வட்டத்தில் வாழ்ந்திடுவோம் வையம் நல்கும்
வான்புகழாம் கவிகைக்கு வணக்கம் வாழி

★ கவிக்கின்ற புகழுக்கும் களிக்கும் தூய
கலைக்குமொரு தொடர்பற்றுக் கானில் வாழும்
கவியரசர் வாழியவர் கவித்த அன்புக்
கனி நிழலில் வளர்கின்ற குமரன் வாழி. ★

இருளும் ஒளியும்

1

ஒளியமுதம்

கவிந்த இருளில் மத்திட்டுக்
காலை வரையிற் கடைந்ததனுல்
குவிந்து திரண்ட வெண்ணெயெனக்
கொள்ளை ஒளியைக் காணம்மா !

காலைமலரக் கண் மலரும்
காவின் முகிழ்த்த முகையூடே
சாலம் புரியும் ஒளிக்கதிரைச்
சற்றே எழுந்து பாரம்மா !

மோக முகையின் முறுவலுடன்
மூன்றுகாதம் மணம் வீசும்
வேகம் தவழும் தென்றலிலே
விந்தை உணர்வைத் தீண்டம்மா !

ஒளியில் தழையும் உலகமெலாம்
ஓங்கும் நிழல் உமிழ்வதும்
ஒளிதான் மறையத் தாமொடுங்கி
உறங்கும் உண்மை ஏதம்மா !

2

குறும்புச் சிறுவன்

சிற்றூரின் மதிற்புறத்தே கிழக்கில் நேற்று
சிறியமரக் கொம்பரின்மேல் சிவுக்கென் றேறிச்
சற்றேனும் பிடிப்பில்லாச் சரிவில் ஒற்றைச்
சக்கரத்தேர் உருட்டிவிளை யாடிப் பின்னர்

திருக்குளத்தில் நீராடப் போனபிள்ளை
திரும்பிவரு வானவனென் றெண்ணி யானும்
தெருவாசல் நின்றிருந்தேன் ஆனால் அந்தக்
தினகரனே திரும்பிடவே யில்லை, மற்றும்

சிற்றூரின் நேர்மேற்கே சிறிய குட்டைச்
சேறுண்டே இருள்அதன்பேர் சிறுவன் வீழ்ந்து
குற்றுயிராய்க் கிடந்தானும் சேதி கேட்டேன்
குறும்பனவன் குலுங்கநகைத் தெதிரே வந்தான்

கோல்சாயாக் குலமன்னன் போன்றே தானும்
குணக்குன்றில் ஏறிநடம் புரிந்தான். அந்தோ
வால்ஒன்றைத் தான்வைக்க மறந்து போனர்
வழக்கம்போல் கறையிருளே களிக்கின் ருனல்!

3

ஒரு சிலேடை

விதைகளை வைத்தடுக்கி வெண்பஞ்சை மேல்பொதிந்து
அதற்குமேல் இறுகத்தைத்த அழகினில் ஈடுபட்டே
இதமுறும் இலவங்காயின் எழிற்சிறு பருவங்காத்துக்
குதிக்கின்ற நெஞ்சில் இன்பம் குதப்புமோர் சிறியகிள்ளை

இரவிதான்-இலவங்காயும் இரவுதான், பொதிந்துவைத்த
இருளினை வெண்பஞ்சென்றே இயம்பிட நகைப்பீர்ஆனல்
இருளெனக் காணுகின்ற இன்மையோ ஒளிப்பெருக்காய்
இருப்பது சொல்லிவைத்தேன் இருநிலம் விதையின்கூட்டம்

ஆதியின் முன்னம் யாரும் அறிந்திடா உண்மைஏதோ
தேதியிற் களித்தேனந்தச் சேதியை உமக்கும்சொல்வேன்
பாதியில் இலவங்காயின் பக்குவம் பொருதகிள்ளை
கோதிய அலகால்கொத்திக் குடைந்திட இலவங்காயாம்

இரவுதான் வெடித்துப்போக இறுகிய ஒளியின்கற்றை
இருள் உருக் குலைந்துலைந்து எண்டிசா முகமும்பூசிப்
பரவிய சுடரில்அந்தப் பருதியும் குளித்துக்கொண்ட
இரகசியம் கண்டுகொள்வீர் இலவங்காய் இரவுகண்டீர்

4

சூரியமூர்த்தி

எழுதரிய வண்ணம், அவை
எண்ணரிய வாகும்
தொழுதுவல மாகிவரு
கோடிபல கோளம்

முழுதுமொளி தடவிபுவி
மொய்த்துவரு கின்றாய்
கெழுதகைய வன்பினொடு
கேண்மை கொள வென்றோ?

நிழல் ஒளிகள் என்றவிரு
நெடியகடி வாளம்
அழலுமிழ வாம் பரி
யதிர்ந்த துகள் இந்தப்

பழையவுல கிற்புதிய
பகலிரவு தூவி
விழுதுக விழுந்திசை
விளக்கமுறல் என்னே!

கண்ணொளி மடங்கியெழு
காட்சி நிலை யானாய்
விண்ணொளி விளைத்த புகழ்
விஞ்சுமொரு நெஞ்சத்(து)

எண்ணிய வெழிற் சிலையில்
எங்கள்குடி யானாய்
மண்ணக விருள் கெட
மணந்த மணவாளா!

5

இருள் முயக்கு

வெளியில் நிலவு வெருட்டவும் இருள்என்
வீட்டிற் புகுந்து வீழ்ந்தது மடியில்

பழகி யிருந்த பழைய இருளில்
பார்த்துப் பார்த்துப் பழக்கம் எனக்கு;
புதிய இருளென் செய்யும்? அதற்குப்
பழக்க மில்லை, பாவம்! என்றன்
பக்கத் திருந்த பழையமைக் கூட்டைக்
காலில் இடறிக் கவிழ்த்துத் தானும்
தடுக்கி வீழ்ந்து தரையிற் புரண்டது.

வந்த விருந்து வருந்தச் செய்த
குற்றம் நெஞ்சிற் குறுகுறுத் திடவும்
உள்ள விளக்கை உடனே கொணர்ந்தேன்;
கரிந்து கருத்து கரியாய்ப் போன
நெஞ்சத் திரியை நிமிட்டினேன்; வெறுப்புக்
கூரைத் தண்ணீர் கொடுங்கை ஒழுக்கிற்
கொட்டிக் கலந்து குழைந்து கசடாய்க்
குமட்டும் எண்ணெயிற் கொண்டு நனைத்தேன்;
எண்ண மென்னும் எரியில் விளக்கை
எடுத்துப் பிடித்தேன்.

இருளும் ஒளியும்

என்னே! பழைய
இருளில் நடுங்கும் இன்றைய இருளின்
மேலெலாம், என்றன் உள்ளக் கசப்பை
இறுகக் காய்ச்சி இறக்கிய கடுக்காய்
இலக்கிய மையும் இழுக்குப் பசையும்!

கற்ப கோடிக் காலம் கதிரின்
ஒளியில் தோய்த்து உலர்த்தி னுலும்
ஒரு பயனில்லை. ஒருமைப் புட்டியும்
ஒழிந்தது; இருந்த ஒற்றை எழுதுகோல்
அதுவும் ஒடிந்தது. யாரைச் சொல்ல?
சிற்றிருள் தன்னைச் சீறியென் செய்ய?

கொண்டைச் சேவல் கூப்பிட் டிருந்த
கொள்கையில் என்னைக் கூவி யழைத்துப்
போனல் பீடை போச்சுது போவெனப்
பொங்கி யெழுந்தது போதம்.
பின்னைத்

தென்றலோ யாரோ திறந்தனர் வீட்டுத்
திண்ணைப் பக்கத் திருந்த சாளரம்;
அறிந்திட வெளியில் சென்றேன். ஒளியின்
வருகை யுரைத்து வந்தது கிழக்கு.

திரும்பினேன் உள்ளே; திரும்பவும், இரவின்
இருளுடன் நெஞ்சத் திருளும் குலவிக்
கொல்லைச் சுவரில் ஏறிக்
குதிப்பது கண்டேன்; குறிப்பறிந் தேனே.

6

இரவினிமை

பொங்கற் புது நாளிற்
போதருவீர் என்றெம்மைத்
தங்கக் கவிவேட்டுத் தமுக்கடித்துச்
சங்கமிது
கூட்டுங் குடியரசர் கொற்றம் உயர்கவெனப்
பாட்டிசைக்க வந்ததமிழ்ப் பாவரங்கில்

நாட்டுக்குள்
பிடியரிசி கூடப் பேராத வித்தைக்குப்
படியளக்க வேதுணிந்த பாண்டியரே!
இன்றைக்குப்
பொங்கலிடப் போகின்ற பூசைக்கு,
பொன் தட்டில்

என்னுடைய பங்குக்கும்
நெஞ்சார வஞ்சம் நினையாமல்
சுயமாகச் சிந்தித்து
முனைமுறியாச் சொல்லடுக்கி,
சொக்குப் பொடிதூவி,
அஞ்சுவரியேனும் அரித்தெடுத்துச்
செஞ்சொற் கவிகூறச் சித்தந்தான்.

ஆனாலும், நேற்றிரவில்
கூதற் கொடுங் குளிரிற் குமைவுற்று வெடவெடத்து
இரவினிமைக் கேங்கி இருந்த நெடுங்கிடையில்,
இருளூடே
மருங்கிசைந்த பூங்கரத்தால்
என்னுகம் பூட்டி அரவணைத்த
மார்கழிப் பொன் மையலிலே யான்முயங்கி

இருகண்ணும் இழுத்து இமைமூடி,
இருக்கின்ற கம்பளியைக்
கழுத்துவரை ஒட்டிக் கால்மூடக்கி,
சிந்தை அகல் விளக்கைச்
சிறுகாற்றுங் கொந்தாமல்
அறிதுயிலில்
நான் கிடந்த முன்னணையில்

இறைந்து கிடக்கின்ற முத்து மணிகொரிக்க
மூந்தும் புருக் கதிரின்
வரவுக்கு ஏங்குகிற வாழ்த்தொலியும்
பத்தர் குழாம்
தழுவி எழுப்புகிற தண்ணுமையும்
தாளவகை
முத்துமொலி மோகனமும்
சேகண்டி
சிந்தும் சிரிப்பொலியும்
புரிசங்கம் பூரித்த நாதப் புதுக்குரலும்
பூவைமார்
நீராடப் போகும் துறைக்கே எம்
பாவாய் எழுந்திரெனப் பண்ணொலியும்
கேட்டாலும் உள்ளத்துக்
கிறக்கம் இறங்கவில்லை. கிளர்ச்சி பிறக்கவில்லை

இருளும் ஒளியும்

என்னுயிராம்
வேசை மகள் வெட்கம் விடவில்லை.

என்றனுக்கு,
இன்னும் தவவலிமை இயலுமெனில்
யானும் நளாயினியாய்
என்றைக்கும் என் பங்கில்
பொல்லாங் கிழைக்கின்ற
பொழுதே விடியாமற்
போவென்றே நான் சபிப்பேன்.

ஏனென்றால்,

ஏழையெனக் கென்னாளும்
இரவாக நீண்டுவிட்டால்...

ஐந்துபுலன் ஒடுக்கி,

அத்தனையின் வல்லமையும்
சிந்தி உருவாக்கிச் செய்த
மனப் பறவை சிறை விரித்தால்

பகட்டும் பகல் விளக்குப்
பொய்யுலகக் காட்சிகளும்
புன்மைக் கருத்துகளும்
என்னுடைய சொந்த
ஊனுடலின் போர்வைக்குள்
எப்படியோ சுருட்டி எரிந்துவிட்டு

சேக்கை விட்டு மேலெழுந்து
உயர்ந்த மலைக்கோட்டை
உச்சி மிதித்தேறி

இருளும் ஒளியும்

உடுக்கள் நிறை
வானத்துப் பைங்கால்
வளைய வரும்வேகம் வாய்த்து விடும்.
வாய்த்திடுங்கால்—என்றென்றும்
தளர்ந்த நடை போட்டுத்
தப்படியால் அளந்து தாண்டிவிட முடியாத
தாரணியும் வானுலகும்
ஈரடியால் அளக்கின்ற
செப்படி வித்தை எற்கும் தெரிந்து விடும்.

அப்போது—

காலக் கணக்குகளும் ஞாலத் திசைவெளியும்
ஒலிடுமிவ் வுலகத்து ஒருகோடி வேதனையும்
ஒன்று மெனைத்தீண்ட ஒண்ணுது.

உடலுக்கும் உயிருக்கும் உணவுக்கும் வேருன
உணர்வுப் பொருள் வடிவாய்
உற்ற தொரு அமர நிலை
உண்மை யெனக் கண்டு
விட்ட நெடுமூச்சில் விழையுங் கணந்தோறும்
ஊழி தோறூழி யுகங்கள் பலப் பலவாய்
உண்டு மிழ்வேன்.

இதற்கு எதிராக, இரவகல,
பொங்கற் புதுநாளே யானுலும்
பொழுது விடிந்து விட்டால்,
பொற் கோழி கூவி விட்டால்,

ஆன்ம லயம் அழிந்து
ஐந்து புலன் விரிந்து
அவை அவையும் சுவைகாண

அடித்துப் புரண்டோடி
அடியேனைச் சிந்தும், உலைத்தெடுக்கும்.

ஆதலினால்,

வாழறியாப் பொய்யுலகில்
வாதாடி வழக்குரைக்க விரும்புகிலேன்.
என்றைக்கும்
இரவுக்கே ஏங்கி
இரவி வரக் கூசுகிறேன்
இரவி வரக் கூவுகிலேன்

இஃதோர் புதிர் அன்றோ?
இங்கிதை நீர் ஒப்புவிரோ?

[திருச்சி வானொலியில்
பொங்கற் கவியரங்கு ஒன்றில் பாடியது.]

7

இருளும் புகலும்

மாலையில் மேற்கு மலையின் உச்சியில்
மடங்கிய கதிரோன் மற்றும் இற்றைநாள்
வேலையில் தொடங்கி விரைந்திட வானில்
வெளிப்பட் டிருந்த விடியலில் கிழக்குப்
பூசிய இருளும் பொடிப்பொடி யாகிப்
போனது வையம் புதுநகை செய்தது.

இரவெலாம்

வீசிய குளிரில் வெளிறிப் போன
வெண்மதிப் பிள்ளை விறைத்துக் கிடந்த
மலைச்சிக ரத்தில் மயங்கி உறங்கும்
மழைமுகில் ஒளியில் மண்டி எழுந்து
தொலைவில் எங்கோ தீப்பட் டெரியத்
தொட்டணைத் திடவே தொடர்ந்தன புட்கள்

பொய்கைக் கரையில் புணைஉடை அவிழப்
பூம்புன லாடும் போதொரு தும்பி
செய்த குறும்பிற் சிறுநகை செய்து
செம்மது வார்த்தாள் செந்தா மரையாள்

இருளும் ஒளியும்

காற்றும் புனலும் கலந்துற வாடிக்
களித்தன பச்சைக் கதிரொளி முயக்கில்
சோற்றுக் கவலை சொந்தநல் உடைமை
சோர்வெதும் இல்லாச் சொக்கழகு இயற்கை

இரவு போர்த்திய இருளும் கரைந்து
ஏகும் விரைவில் எங்குதான் இந்த
இருள் சென்ற டையும் என்றது காணும்
எண்ணம் என்னுள் எழுந்தது தொடர்ந்தேன்

வானில் வடிந்த மையிருள் நெடிய
மலையில் இறங்கி மண்மிசை அடர்ந்த
கானில் தியங்கிக் கடுவெளி தாண்டிக்
கருத்திலா வாழ்விற் கலுழும் மானிடப்

பொய்நிறை உள்ளப் பொந்தில் நுழைந்து
புகுந்தது கண்டேன் புகுந்தது கவலை
செய்யும் இருள்தான் செய்கைஒன் றறியேன்
சிறுமை மடமை சினம்பொய் காமம்

விலங்குகள் வாழும் வேட்டைக் களமாய்
வெறியாட் டயரும் வேதனை யல்லால்
உலைத்திடும் நெஞ்சத்து ஒளிசிறி தேனும்
ஒட்டுவ துண்டோ உற்றதிங் கிருளே

நண்பகல் வந்தது

தாவிவான் வெளியில் தனிச்சுடர் மோனத்
தனிக்கொலு வீற்ற தருணம் காலை
மேவிய ஒளியில் மேனி சிலிர்த்து
மேதினி எங்கும் மேவிடத் தமது

இருளும் ஒளியும்

தண்ணிழல் நீட்டி ஒளிர்ந்த தாவரம்
தம்நிழல் பருகித் தவம்நிறை வுற்று
எண்ணயர்ந்து ஓங்கிய இன்பத் திளைப்பில்
ஏதும் உரையா திருந்தன, அமைதி

நில்லா தோடும் நெடுந்தேர் உருட்டி
நிச்சலும் ஏகிடும் நீள்சுடர் மாலை
எல்லா உலகும் ஏற்றிய விளக்கை
எடுத்துப் போனன் ஏழையேன் சேர்த்த

இருளும் மெதுவாய் என்னுளம் விட்டு
இறங்கி நடந்தது எங்கணும் பரவித்
தெருளும் ஒளியில் திகழ்ந்தவை யாவும்
தேடிச் சுவைக்கச் சென்றது நன்ருல்!

நாளைக் காலை வரையும் நமது
நடப்புக் கிங்கே நச்சரிப் பில்லை
வேளை உணவும் விதவிதக் கவலையும்
வேதனை ஏதும் வேண்டவே வேண்டாம்

சுவைபல நாடிச் சோர்வுறச் செய்யும்
சொந்தநற் புலனே சோர்ந்திடும் இரவில்
அவையெலாம் அயர்ந்த போதுளத் தவிசில்
அழகொளி காலும் ஆயிரங் கோடி

சூரியர் நிகர்த்த சுடரெழக் கண்டு
சொக்கிக் கிடக்கும் சொகுசுடன் பாயை
வீரியத் தோடு விரித்துப் போட்டேன்
வேதனை இருளை வெளியில் எறிந்தேன்

இருளும் ஒளியும்

பேயுருக் கொண்டு பெருகிய இருளில்
பெரிய உலகமும் வானும் திணித்தேன்
ஆயிடை என்னுள் அணையாச் சுடராய்
அமைதி என்னும் ஆசை விளையச்

சிந்தையில் ஏற்றிய சிறியகை விளக்கைச்
சிறுகாற் றணுகா வண்ணம் உணர்வுப்
பொந்தில் வைத்துப் பொத்திக் காத்துப்
போதம் கண்டேன் பொங்கியது ஒளியே.

கலை

1

தவம்

கோல மிகுந்தொளி கூட்டி மயக்குமுங் காட்டியெழுங்
காலமென் றேபெருங் கற்பனைக் கேமய லாகிநின்று
சாலப் பலபல நாடகஞ் சார்ந்து சதாசிவமாய்
ஞாலத் திசைவெளி யேபடர்ந் தேங்கும் உயிரினமே

கூட்டிப் பெருக்கிக் கழித்து வகுத்துங் கணக்கறியாப்
பாட்டிற் படுதுய ராயின வேதும் பகுத்தறியா (து)
ஏட்டிற் பெருக்கி எழுதிய வெல்லா மிலக்கியமாய்ப்
போட்டுவைப் போமிது போது மிதேநாம் புரிதவமே!

2

• கவர்ச்சி

மண்ணிலே முளைத்து மெல்ல
மனங்கொண்ட மட்டும் மேலே
விண்ணுற வோங்கிச் செல்லும்
விழைவுறு மலைமு கட்டில்

கோல்கிளை ஒடுங்கி வாழ்ந்தும்
கொள்கையால் வானந் தீண்டும்
போல்வன வட்ட மிட்டுப்
புன்சிறை விரிக்கும் புட்கள்

மண்ணுறுங் கவர்ச்சி யாலே
மடங்கியே திரும்ப, மற்றவ்
விண்ணையும் தொட்டி ழுக்கும்
விரைவுடன் மண்ணின் மைந்தன்

எண்ணத்துச் சிறகில் ஏறி
ஏறிமேற் சென்றுகொண்டு
நண்ணிய வனைத்தும் இங்கு
நயந்தன கலைகள் என்றே.

3

சந்தையில் கவிதை

மச்சு வீடுதான், மாடியில் கூரை
இல்லே என்னினும் இருள்வான் உண்டே!

உச்சியில் கொடுங்கை உளுத்துக் கொட்டும்
உள்ளத் தினவின் ஒளித் துகள், அதனை
ஒத்தி எடுத்து ஒன்ருய்த் திரட்டி
ஒற்றைத் தெருவின் மூலேயில் நின்று
கத்திஞல்—தணியாக் காமமும் கள்ளும்
கள்ள விலேக்குக் கவிதைக் கொசுரும்
வாங்கிடும் புண்ணிய வான்கள் யாரும்
வரலா மன்ரே!

வாசலில் சேவல்
கூவிடு முன்னம் கோட்டை மணியும்
குழைந்தது; கனவு குலேந்தது.

போ, போ
பைத்தியம் உலகப் பக்குவம் இன்னும்
பெற்றிலே, கவிதையோர் பிழைப்பா? உலர்ந்த
வாய்வெற்றிலேக்கு வக்கிலே என்(று) அசை
போட்டு வெறும்வாய் வெளுத்தனே பொழுதாய்!
உச்சிப் பிள்ளேயார் ஊமையாய்ச் செவிடாய்
உறங்கிப் போன மலேமணி வைகறைப்
பச்சைப் பிள்ளே பாலுக் கழுவதைப்
பாரோர் கேட்கப் பறையறை கின்றது;
அவரவர் எழுந்து அவதிகள் எண்ணித்
தலேப்பொறி யாகத் தவிப்பார். சந்தை
இரைச்சலில் கவிதை யாருக்கு வேணும்?
கற்பனே விட்டுக் கணக்கிதைப் போடு;

கலை

நேற்று மாலையில் நீட்டி முழக்கிக்
கோற்றேன் கவிதை கொப்பளித் திருந்த
கவிஞன் பெற்றியைக் கற்பனை விந்தையைக்
கதைத்தாய்! விமர்சனக் கடையும் விரித்தாய்,
கூட்டம் கொஞ்சமா? கொண்டவர் யாரும்
உண்டா? அந்த உருப்படி அச்சில்
வார்த்தால் யாரும் வாங்கிட வருவரா?

பிரதிகள்

அன்பளிப் பாக ஆளுக் கொன்றாய்
அளித்தால் "நன்றே ஆ! ஆ!" என்பர்
வெட்டிப் பிழைப்பு விடிந்தால் நாளை
எட்டையா புரத்தில் எழிலார் சென்னையில்
இன்னும் பற்பல இணையபல் லூரில்
எந்தமிழ்த் தந்தை இணையிலாக் கவிஞன்
இறந்த நாளை எத்துணை மகிழ்வாய்க்
கூடித் திருநாள் கொண்டா டுவர், பார்!

மந்திரி மாரும் மகரா சர்களும்
போனவன் பெருமை புகழ்வார்ப் புகழ
வீணன் உனக்கும் வேலையுண் டாங்கே
பாரதி உறங்கும் பளிக்குக் கல்லறை
பக்கத் தின்னும் பற்பல! ஒன்றில்
முடங்கலாம் நீயும்; மூன்று நாளில்
எழுந்தும் வரலாம். இணையிலாக் கவி நீ!
இல்லையென் றாரே இயம்பினர்? இன்று
பிழைக்கும் வழியைப் போய்ப்பார் உடனே
புறப்படென் றொருகுரல் கேட்கப்
போர்வையை விலக்கிப் புறப்பட்டேனே.

4

அவன் தொழில்

எல்லை வெளியில் எடுத்துக் கட்டிய
எழிலார் வியப்பின் இன்ப விதானமும்,
ஒல்லையில் காலம் ஓங்கிடும் கரிய
இருளின் விடுத்த ஏதோ திரையும்,
புள்ளியாய்ப் பற்பல புப்புது வகையாய்
அள்ளி யிரைத்த அழகுக் கோலமோ—
தேவர்தம் மகளிர் தேக்கிய களிப்பில்
மேவிய அரும்பு மென்னகை சிந்தும்
வண்ணமோ—சோலை வைகலில் மலரும்
முல்லையோ—மல்லிகை முத்தோ—படைப்பே
பற்றி யெரிந்து பாழாய்ப் போன
பின்னர்த் தீயின் பிதிர்ந்திடும் பொறிகள்
தொத்திக் கிடந்த தொந்தமோ—யாதெனத்
தெரியா விந்தைத் தெருவில், ஒளியின்
பிள்ளைகள் ஓடி யாடிப் பிடித்து
விளையாட் டயரும் வியப்போ வென்னச்
சிந்திக் கிடக்கும் சிலபல கோடி
சித்திரம் அனைத்தும் சிந்தும் அழகைப்
பழகுவோன் பித்தன், பாவம்! தன்னந்
தனியனாய் மலையின் தனிச்சிக ரத்தில்

கலே.

தவத்தில் இருப்பான்; தண்கடல் மீதோர்
தெப்பமும் இன்றித் திரைகளில் நடப்பான்
சுட்டு விரலாய்ச் சுடரெழ வானைத்
துழாவும் கோபுரத் தூபியில் பாய்வான்
எண்ணம் என்னும் இக்குணி வலையை
எங்கணும் வீசி இறுமாந் திருப்பான்
சிக்கினல் அந்தச் சிறுவலை சேர்த்த
மீனே மற்றுக் கல்லோ மண்ணே
சொல்லெனும் சரக்காய்ச் சொந்தமாந் தனது
உணர்வெனும் தெருவில் உரத்துக் கூவிக்
கற்பனை விலைக்குக் கடைவிரித் திடுவான்
பெற்றதோர் இன்பம் பெரிதோ சிறிதோ
கற்றவர் நெஞ்சங் களித்துக்
கவிஞனென் றவனைக் காதலிப் பாரே!

5

ஆஸ்தான் கவிஞர்

குடியரசு பெற்றுக் கூடி அவையமர்ந்த
முடிசூடா மன்னவர்காள்!

அமைச்சு முடிசூடி அவைத் தலைமை யேற்றெங்கள்
அரசோச்சும் பெம்மானே!

உங்கள் திரு முன்றிலிலே உவகைப் பெருக்காலே
எங்கள் குலத்தொருவன் ஏற்றம் இசைக்கின்ற
பங்குபெற நிற்கின்ற பாவாணன் யானொருவன்.

முடியரசர் வீற்றிருந்த முன்னாளில் அவரிஷ்டப்
படியெல்லாம் ஆடிநின்றார் பாவாணர். அவைக் கொலுவில்

அறங்கூறும் மேலவரும் ஆலாத்திப் பெண்டுகளும்
மறமன்னர் விழுந்தடித்து மண்டியிட்டு வணங்குவதும்
ஓசை முரசொலியும் ஒற்றர் திரிதரலும்
ஆசைக்குத் தாசிமகள் அரங்கேறி ஆடுவதும்;

அந்தப் புரத்திருக்கும் அரசமகள் ஊடி நிற்க
ஆஸ்தானக் கவிராயன் அடிமேல் அடியெடுத்து
ஆசார வாசல் அதுதிறக்க வேணுமென்று

கலை

•

கெறடி வித்தை காட்டிக் கிறுகிறுக்கப் பாட்டிசைத்துத்
திறடி கதவையென்ருல் தாழ்ப்பாள் இரண்டென்பாள்

ஆனுலும் கவிராயர்,

மடிபிடித்துக் கவியூற்றி மண்டியிட்டு நின்றிடுவார்
வண்ணமுடிச் செல்வாக்கும் வளையாத செங்கோலும்
பண்ணிசைத்தும் பாவாணர் பசித்தே கிடந்திருப்பார்

இல்லையெனில்

போகாத போருக்குப் போரெடுத்தான்; போர்க்களத்தே
வேகாத பிணந்தின்ன விதவிதமாய்ப் ஸ்ரீதவகை
வந்து பசியாறி வாழ்த்தியதாய்ப் பொய்பூசி
சிந்துக் கவிவரிசை சிந்திடுவார்

அல்லாது,

அத்தாணி மண்டபத்தே அமர்ந்து நெளிவெடுத்துச்
சித்தம் மயக்கிச் சிலம்பாடும் புலவர்பிரான்
வழிமேல் விழிவைப்பார்; வாய்த்தபெரும் பதவியினை
அழவைத்துப் பிடுங்குதற்கு ஆரோ ஒருபுலவன்
அம்பாரி வைத்து அதிர முரசடித்து
அரிகண்டம் கேட்டுவிட்டால் அவ்வளவே!

இன்னுளோ,

ஆஸ்தானமில்லை, அரசன் கொலுவில்லை;
ஆஸ்தானக் கவியரசை அண்டி அரங்கேறி
யமகம் திரிபென்று அரிகண்டம் கேட்கவல்ல
ஆசுகவி யாருமில்லை.

அடியெடுக்க, முடிபோட, ஆப்படித்த புதிர் அவிழ்க்க,
சந்தக் கவிபாடிச் சமரசங்கள் பண்ணிவைக்க,
சாத்தும் கதவிடிக்கும் சங்கடங்கள் ஒன்றுமில்லை.

ஏனெனிலோ,

எல்லாரும் இந்நாட்டு ஏந்தல்களாய் முடிசூடி
இன்பத் திருநாட்டின் இளவரச ராகி விட்டோம்.
நாடெல்லாம் நம்முடைய ஆஸ்தானம்; நமதுபெரு
வீடெல்லாம் அரண்மனைகள்; வினைவெல்லாம் நல்லறங்கள்.
எண்ணமெலாம் செயல்திறனாய் எக்களிக்கப் பாப்புனைந்து
எங்கள் கவிக் கோமான் எழுத்தாணி தான்பிடித்தான்
ஆஸ்தான மாகவிஞன் அவன்எங்கள் பாரதிகாண்

அவன் வந்த பாதையிலே,
அலகிட்டு நடைபயிலும் ஆர்வத்தால் இன்னாளில்
முன்னரி எழுந்து வந்த மூதறிஞன் மிக நல்லன்

அன்னை திரு நாட்டினுக்காய் அவன்பட்ட பாடெல்லாம்
அரும்பாட லாயிற்றால்

நாமக்கல் கவியரசை நாமின்று வாழ்த்துகிறோம்
நம்மை நாம் போற்றுகிறோம்.

[ஆஸ்தானக் கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு கரூரில், அன்னாள் முதலமைச்சர் குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொற்கிழியளிப்பு விழாவிற் பாடியது.]

6

மூலப்பிரதி

முன்பொரு பாடல் எழுதினேன்—அந்த
மூலப் பிரதி கைவச மில்லை

—முன்பொரு

எழுதிய பாடல் ஒன்றினை வீட்டின்
எரவா ணத்தில் செருகி யிருந்தேன்
பழுது வந்தது பார்த்தி ருந்தவர்
பாடலை எடுத்துப் பதுக்கிக் கொண்டார்

—முன்பொரு

இன்ப மென்றெரு தலைப்பிட் டந்த
இனிய பாடலை எழுதிய நினைவு
துன்பம் வந்து சூழும் போது
துணைசெயக் கூடும் தொலைந்துபோ யிற்று

—முன்பொரு

வாய்மை என்றெரு வாசகம் வைத்து
வண்ணப் பாடலை எழுதிய துண்டு

கலை

பொய்மை இருளில் பொன்விளக் காகும்
பொக்கென மறைந்து போயிற் றென்செய

—முன்பொரு.

வெற்றி என்ற விளக்கம் தந்தொரு
வீரியச் சொல்லை விளம்பிய துண்மை
முற்றும் தோற்று விட்டபோ தெனக்கு
மூளும் நற்றுணை முழுதும் காணும்

—முன்பொரு

இருந்த இடத்தில் இருந்த படிஅவ்
இன்னிசை கேட்டே இருந்தேன் இங்கு
வரும்போ தெனக்கு வழித்துணை யாக
வந்தது இடையில் வழிப்பறி போக

—முன்பொரு.

ஏட்டுப் பிரதியை எடுத்தவர் தந்தால்
இனிய பாடலைக் கற்றவர் சொன்னல்
காட்டில் இருளைக் கடந்திட லாகும்
கருணை செய்தவர் ஆவீர் ஐயா

முன்பொரு பாடல் எழுதினேன் அந்த
மூலப் பிரதி கைவசம் இல்லை.

உணர்வு

1

விறகும் தீயும்

கானில் வெயில்மழை காலம் பலகண்ட
கட்டை இரண்டினை ஏன்கடைந்தாய்?
தேனமுல் சிந்திச் சிரித்தபின் னேயுயிர்த்
தேசில் கனிந்து திளைத்திடத்தான்.

உள்ளம் இரண்டில் உறங்கிக் கிடந்திட்ட
உண்மையை ஏனோ உசுப்பிவிட்டாய்?
கள்ளமில் இன்பம் கனிந்திரு கட்டையும்
காதலில் வெந்து கரிந்திடத்தான்.

2

பக்தியின் பான்மை

கோலமே நின்னுருக் கொண்டொளித் தேசிறு
கூட்டில் அடைத்திடி னும்
காலும் ஒளியெழிற் காட்சியெக் காலுமென்
கண்ணில் மறைப்பதுண் டோ?

குழறித் தருமயல் கூட்டிடுங் கிள்ளையென்
கோட்டை புகாவிடி னும்
பழகு செவிதமிழ்ப் பண்ணின் மழலையுன்
பாடல் மறப்பதுண் டோ?

போதுகு தாதுமிழ் பொங்கிடும் தேனமல்
போந்திவன் தீண்டுமென் றே
தோதெவர் செய்துனைத் தோமிழைத் தாலுமென்
தொந்தம் தவிர்ப்பதுண் டோ ?

பேர்மறப் போம்செய் பிழைபொறுத் தோம்பழம்
பேதைமை தாம்மறுப் போம்
யார்மறைத் தாலுமுள் ளார்ந்து கிடந்திட்ட
ஆர்வம் மரிப்பதுண் டோ ?

தோன்றி மறைந்திடும் தோற்ற மயக்குறு
தொல்லைப் பிறவியெல் லாம்
ஊன்றிய கொள்கை உவந்திருப் போர்தமை
உற்றே தடுப்பவர் யார் ?

3

பரிவு

ஓலை கிறுக்கிய தூக்கினிலே யுளம்
ஓட்டி நடப்பதில்லை.
சாலை தள்ளாடி நடந்திடுங் காற்றெனிற்
சற்றும் உதவியில்லை.

காலைக் கதிர்கணம் காவதம் ஆயிரம்
காண்டிடு மேயெனி னும்
வேலை கடந்துநின் வீதி நுழையுமுன்
மேன்மலை வாய்விழு மே!

நீலம் மெழுகிய வீதியிலே மணி
நித்திலப் பூச்சொரிந் தே
கோல மதிவரும் போதொரு செய்தியைக்
கூட்டி யனுப்பிட லாம்:

ஏலும் இடையொசித் தேநடை நாணி
எழுந்தெழு சாகரத் தின்
பாலொரு தீவிலுன் பால்வரும் போது
பகற்பொழு தாகிடு மே!

வேலையில் வீணரைப் போலலைந் தேவெறும்
வெட்டிப் பொழுதுருட் டி
மேலைக் குகையினில் தூங்கி வழிகிற
மேகதூ தர்எதற் கோ?

எண்ணத் தெழுந்துயிர் ஏக்கத் திழைந்து நல்
இன்பத் தழுந்திநின் றே
பண்ணில் மிதந்திடும் பான்மைகொண் டோமினி
பற்றிப் பிரிவதுண் டோ?

4

மூலக் கருத்து

மூலக் கருத்தின் மோனச் சிறையுள்
முடமாய்க் கிடந்தேனைக்
கோலச் சுடரிற் கோணமெலாம் ஏன் ?
கொண்டு திரிய விட்டாய் ?

காலம் அறியாக் கனவினிலே நின்
கற்பனை விந்தையிலே
ஏலத்தே யெனை எண்ணில் பிறவிக்(கு)
ஏனோ விற்றனையால் ?

ஆக்கி அளித்துயிர் அழிப்பாய் உனக்கோ
அலகில் விளையாட்டாம்
நோக்கமிலாய்அருள் நோக்குடையாய் யாம்
நோவதுன் விளையாட்டே

நீண்ட வழியும் நெடுமூச் சொன்றும்
நின்று எரியும் சுடரும்
ஈண்டுன தருளே என்கின்றார் அதற்(கு)
என்னே பொருள் ஐயா ?

5

கடை திறப்பு

ஆழி இறைவர்க்கே யாட்பட்டி யாம்பல்கால்
பாழிற் பிறவி படிந்து துறைபுகுந்து
ஊழிக் கடைநாளின் ஓங்குமணி வாயிலிலே
வாழி யிவணடைந்தேன் வாயிலோய் தாள்திறவாய்.

தூங்காமற் பாம்பணையிற் ருேய்ந்து துவண்டயர்ந்தே
ஏங்கும் எனைக்காண்பான் என்றே வழிகடந்தேன்
தாங்கி முழந்தாள் தவமிருக்கும் அண்ணுவோ
ஓங்கு மணிக்கதவம் ஓடிநீ தாள்திறவாய்.

மாவிருந்த மாட மணிமுன்றில் காத்துநிரு
கால்கடுக்கு மென்றே கருணையினு லீதுரைத்தேன்
மாவிருந்த நெஞ்சம் மதர்த்து நடந்தெனிரு
கால்கடுக்கு மன்ருே கருணையினுல் தாள்திறவாய் !

6

மேலீடு

மாலையிலே உச்சி மாமலை மீதொரு
மானிடன் நிற்கின்ற மாயமென்ன?
வேலைசூழ் வையத் திசைமிதித் தேறியவ்
விண்ணிலே வீசி எழுவதற்கே!

கண்ணுக் கடங்காத காட்சி யொருகோடி
காணும லேனிரு கண் குவித்தான்?
கண்களில் ஆயிரம் காலமும் தேக்கிய
காட்சிப் பொருள்நிலை கண்டதனுல்!

தேனிசை மாந்தித் தெவிட்டிய தோசெவி
சேர்ந்து தியங்குவ வேன்குரல் கள்?
வானிசை யுட்செவி வாங்கின ஞலினி
வையக் குரல்செவி வார்ப்பதுண்டோ!

நாற்றிசைச் சோலை நறுமண மேநுகர்
நாசியில் வாசி யடங்கிய தேன் ?
ஊற்றெழுந்(து) ஓமெனும் நன்மணம் கும்பகத்து
துள்ளே கமழ்கின்ற உண்மையினுல்!

உணர்வு

உள்ளத் துடிப்பை உதிர்க்கும் உதடுகள்
ஒட்டி உலர்ந்த உபாயமென்ன?
வெள்ளக் கருணை பொழிந்து நிறைந்திடும்
வேகத்தில் மோனம் விளைந்ததனால்!

தாவி யணைத்தையும் தாங்கி யணைத்திடும்
தன் கரம் கூப்பும் தயவெதுவோ?
ஆவி கலந்துயிர் அத்தனை கோடியின்
ஆகமும் தானே ஆகியதால்!

கண் திறந்தான் அது பார்கரு ணைப்பொழி
கண்கணீர் சோரக் கரைவது மேன்?
விண்ணிலும் மண்ணிலும் வேறுள யாவினும்
வேறன்றித் தான்நிறை விந்தையினால்!

காட்சி யடங்கிக் கருத்தடங்கிச் செவி
காணும் கவிதையும் தான் மடங்கி
ஆட்சிக் கடங்கிய ஆகத் துணர்வுகள்
அத்தனைக்கும் மேல்ஓர் ஆனந்தமே!

7

காரணம்

வானின் மழை வீழும்—தரை
வாடும் பயிர் வாழும்
வானின் மழை வாராவிடில்
வாழும் பயிர் வாடும்.

வாடும் பயிர் வாழ்வும்—உயிர்
வாழும் பயிர் தாழ்வும்
தேடிப் பெயல் எனும் கொள்கையத்
தேஞர் மழைக் கில்லை.

எனினும்

வானின் றருள் பொழியும்—தரை
வாடும் பயிர் வாழும்,

கதிரால் திசை ஒளிரும்—புவி
கண்டே முகம் மலரும்
கதிரே புவி காணு தெனில்
கரையா திருட் கறையே.

உணர்வு

இருள் ஏகிட வென்றோ—ஒளி
இனிதாகிட வென்றோ
வருகின்ற தொர்கொள்கை ஒளி
வளரும் கதிர்க் கில்லை.

எனினும்

கதிரால் திசைஒளிரும்—புவி
கண்டே உயிர் குளிரும்.

உயிர் என்பனும் துயரோ—அருள்
உளதென்ப தோர் உளவோ
பெயுமா மழை வெயில் தாரகை
பிறிதுள்ளவை யெல்லாம்

ஏனென் றெதை யார்கண் டவர்
ஏதே பொருள் தெரிவார்
வானுண்டதன் கீழே—உருள்
வையம் எனல் அல்லால் ?

8

அமைதி

ஏழையின் ஓலைக் குடிலும் மன்னர்
எழுப்பும் அரண்மனையும்
பாழைப் பயிர்செயும் பரமனை எண்ணிப்
பரவும் கோயில்களும்

ஊழெனும் ஒருவன் ஊதிய காற்றில்
உலைந்தவை ஒரு கோடி
ஆழும் பொருள் இதை ஆவா, மனிதர்
அறிந்தும் அடங்காரோ!

மதலை யழுங்குரல் மாதர்தம் விரகம்
மன்னவர் கட்டளைகள்
கதறும் கடலொலி காலக் குரலிசை
காட்டும் கனவுகளும்

எதுவும் எழுந்தவை ஏங்கி யடங்கிய
தெவ்விதம் என்றெண்ணிக்
கதுவும் மோனக் கற்பனையின் பொருள்
கண்டு முயங்காரோ?

9

அதிமானுடர்

உதய தாரகை ஒளிரும் ஓர்வழி
வந்துதித்தனர்; வானவர்
வதிய வேபுவி வருவர் என்றொரு
வாய்மை கூறமுன் வந்தவர்!
துதிகொள் தெய்விக சீர்த்தியே அவர்
தூமுகத் தினில் ஒளிர்தரும்
பதியு மேஇறை அருளும் அன்னவர்
பாண்மிழற் றிடும் குரலிலே!

ஆகம் முற்றிலும் ஆர்ந்தெ ழுந்திடும்
ஆன்ம சோதியின் அழகரோ;
வைக லாள்எனும் விந்தை ஈன்றருள்
மைந்த ராம்கதிர் நோக்கினர்;
ஏக மௌனம் இலங்கு வானுதல்
ஏற்றி யாவும்இ யற்றுவார்
ஏக வேதடை ஏதும் எற்றியிங்
கெதிரிலா வலம் காட்டுவார்!

ஊழெ னும்வலி மாற்றும் மல்லர்கள்;
உட்பு குந்துஒளிர் தேவரின்
ஆழ்க னிப்பொருள் தாங்கு டைந்திடும்
ஆற்றல் காட்டிடும் ஆர்வலர்;

உணர்வு

பாழி ருந்தொரு சேதி கொண்டிவண்
பாய்ந்து வந்திடு தூதுவர்;
தாழ்வி லாதியல் அமரர் வாழ்வினைத்
தாமி யற்றிடும் தாபதர்

ஆம், அவர்அழி வுற்ற யர்ந்திடும்
அற்ப மண்ணிடை யார்ந்தனர்;
ஓம்எ னுங்குரல் ஓங்கி யும்உளம்
தோயும் வெங்கனல் தாங்கியும்,
தாம்எ ழுங்களி பொங்கி யேநிறை
தன்மை யால்இள நலமுடன்.
நாம்இ ருந்திடும் நானி லந்தனை
நாடுவார் நமர் நாடுவோம்!

மானு டர்செவி மாந்தி டாததோர்
மதுர கீதம் மிழற்றுவார்!
ஆன காலம்எ லாம்அ திர்ந்திட
அடிபெ யர்த்திடும் ஓதைகேள்!
போன காலமோர் கான்வி லங்கினிற்
பூத்த மானுடர் போலவே,
வான வர்குலம் ஒன்று நம்மினும்
வந்து திப்பதோர் வாய்மையே!

பரம ஞானியர் குரவராம் அவர்
பண்பி லேமிக இனியராம்;
கரவி லாக்களி பொங்கு பேருளம்
கனிவ ராம்திறல் வல்லராம்,
மருவி லாக்கதிர் வீசு கின்றதோர்
மாட்சி யார்எழில் காட்டுமோர்
தெருவி லேவிளை யாட்ட யர்ந்திடு
தெய்வ மானுடர் தெளிமினோ!

உணர்வு

காதல் வீசுமோர் களிந கைத்திரட்
கடலில் நீந்திடும் காதலர்;
போதம் என்னுமோர் பொன்ன ரங்கினிற்
போந்து நாட்டிய மாடுவோர்;
பாத தூளியிற் பாரெ லாம்பெரும்
பாவ நாசம் அடைந்துமே
வேத சத்திய மேவி ளங்கிட
விந்தை கூட்டுமிவ் வையமே!

பகவான் அரவிந்தரின் "சாவித்ரி" என்ற மகா காவியத்தின் பருவம் 3, காண்டம் 4, மொழிபெயர்ப்பு.

10

ஏக்கம்

நாகபடத் துயர் நச்செழு மாயினும்
நாடி யெழுந்துசுழல்

வேக முடன்னழ கேறி வளைந்து
வளைந்தது விளையாடச்

சோகம் உமிழ்குரல் சோரத் தழுவலில்
சொர்க்க சுகம் வருமோ?

ஏக நிலையுற வேயத னேடுயிர்
ஏங்கும் பொருள் எதுவோ?

11

ஏசுவின் புகழ்

காசினி கால்கள் தோயார்,
கண்ணிணை இமையார், வானப்
பூசனை கொள்ளும் தேவர்ப்
புகழினைப் புவியோர் காணர்.

தரையினிற் கால்கள் தோய்ந்தும்
தயவுடன் நடந்து வந்தும்
விரைந்துயிர்க் குலமே வாழ
விழியிணை இமைத் திருந்தும்

பிறர் பிறர் பாவம் தோளில்
பிறங்கிய சிலுவை தாங்கி
இறப்பெனுங் கடைநாள் புக்கும்
எழுந்தவன் மீண்டு வந்தான்.

தனியொரு சூலில் தெய்வத்
தண்ணளி விளைந்த தாலே
இனியிலை துயரென் றிந்த
இருநிலம் மகிழ்ந்து போற்றும்

அன்னவன் மனுக்குலத்தின்
அண்ணலென் றறிந்து கொண்டோம்
மன்னவன் பிறந்த மாண்பில்
மானிடர் உயர்ந்து விட்டோம்.

காட்சி

காட்சி

1

ஆறுதலையானுள்

பக்குவ மலர்த்தொடை பளிங்குநுரை தூவி
மிக்குவகை யோடுபுனல் மொண்டுவரு பொன்னி
இக்கணம் உமிழ்திரை இழூமெனுமோ ரோதை
தக்கண நறுங்கவிதை யென்றுபுகழ் பாடும்.

வானமுகில் பெற்றதவ வானரசி மேலைச்
சேனமலை காவல்சிக ரத்தினி விருந்து
பானல்விழி பாகுமொழி பாவையுளம் விம்மித்
தானைகரை யூடுருவி தன்னடி பெயர்த்தாள்;

மேலைமலை வந்ததிரு மேதினி விழைந்தாள்;
பாலைமணல் பைம்பழன மாக்கிட நடந்தாள்
வேலைபுகு மோகநடை வேறுபல ஜதியிற்
காலையிள ஒளிகதுவு காரிருள் குடைந்தாள்.

ஆடிபதி னெட்டில்இவள் ஆண்டுநிறை பூப்ப
நாடிவரு காதலில் நயந்துகட ளுதன்
பாடிவரு தண்டையொலி பண்மகிழு கின்ருன்
கூடிமகிழ் கின்றதொரு கொள்கையிது நன்றே!

என்றுதமிழ் எங்கள்மொழி யாகியெமை யீன்று
நன்றுபல ஞானமும் நவின்றமுத ளுளின்
வென்றிதரும் எங்கள் திரு பொன்னிவள நாட்டில்
அன்றுமுதல் ஆண்டருள ஆறுதலை யானுள்.

மங்கல மணைத்திரு மடந்தையர் சிருர்கள்
துங்கமிகும் ஏருழவர் தொண்டர்பல கோடி
சங்கொடு தமிழ்க்கவிதை சாருெடகில் சாந்தம்
எங்கணு மிரைத்துவழி மொய்த்தனர் இறைஞ்சி

பம்பியெழு பாவின மளைந்ததமிழ் பாடிச்
செம்புனல் திளைத்துபல செய்கள்பயிர் ஏற்றி
அம்புவிழி யார்குரவை ஆடவர்க ளோடு
நம்பிவிளை யாட்டயர நாடுதமிழ் ஆறே!

2

அதிசயம்

காலையில் மோட்டுக் கிளையமர்ந் தேயொரு
காகங் கரைந்திடக் கேட்டதுண்டு
சோலைப் பறவைகள் சோர்வகற் றிவெளிச்
சோதியில் நீந்திடச் சென்றதுண்டு.

எட்டுத் திசைவெளி எங்கும் பறந்துணவு
எப்படியோ தேடி எஞ்சியதைக்
கட்டி அணைத்தல கால்சிற காலிரு
கால்விர லாலும் எடுத்துவந்து

பட்டுடல் மேனி படபடக்கும் சிறு
பார்ப்புப் பசியாறப் பக்குவமாய்க்
கொட்டி நிறைக்கின்ற கூரலகா லுடல்
கோதி மகிழ்கின்ற கொள்கையினைக்

கண்டு வியக்கின்ற காட்சியுண்டு பல
கற்பனை வல்லமை கற்றதுண்டு
உண்டறி வென்னும் உபாயமுண்டு கிளர்
உள்ளத் துணர்ச்சியின் ஊற்றுமுண்டு.

செப்படி வித்தைகள் செய்தபின்னும் கோடி
சென்மம் எடுத்துச் சிறந்த பின்னும்
எப்படி வாழ்வதிங் கென்பதே மானுடர்க்கு
இன்னும் விளங்காது அதிசயமே.

காட்சி

3

பொன்னரங்கம்

பொன்னி வலம்சுழித்த பொழிலார் திருவரங்கம்
போந்தே திருமாலும் பொய்யாய்த் துயில்புரிந்தான்
மின்னுநவ ரத்தினமா மேலாடை போர்த்தவனும்
மேன்மைத் தவம்புரிவார் மேல்வைத்த நோக்குடையான்

முத்திக்கு வித்தாவான் முத்தால் உடைபுனைவான்
முன்னே மலர்சூடி மணவாள மாமாலன்
பத்திக்குப் பரமபதம் பார்மீது பொன்னரங்கம்
பார்க்கவொரு வைகுந்தம் பரிவோடு நட்டுவைத்தான்

பழகுதமிழ்ப் பாட்டினிமை பன்னிருவர் ஆழ்வார்கள்
பண்ணீர்மை பொங்கிவரப் பாடிவரும் நீர்க்கரையில்
எழிலார் தடமதில்கள் ஏழால் வனைந்ததொரு
எங்குமிலாப் பொன்கூரை இழையுமணிக் கோபுரமாம்

ஆழ்ந்ததுயில் அறிதுயிலாய் அழகுதுயில் கொண்டிருக்கும்
அரவணையான் பள்ளியறை அதைக்கவிந்த பொன்கூரை
ஆழ்ந்துகுண ரகிதருக்கு ஆளாவீர் என்றழைக்கும்
அந்தமிலாப் பெருவாழ்வாம் அதன்பொருளை அறிவோமோ

காட்சி

4

குமுறுங் கடல்

கோடிக் கரையரு கேயொரு மாமதில்
கொள்ளையென் ஞேர்குரல் கேட்கிறது
மோடி கிறுக்கிய மூர்க்கமு டன்கடல்
மோதித் தகர்க்க முனைந்ததனுல்!

நீலக் கடல்பொங்கி நேரெழுந்தே தெற்கு
நீள்கரை எங்கும் நடக்கிறது ...
சாலப் பலபல சாதனை செய்தவர்
சாதிப்ப தென்ன விருக்கிறது?

ஓதக் கடலலை ஓடிவந் தேகரை
ஓரம் உரப்பி உராய்கிறது;
நாதம் பொழிந்து நடக்கும் சுருதியின்
நாஞெலி இன்று நடுக்குறலேன்?

மேலைக் கடலிலோர் மூலையிலே மறம்
மேவிக் கடுவிடந் தாங்கடைவார்.
நீலம்கழுத்தில் நிறுத்திட வல்லவர்
நீணிலத் தில்லையென் றேநினைத்தார்.

மானிடர் வாழும் உரிமைக் கெதிராக
மண்டலம் ஆள மதர்த்தெழுந்தார்
ஆனத ஞற்கடல் ஆளும் இராசனும்
ஆர்ப்பரித் தேகொதித் திட்டனஞே?

ஆழி கரையின்றி நிற்கும் அதிசயம்
ஆண்டவன் கட்டளை யாகுமன்ஞே!
ஆழி கரைகடந் தேவரு மேலினி
யார்புகல் வாய்புகல் மானிடனே!

காட்சி

5

புத்தாண்டு

வந்து சுழலும் ஆண்டுகளை
வாங்கிப் பிடித்து விளையாடிப்
பிந்தி வீசி எறிந்திட்டுப்
பிறிதோர் ஆண்டு விழைகின்றோம்.

முந்தி எதிர்ந்த முதலாண்டு
மூண்ட பசியால் முன்விழுங்கி
விந்தை உமிழ விசித்தெழுந்து
விரையும் ஆண்டின் விளைவெதுவோ ?

காலக் கணக்குத் தவறாமல்
கழித்துக் கூட்டிப் பெருக்கிவர
ஞாலத் திசையில் புத்தாண்டு
நடந்து வந்து முன்னிற்கும்

நடந்து நம்முன் வருவதுவோ
நாமே யதன்பால் நடப்போமோ!
கடந்து செல்லும் காலமெனும்
கணக்கின் விடையைக் காண்போமோ!

மனித மனத்தின் கரையோரம்
மடங்கி வீழும் அலைகளெனும்
நினைவில் விளைந்த நெடுமூச்சே
நிமிரும் காலம் என்கின்ற

கனவிற் பட்டுச் சிதறுவதாம்
கணங் கணமாகத் திரைப்பதுவாம்.
எனவே புத்தாண் டேதெனினும்
இன்ப உயிரின் ஏற்றமடா!

வாசகர்க்கு

புத்தொளியில் முகிழ்கின்ற
போதத்தில் எம்முடைய

சித்த மிசைக்கொண்ட
சிரத்தையினில் இதுகாறும்

தினவெடுத்த நெஞ்சத்துத்
தித்திப்பில் இன்பத்துப்

புனலாடி வந்த உயிர்ப்
புல்லரிப்பில் சித்திரமாய்

வட்டாடி நிற்குமொரு
வாய்மையினை வார்த்தெடுத்த

மட்டில்லா இன்பத்து
மாட்சியினை மலர்ச்சரமாய்

பேர்வைத்து உம்முடைய
பேரிதயம் பூமணக்க

நேருரைக்கும் நெஞ்சத்து
நீர்மையிது உம்முடைய

மும்மைக்கும் எண்ணி
முக்குளித்து யாங்கொணர்ந்தோம்

உம்மைத்தான் இன்னமும்யாம்
உணரகிலோம் இம்மலர்தான்

எத்திறத்தில் உம்மையிது
ஈர்த்தாலும் சுடர்விடுக்கும்

நித்திலங்கள் இவையெல்லாம்
நின்றே நிலைப்பனவால்.